அரசு மைய அச்சகம், சென்னை-600 001.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகள்

இந்திய அரசமைப்புச் சட்டத்தின்
பிரிவு 208 (1)-ன்படி இயற்றப்பெற்றது

(23-08-2021 வரை திருத்தப்பெற்றவை)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை - 600 009.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகள்

*இந்திய அரசமைப்புச் சட்டத்தின்*
*பிரிவு 208 (1)-ன்படி இயற்றப்பெற்றது*

**(23-08-2021 வரை திருத்தப்பெற்றவை)**

## முன்னுரை

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகள் குழுவினால் பேரவை விதிகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு அறிக்கைகள் பேரவைக்கு அளிக்கப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் *23-08-2021* ஆம் நாளன்றுவரையில் பேரவை விதிகளில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் அனைத்தும் இப்பதிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

சென்னை-*600 009*,
நாள் : *10.11.2021.*

**முனைவர் கி. சீனிவாசன்**
செயலாளர்,
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பொருளடக்கம்


| விதி எண் | | பக்கங்கள் |
|---|---|---|

### அத்தியாயம் 1

### குறுந்தலைப்பும் சொற்களின் விளக்கமும்

| | | |
|---|---|---|
| 1 | குறுந்தலைப்பு | 1 |
| 2 | சொற்களின் விளக்கம் | 1-5 |

### அத்தியாயம் 2

### பேரவையைக் கூட்டுதல், உறுப்பினர் பதிவேடு பிரமாணம் அல்லது உறுதிமொழி மற்றும் உறுப்பினர் அமரும் முறை

| | | |
|---|---|---|
| 3 | பேரவையைக் கூட்டுதல் | 6 |
| 4 | பிரமாணம் அல்லது உறுதிமொழி | 6 |
| 5 | உறுப்பினர் பதிவேடு | 7 |
| 6 | உறுப்பினர் அமரும் முறை | 7 |

### அத்தியாயம் 3

### பேரவைத் தலைவர், துணைத் தலைவர் தேர்தலும், மாற்றுத் தலைவர்களின் நியமனப் பட்டியலும்

| | | |
|---|---|---|
| 7 | பேரவைத் தலைவர் தேர்தல் | 8-9 |
| 8 | பேரவைத் துணைத் தலைவர் தேர்தல் | 8-10 |

### மாற்றுத் தலைவர்கள்

| | | |
|---|---|---|
| 9 | மாற்றுத் தலைவர்கள் பட்டியல் | 10 |
| 10 | தலைமை வகிப்பவரின் அதிகாரங்கள் | 10 |

### அத்தியாயம் 4

### ஆளுநர் உரை

| | | |
|---|---|---|
| 11 | ஆளுநர் உரை | 11 |
| 12 | ஆளுநர் உரை மீது விவாதம் | 11 |

**அத்தியாயம் 4**—தொடர்ச்சி

**ஆளுநர் உரை**—தொடர்ச்சி


13 உரை விவாதத்திற்கு முன்பு எடுத்துக் கொள்ளப்பெறும் மற்ற அலுவல்கள் 11

14 ஆளுநர் உரை மீதான விவாத விதிகள் 12

15 ஆளுநரின் மறுமொழி 12

16 நேரம் ஒதுக்கீடு செய்தல் 12

17 ஆளுநர் உரையின் போது அவையின் ஒழுங்கைக்காத்தல் 12

பேரவையின் கூட்டத்தொடரை இறுதி செய்தல்

18 கூட்டத் தொடரை இறுதி செய்தல் 13


**அத்தியாயம் 5**

**வராமைக்கான அனுமதி வழங்குதல், பதவி விலகுதல், பேரவையில் இடங்கள் காலியாதல்**


19 வருகைப் பதிவேடு 14

20 வராமைக்கான அனுமதியும் பதவிகள் காலியாதலும் 14

21 பேரவையினின்று பதவி விலகுதல் 14-15

22 பதவி விலகலை ஏற்றுக்கொள்ளுதல் 15

23 பதவி விலகலை பேரவைக்கு அறிவித்தல் 15

24 பதவி விலகல் குறித்து பேரவைத் தலைவரின் விசாரணை 15


**அத்தியாயம் 6**

**பேரவைக் கூட்டங்களும் அலுவல்கள் அமைப்பு முறையும்**


25 கூட்டங்களை ஒத்திவைத்தல் 16

26 கூட்ட நாளில் மாற்றம் 16






**அத்தியாயம் 6**—தொடர்ச்சி

**பேரவைக் கூட்டங்களும் அலுவல்கள் அமைப்பு முறையும்—தொடர்ச்சி**


27 குறைவெண் 16

28 குறைவெண் இன்மையால் ஒத்திவைத்தல் 17

29 பேரவை பொதுவாகக் கூடும் நேரம் 17

30 அலுவல் பட்டியலும் பேரவையில் வைக்கப்பெறும் ஏடுகளும் 17-18

31 பேரவையில் விவாதம் 18

32 வினா நேரம் 18

33 தனி உறுப்பினர் அலுவலுக்கு நேரம் ஒதுக்குதலும் முதலிடம் அளித்தலும் 18-19

34 அரசு அலுவல் வரிசை முறை 19

35 தனி உறுப்பினர் அலுவல் வரிசை முறை 19-21

36 பேரவைக்கு முன்னறிவிப்பு 21-22

37 உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெறும் கடிதங்களும் முன் அறிவிப்புகளும் 22


**அத்தியாயம் 7**

**வினாக்கள்**


38 வினாக்களின் பொருள் 23

39 உடுக்குறியிட்ட மற்றும் உடுக்குறியிடாத வினாக்கள் 23

40 வினா உடுக்குறியிட்டதா, இடாததா என்பதை பேரவைத் தலைவர் முடிவு செய்தல் 23

41 வினாவிற்குரிய பொருள் 23

42 வினாக்களின் வடிவமைப்பு மற்றும் பொருள் அடக்கம் 23-25

43 ஒரே பொருள் பற்றிய வினாக்கள் 25

**அத்தியாயம் 7**—*தொடர்ச்சி.*

**வினாக்கள்**—*தொடர்ச்சி.*


| | | |
|---|---|---|
| 44 | வினாக்கள் அனுமதிப்பது பற்றி பேரவைத் தலைவர் முடிவு செய்தல் | 26 |
| 45 | வினாப் பட்டியல் | 26 |
| 46 | உடுக்குறியிட்ட வினாக்களை எடுத்துக்கொள்ளும் வரிசை முறை | 26-27 |
| 47 | நீண்ட அறிக்கைகள் அல்லது புள்ளி விவரங்கள் கோரும் வினாக்கள் | 27 |
| 48 | வினாக்கள் வினவும் முறை | 27 |
| 49 | துணை வினாக்களும் அவைகளை அனுமதித்தலும் | 27-28 |
| 50 | வினா, துணை வினாவிற்கு விடையளிக்க மறுத்தல் | 28 |
| 51 | ஒரு கூட்டத் தொடர் அல்லது கூட்ட இறுதியில் நிலுவையில் உள்ள வினாக்கள் | 28 |
| 52 | குறுகிய கால வினாக்கள் | 28-29 |
| 53 | வினா நேரத்தில் விவாதக் கட்டுப்பாடு | 29 |
| 54 | அரைமணி நேர விவாதம் | 30 |


**அத்தியாயம் 8**

**அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள்கள் மீது கவன ஈர்ப்பு**


| | | |
|---|---|---|
| 55 | அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள்கள் மீது கவன ஈர்ப்பு | 31-32 |


**அத்தியாயம் 9**

**பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து விவாதிக்க ஒத்திவைப்புத் தீர்மானம்**


| | | |
|---|---|---|
| 56 | ஒத்திவைப்புத் தீர்மானம் | 33 |
| 57 | பேரவையின் அனுமதி கேட்க பேரவைத் தலைவரின் இசைவு | 33 |






**அத்தியாயம் 9**—*தொடர்ச்சி.*

**பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து விவாதிக்க ஒத்திவைப்புத் தீர்மானம்**—*தொடர்ச்சி.*


| | | |
|---|---|---|
| 58 | இசைவு மறுக்கும் அதிகாரமும் மறுப்பு பற்றி உறுப்பினர்களுக்கு தெரிவித்தலும் | 33 |
| 59 | தீர்மானத்தை அனுமதிப்பது பற்றி பேரவைத் தலைவர் முடிவு செய்தல் | 33-34 |
| 60 | தீர்மானத்தைத் தள்ளுபடி செய்ததற்கான காரணத்தைக் கூறுதல் | 34 |
| 61 | பேரவையின் அனுமதியைக் கோர வேண்டிய நேரம் | 34 |
| 62 | பேரவையின் அனுமதியைக் கேட்பதற்கான முறை | 34-35 |
| 63 | தீர்மானத்தை எடுத்துக்கொள்ளும் நேரம் | 35 |
| 64 | தீர்மானங்களைத் திரும்பக் கொண்டு வருதல் | 35 |
| 65 | தீர்மானம் கொண்டுவருவதற்கான வரையறைகள் | 35-36 |
| 66 | விசாரணைக் குழு, ஆணைக் குழு போன்றவைகளின் முன்னுள்ள பொருள்கள் குறித்து விவாதம் எழுப்பும் தீர்மானம் | 36 |
| 67 | விவாதம் முடிவுற வேண்டிய நேரம் | 36 |


**அத்தியாயம் 10**

**பேரவைத் தலைவர் அல்லது துணைத் தலைவரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கான தனித் தீர்மானம்**


| | | |
|---|---|---|
| 68 | பேரவைத் தலைவர் அல்லது துணைத் தலைவரை பதவியிலிருந்து நீக்குவதற்கான தீர்மானம் | 37 |
| 69 | விவாத நேரம் | 37 |
| 70 | பேரவையின் அனுமதி | 37-38 |

**அத்தியாயம் 10**—தொடர்ச்சி

**பேரவைத் தலைவர் அல்லது துணைத் தலைவரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கான தனித் தீர்மானம்**—தொடர்ச்சி


71 69 மற்றும் 70 ஆகிய விதிகளுக்கு உட்படாததற்குச் சிறப்பு விதி 38


**அத்தியாயம் 11**

**அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், பதவி விலகிய அமைச்சரின் விளக்கம்**


72 அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம் 39

73 அமைச்சர் பதவியிலிருந்து விலகிய உறுப்பினரின் விளக்கம் 39-40


**அத்தியாயம் 12**

நிர்வாகம் பற்றிய அவசரப் பொருள்கள் குறித்து ஒரு மணி நேரத்திற்கு மேற்படாத குறுகிய கால விவாதம்


74 விவாதம் எழுப்புவதற்கான முன்னறிவிப்பு 41

75 அனுமதியைப் பேரவைத் தலைவர் தீர்மானித்தல் 41

76 அனுமதிப்பதற்கான வரையறைகள் 41-42

77 உரையாற்றுவதற்குக் கால வரம்பு 42


**அத்தியாயம் 13**

**நாள் குறிப்பிடப்பெறாத தீர்மானங்கள்**


78 பொது நலன் குறித்த பொருள் பற்றிய விவாதம் 43

79 தீர்மானத்திற்கான முன்னறிவிப்பு 43

80 தீர்மானத்தை அனுமதிப்பதற்கான வரையறைகள் 43-44

81 தீர்மானத்தை அனுமதிப்பது பற்றி பேரவைத் தலைவர் முடிவு செய்தல் 44

82 விசாரணைக் குழு, ஆணைக் குழு போன்றவைகளின் முன்னுள்ள பொருள்கள் குறித்து விவாதம் எழுப்பும் தீர்மானம் 44






**அத்தியாயம் 13**—தொடர்ச்சி

**நாள் குறிப்பிடப்பெறாத தீர்மானங்கள்**—தொடர்ச்சி


83 நாள் குறிப்பிடப் பெறாத தீர்மானங்களைச் சுற்றனுப்புதல் 44

84 தீர்மானங்கள் மீதான விவாதமும் நேரம் ஒதுக்குதலும் 44

85 குறிப்பிட்ட கால முடிவில் பேரவைத் தலைவர் வாக்கெடுப்புக்கு விடுதல் 45


**அத்தியாயம் 14**

**பொது நடைமுறை விதிகள்**


86 பேரவையின் அலுவல் மொழி 46

87 பேரவையில் இருக்கும்போது உறுப்பினர்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிகள் 46-47

88 உறுப்பினர்கள் எழுந்து நின்று உரையாற்ற வேண்டும் 47

89 விவாதத்தில் உள்ள பொருள் பற்றி விளக்கங்கள் கோருதல் 47

90 விவாத வரம்புகள் 47

91 அறிக்கையின் மொழி தன்னடக்கமுள்ளதாய் இருத்தல் வேண்டும் 47-48

92 உரையாற்றுகையில் உறுப்பினர்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிகள் 48-49

93 ஓர் உறுப்பினர் அல்லது அதிகாரி மீதான தனிப்பட்ட குற்றச்சாட்டு 49

94 உறுப்பினர் ஒருவர் வேறோர் உறுப்பினரிடம் கேட்கும் வினா பேரவைத் தலைவர் மூலமாகவே கேட்கப்பெற வேண்டும் 49

95 தீர்மானங்கள் 49

**அத்தியாயம் 14**—தொடர்ச்சி

***பொது நடைமுறை விதிகள்***—தொடர்ச்சி


| | | |
|---|---|---|
| 96 | தீர்மானங்கள் வெளியிடுதல் | 50 |
| 97 | தீர்மானங்களை வழிமொழிதல் | 50 |
| 98 | உரையாற்றும் வரிசை முறை | 50 |
| 99 | வாக்கெடுப்பு முறை | 50-52 |
| 100 | தீர்மானங்களின் வரையறைகள் | 52-53 |
| 101 | தீர்மானங்களைத் திரும்பப் பெறுதல் | 53 |
| 102 | மறு உரையும் பதிலுரையும் ஆற்றும் உரிமை | 53 |
| 103 | பதிலளிக்கும் உரிமை | 53-54 |
| 104 | திருத்தங்கள் பற்றிய விதிகள் | 54-55 |
| 105 | விவாதிப்பதற்கான திருத்தங்களைத் தேர்ந்தெடுத்தல் | 55-56 |
| 106 | விவாதத்தை முடிவுக்குக் கொண்டுவருதல் | 56 |
| 107 | ஒத்திவைப்பு | 56-57 |
| 108 | உரையாற்றும் நேரம் | 57 |
| 109 | தன்னிலை விளக்கம் | 57 |
| 110 | அமைச்சரின் அறிக்கை | 57 |
| 111 | அமைச்சரின் திருத்த அறிக்கை | 58 |
| 112 | அமைச்சரின் திருத்த அறிக்கையின் முன் பிரதிகள் மற்றும் அறிக்கை அளித்தபின் மேற்கொள்ளும் நடைமுறை | 58 |
| 113 | அமைச்சரால் அல்லது உறுப்பினரால் அளிக்கப் பெற்ற அறிக்கையிலுள்ள தவறு அல்லது பிழையைச் சுட்டிக் காட்டுவதற்கான நடைமுறை | 59 |
| 114 | மேற்கோளாகக் காட்டப்பெறும் ஏடுகளை பேரவை முன் வைத்தல் | 60 |






**அத்தியாயம் 14**—தொடர்ச்சி

***பொது நடைமுறை விதிகள்***—தொடர்ச்சி


| | | |
|---|---|---|
| 115 | கருத்து அல்லது அறிவுரை அடங்கிய ஆவணத்தைப் பேரவைமுன் வைத்தல் | 60 |
| 116 | ஒழுங்கு பிரச்சினைகளும் அதன் மீதான முடிவுகளும் | 60-61 |
| 117 | ஒழுங்கு காத்தல் | 62 |
| 118 | கூறியது கூறல் அல்லது பொருத்தமற்றதைக் கூறல் | 62 |
| 119 | நடவடிக்கை குறிப்பிலிருந்து சொற்களை நீக்குதல் | 62 |
| 120 | உறுப்பினரை வெளியேறும்படி ஆணையிடல் | 62-63 |
| 121 | உறுப்பினரின் பெயரிட்டுக் குறிப்பிடுதல் | 63 |
| 122 | கூட்டத்தை நிறுத்திவைத்தல் | 63 |


**அத்தியாயம் 15**

***சட்டமியற்றல்***


| | | |
|---|---|---|
| 123 | அறிமுகம் செய்வதற்கான முன்னறிவிப்பு | 64 |
| 124 | சார்ந்துள்ள சட்ட முன்வடிவுகள் | 64 |
| 125 | ஒருமித்த (identical) சட்ட முன்வடிவுகள் | 65 |
| 126 | சட்ட முன்வடிவுகளில் நிதி விளக்கக் குறிப்பும் நிதிப் பிரிவுகளும் | 65 |
| 127 | சட்டமியற்றும் அதிகார ஒப்படைவு வழங்கியுள்ள சட்ட முன்வடிவுகளுக்கு விளக்கக் குறிப்புகள் | 65 |
| 128 | சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்ய பரிந்துரை அல்லது முன் இசைவு | 66 |
| 129 | அறிமுகப்படுத்த அனுமதி கோரும் தீர்மானம் | 66 |
| 130 | வெளியிடுதல் | 66 |
| 131 | சட்ட முன்வடிவுகள் பற்றிய தீர்மானங்கள் கொண்டு வருவோர் | 67 |

விதி எண் பக்கங்கள்

**அத்தியாயம் 15**—தொடர்ச்சி

***சட்டமியற்றல்***—தொடர்ச்சி


132 அறிமுகத்திற்கு பின்வரும் தீர்மானம் 67-68

133 கருத்தறிந்த பின்வரும் தீர்மானங்கள் 68

134 திருத்தங்கள் 68

135 திருத்தங்களுக்கான முன் அறிவிப்பு 68

136 திருத்தங்களின் வரிசை முறை 69

137 சட்ட முன்வடிவுகளைப் பிரிவு வாரியாக எடுத்துக்கொள்ளுதல் 69

138 பிரிவுகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டிய வரிசை முறை 69

139 சட்ட முன்வடிவுகளை நிறைவேற்றுதல் 69-70

140 விவாதத்திற்கான வரம்பு 70

141 சட்ட முன்வடிவுகளின் உறுதியாக்கம் (Authentication) 70-71

142 தெளிவாக தெரிகிற பிழைகளைத் திருத்துதல் 71

143 ஆளுநரால் திருப்பியனுப்பப்பெற்ற சட்ட முன்வடிவுகளின் மறு ஆய்வு 71

144 ஆய்வுக் குழுவின் அமைப்பு 71-72

145 ஆய்வுக் குழுவில் இடம் பெறுவோரின் முன் இசைவு 72

146 ஆய்வுக் குழுவின் தலைவர் 72-73

147 ஆய்வுக் குழு கூடும் இடம் 73

148 குழுவின் கூட்டங்கள் 73

149 உட் குழுக்கள் 74

150 ஆய்வுக் குழு சாட்சியம் அல்லது சான்று பெறும் அதிகாரம் 74




விதி எண் பக்கங்கள்

**அத்தியாயம் 15**—தொடர்ச்சி

***சட்டமியற்றல்***—தொடர்ச்சி


151 குழுவில் வாக்கெடுப்பு 75

152 தலைவரின் கூடுதல் வாக்கு 75

153 குழுக் கூட்டங்களில் வெளியார்கள் 75

154 ஆய்வுக் குழுவின் நடைமுறை 75

155 திருத்தங்கள் செய்ய ஆய்வுக் குழுவின் அதிகார வரம்பு 75

156 ஆய்வுக் குழுவின் அறிக்கை 76

157 அறிக்கைகள் அச்சிடுதலும் வெளியிடுதலும் 77

158 பேரவைக் கூட்டம் நடைபெறாதபோது குழுவின் அறிக்கையை அச்சிட்டு வெளியிடுதலும் சுற்றறிக்கையாக அனுப்புதலும் 77

159 பேரவைச் செயலாளர் ஒவ்வொரு குழுவிற்கும் செயலாளராக இருப்பார் 77

160 குழுத் தலைவருக்கு பேரவைத் தலைவரின் கட்டளைகள் 77

161 அறிக்கை அளிக்கப்பெற்றபின் நடைமுறை 77-78

162 ஆய்வுக் குழுவின் அறிக்கையின் மீதான விவாத வரம்பு 78

163 சட்ட முன்வடிவைத் திரும்பப் பெறல் 79

164 முன்னறிவிப்பைத் தவிர்க்க பேரவைத் தலைவரின் அதிகாரங்கள் 79


**அத்தியாயம் 16**

**ஆளுநரின் இடைக்கால அவசரச் சட்டங்கள்**


165 இடைக்கால அவசரச் சட்டங்களின் பிரதிகளை அவை முன் வைத்தல் 80

**அத்தியாயம் 16**—தொடர்ச்சி

**ஆளுநரின் இடைக்கால அவசரச் சட்டங்கள்**—தொடர்ச்சி


166 இடைக்கால அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானம் 80

167 இடைக்கால அவசரச் சட்டத்தை பிறப்பிப்பதற்கான காரணங்களை விளக்கும் அறிக்கை 80

168 இடைக்கால அவசரச் சட்டத்திற்குப் பதிலாக சட்ட முன் வடிவைக் கொண்டுவருதல் 80


**அத்தியாயம் 17**

**அரசமைப்புச் சட்டத் திருத்தங்களை உறுதியாக்குதல்**


169 அரசமைப்புச் சட்ட திருத்தங்களை உறுதியாக்குதல் 81

170 அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின் மீது விவாதம் 81

171 பாராளுமன்றத்திற்கு அனுப்பவேண்டிய செய்தி 81


**அத்தியாயம் 18**

**தனித் தீர்மானங்கள்**


172 தனித் தீர்மானங்களுக்கான முன்னறிவிப்புகள் 82

173 தனித் தீர்மானத்திற்கான வரையறைகள் 82-83

174 தீர்மானங்களின் வடிவம் 83

175 தனித் தீர்மானங்கள் அனுமதிப்பதைப் பேரவைத் தலைவர் முடிவு செய்தல் 83

176 தனித் தீர்மானத்தைக் கொண்டு வருதலும் திரும்பப் பெறுதலும் 83

177 திருத்தங்கள் 84

178 திருத்தங்களுக்கான முன்னறிவிப்பு 84






**அத்தியாயம் 18**—தொடர்ச்சி

**தனித் தீர்மானங்கள்**—தொடர்ச்சி


179 தனித் தீர்மானங்களைப் பிரித்தல் 84

180 பிரதியை அரசுக்கு அனுப்புதல் 84


**அத்தியாயம் 19**

**நிதி அலுவல்**


181 வரவு-செலவுத் திட்டம் அளித்தல் 85

182 மானியக் கோரிக்கைகள் 85

183 வரவு-செலவுத் திட்டத்தின் மீது விவாதம் 86

184 விவாதத்திற்கு நேரம் ஒதுக்குதல் 86

185 மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு 87

186 வரவு-செலவுத் திட்டத்தின் மீது தீர்மானங்கள், வெட்டுத் தீர்மானங்களுக்கான வரையறைகள் 87-89

187 கூடுதல் நிதிக்கான மானியக் கோரிக்கைகள் 89

188 நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவுகள் 90

189 துணை மானியக் கோரிக்கைகள் அல்லது அதிகப்படியான செலவிற்கான மானியக் கோரிக்கை 90

190 துணை மானியக் கோரிக்கை அல்லது கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் குறித்த நடைமுறை 90

191 துணை மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவின் மீதான விவாதம் 91

192 மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை 91

193 கணக்கில் முன் பணம், அவசர முன்பணம் சிறப்புத் தொகைகள் 91

## அத்தியாயம்—20

### பேரவையின் குழுக்கள்

### 1. மதிப்பீட்டுக் குழு


194 மதிப்பீட்டுக் குழு மற்றும் அதன் பணிகள் 92

195 குழுவின் அமைப்பு 92-93

196 குழுத் தலைவர் 93

197 குறைவெண் 93

198 உட்குழுக்கள் 93

199 குழுவின் அறிக்கைகள் 93

200 மதிப்பீடுகளை ஆய்தல் 93

201 மாற்றுக் கருத்துக் குறிப்பு 94

202 குழுவின் நடைமுறைகள் 94


### 2. பொதுக் கணக்குக் குழு


203 பொதுக் கணக்குக் குழு மற்றும் அதன் அமைப்பு 94

204 குழுவின் தலைவர் 94-95

205 குறைவெண் 95

206 உட்குழுக்கள் 95

207 குழுவின் பணிகள் 95-96

208 பேரவைக்கு அறிக்கையை அளிப்பதற்கு முன்னர் அரசுக்கு அளித்தல் 96

209 மாற்றுக் கருத்துக் குறிப்பு 97

210 குழுவின் நடைமுறைகள் 97


### 3. பொது நிறுவனங்கள் குழு


211 பொது நிறுவனங்கள் குழு மற்றும் அதன் அமைப்பு 97






## அத்தியாயம் 20—தொடர்ச்சி

### பேரவையின் குழுக்கள்—தொடர்ச்சி

### 3. பொது நிறுவனங்கள் குழுதொடர்ச்சி


212 புதிய பொது நிறுவனங்கள் அமைத்தல் குறித்த தகவல் பேரவைக்கு/பேரவைத் தலைவருக்குத் தெரிவித்தல் 97-98

213 குழுத் தலைவர் 98

214 குறைவெண் 98

215 உட்குழுக்கள் 98

216 குழுவின் பணிகள் 98-99

217 குழுவின் அறிக்கை 99

218 குழுவின் நடைமுறை 99


### 4. அவை உரிமைக் குழு


219 பிரச்சினையை எழுப்புவதற்கு பேரவைத் தலைவரின் முன் இசைவு. 99

220 பிரச்சினை பற்றி முன்னறிவிப்பு 99-100

221 பிரச்சினையை எழுப்ப வேண்டிய நேரம் 100

222 அனுமதி பெறுவதற்கான நிபந்தனைகள் 100

223 இசைவளித்தபின் பிரச்சினையை எழுப்புதல் 100-101

224 இசைவு மறுத்தல் 101

225 தீர்மானம் 101

226 பிரச்சினையை உரிமைக் குழுவிற்குப் பேரவைத் தலைவரே அனுப்புதல் 101

227 குழுவின் அமைப்பு 101-102

228 உறுப்பினர்களின் தகுதியின்மை 102

229 அறிக்கை அளித்தபின் நடைமுறை 102-103

230 குழு பின்பற்றவேண்டிய நடைமுறை 103

**அத்தியாயம் 20**—தொடர்ச்சி

**பேரவையின் குழுக்கள்**—தொடர்ச்சி

### *5. அலுவல் ஆய்வுக் குழு*


| | | |
|---|---|---|
| 231 | குழுவின் அமைப்பு | 103-104 |
| 232 | குறைவெண் | 104 |
| 233 | குழுவின் பணிகள் | 104 |
| 234 | பேரவைக்கு அறிக்கை அளித்தல் | 104 |
| 235 | பின்பற்றப் பெற வேண்டிய நடைமுறை | 104 |
| 236 | குறித்த நேரத்தில் அலுவல்களை முடிவுறச் செய்தல் | 105 |
| 237 | கால அட்டவணையில் மாற்றம் | 105 |


### *6. ஒப்படைவு அதிகாரத்தின் கீழ் இயற்றப்பெறும் சட்டவிதிகள் ஆய்வுக் குழு*


| | | |
|---|---|---|
| 238 | சட்ட விதிகள் ஆய்வுக் குழு மற்றும் அதன் பணிகள் | 105 |
| 239 | குழுவின் அமைப்பு | 105 |
| 240 | குழுத் தலைவர் | 105 |
| 241 | குறைவெண் | 106 |
| 242 | உட்குழுக்கள் | 106 |
| 243 | பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகளை ஆய்வு செய்தல் | 106-107 |
| 244 | குழுவின் அறிக்கை | 107 |
| 245 | மாற்றுக் கருத்துக் குறிப்பு | 107 |
| 246 | குழு பின்பற்ற வேண்டிய நடைமுறை | 107 |


### *7. அரசு உறுதிமொழிக் குழு*


| | | |
|---|---|---|
| 247 | குழுவின் பணிகள் | 107 |
| 248 | குழுவின் அமைப்பு | 107-108 |






**அத்தியாயம் 20**—தொடர்ச்சி

**பேரவையின் குழுக்கள்**—தொடர்ச்சி

***7. அரசு உறுதிமொழிக் குழு***—தொடர்ச்சி


| | | |
|---|---|---|
| 249 | குழுவின் தலைவர் | 108 |
| 250 | குறைவெண் | 108 |
| 251 | குழுவின் அறிக்கை | 108 |
| 252 | குழு பின்பற்ற வேண்டிய நடைமுறை | 108 |


### *8. அவைக் குழு*


| | | |
|---|---|---|
| 253 | குழுவின் அமைப்பும் பணிகளும் | 108-109 |
| 254 | குழு கூட்டம் | 109 |


### *9. பேரவை விதிகள் குழு*


| | | |
|---|---|---|
| 255 | பேரவை விதிகள் குழுவும் அதன் பணிகளும் | 109 |
| 256 | குழுவின் அமைப்பு | 109-110 |
| 257 | குறைவெண் | 110 |
| 258 | விதிகளைத் திருத்துவதற்கான முன்னறிவிப்பு | 110 |
| 259 | அறிக்கையை அவை முன் வைத்தல் | 110-111 |
| 260 | குழு பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் | 111 |


### *10. மனுக்கள் குழு*


| | | |
|---|---|---|
| 261 | குழுவின் அமைப்பு | 111-112 |
| 262 | குழுவின் பணிகள் | 112-113 |
| 263 | குழு பின்பற்றவேண்டிய நடைமுறை | 113 |


### *11. பேரவை நூலகக் குழு*


| | | |
|---|---|---|
| 264 | குழுவின் அமைப்பு | 113 |
| 265 | குழுவின் பணிகள் | 113 |
| 266 | குழுவின் கூட்டங்கள் | 114 |
| 267 | மற்றவைகளுக்கும் பொருந்தக் கூடிய வழிவகைகள் | 114 |

**அத்தியாயம் 20**—தொடர்ச்சி

**பேரவையின் குழுக்கள்**—தொடர்ச்சி

***12. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு***

268 குழுவின் அமைப்பு 114
269 குறைவெண் 114
270 குழுவின் பணிகள் 115
271 குழுவின் பணிவரம்புகள் 115
272 குழு பின்பற்ற வேண்டிய நடைமுறை 115

**அத்தியாயம் 21**

ஆளுநர் பேரவை இடையே செய்தித் தொடர்பு

273 ஆளுநரிடமிருந்து பேரவைக்கு வரும் செய்திகள் 116
274 ஆளுநரிடமிருந்து செய்தி 116
275 பேரவையிலிருந்து ஆளுநருக்கு அனுப்பப்படும் செய்திகள். 116

**அத்தியாயம் 22**

பேரவைக்குக் கொடுக்கப் பெறும் மனுக்கள்

276 மனுக்களின் வடிவமும் உட்பொருளும் 117-118
277 மனுக்களின் மேல் கையொப்பம் 118
278 மனுவின் படிவமும், அதை அளிப்பதற்கான முன்னறிவிப்பும். 118
279 பின்பற்ற வேண்டிய நடைமுறை 118

**அத்தியாயம் 23**

***பல்வகைப் பொருள்கள்***

280 பணித் துறை வெளியீடு 119
281 பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து சொற்களை நீக்குதல் 119





**அத்தியாயம் 23**—தொடர்ச்சி

***பல்வகைப் பொருள்கள்***—தொடர்ச்சி

282 நீக்கப் பெற்ற பகுதி பற்றி வெளியீடுகளில் குறித்தல் 119
283 மற்ற ஆவணங்களை அச்சிடுதலும் வெளியிடுதலும் 119-120
284 வெளியார்கள் 120
285 வெளியார்களை வெளியேறச் செய்தல் 120
286 எஞ்சிய அதிகாரம் 120
287 விதிகளை நிறுத்திவைப்பதற்கான தீர்மானம் 120
288 உறுப்பினரைக் கைது செய்தல், காவலில்
289 வைத்தல் விடுதலை செய்தல் ஆகியவற்றை 121-122
290 பேரவைத் தலைவருக்கு அறிவித்தல்
291 பேரவையின் அமைப்பு எல்லைக்குள் நீதிமன்றக் கட்டளைகளை உறுப்பினர்களுக்குச் 122
292 சேர்ப்பித்தலும் கைது செய்தலும்
இணைப்புகள் ['அ' முதல் 'ஊ' வரை] 123-132
அட்டவணை 133-169

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகள்

**[இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 208 ஆவது பிரிவு (1)-வது உட்பிரிவின்படி இயற்றப்பெற்றவை]**

## அத்தியாயம் 1

### குறுந்தலைப்பும் சொற்களின் விளக்கமும்

### குறுந்தலைப்பு

*1. இவ்விதிகள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகள் எனப் பெயர் பெறும்.*

**2. (1) இவ்விதிகளில்**

### சொற்களின் விளக்கம்

*(அ) "பேரவை" என்பது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையைக் குறிக்கும்.*

*(ஆ) "குழு" என்பது இவ்விதிகளின்படி பேரவையால் அமைக்கப்பெறும் அல்லது தேர்ந்தெடுக்கப்பெறும் அல்லது பேரவைத் தலைவரால் நியமிக்கப்பெறும் ஒரு குழுவைக் குறிக்கும். மேலும் இச்சொல் ஆய்வுக் குழுவையும் உள்ளடக்கும்.*

*(ஆ1) "கணினி வலையமைப்பு" என்பது 2000-ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பச் சட்டத்தில் (மத்தியச் சட்டம் 21/2000) "கணினி வலையமைப்பிற்கு" வழங்கப்பட்ட அதே பொருள் விளக்கத்தையே கொண்டிருக்கும்.*

*(இ)"அரசமைப்புச் சட்டம்" என்பது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைக் குறிக்கும்.*

*(இ1)"மின்னணு பதிவுரு" என்பது 2000-ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பச் சட்டத்தில் (மத்தியச் சட்டம் 21/2000) "மின்னணு பதிவுருக்கு" வழங்கப்பட்ட அதே பொருள் விளக்கத்தையே கொண்டிருக்கும்.*

*(ஈ) 'நிதியமைச்சர்' என்பது நிதிப் பொறுப்பை ஏற்றிருக்கும் அமைச்சரைக் குறிக்கும். மற்ற அமைச்சரையும் உள்ளடக்கும்.*

*(உ) 'அரசிதழ்' என்பது தமிழ்நாடு அரசிதழைக் குறிக்கும்.*

*(ஊ) 'அரசு' என்பது தமிழ்நாடு அரசைக் குறிக்கும்.*

*(எ) 'ஆளுநர்' என்பது தமிழ்நாடு ஆளுநரைக் குறிக்கும்.*

(ஏ) 'அவை' என்பது பேரவையைக் குறிக்கும்.

(ஐ) 'தகவல்' என்பது—

(i) பேரவைக் கூட்டம் ஒவ்வொன்றின் நடவடிக்கைச் சுருக்கத்தையோ;

(ii) பேரவை அல்லது அதனுடைய குழுக்களின் அலுவல்களைக் குறித்துத் தெரிவிக்கும் செய்தியையோ; அல்லது

(iii) பேரவைத் தலைவரின் கருத்துப்படி சேர்க்கப்பெறும் செய்தியையோ குறிக்கும்.

(ஒ) பேரவை முன்னவர் (Leader of the House) என்பது பேரவை முன்னவராக நியமிக்கப்பெறும் அமைச்சரைக் குறிக்கும்.

(ஓ) "எதிர்க்கட்சித் தலைவர்" என்பது அரசை ஏற்றுள்ள கட்சியைத் தவிர மற்றுள்ள கட்சிகளில் மிக அதிக எண்ணிக்கையை உடையதாகவும் பேரவைக் குறைவெண்ணை விட அதிக எண்ணிக்கையைக் கொண்டதாகவும் அச்சட்டமன்ற கட்சியின் தலைவர் எனப் பேரவைத் தலைவரால் அங்கீகரிக்கப்பட்டவரைக் குறிக்கும்.

எனினும், ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகளின் உறுப்பினர் எண்ணிக்கை ஒன்றாக இருப்பின், பொதுத் தேர்தலின்போது ஒவ்வொரு கட்சியும் பெற்ற வாக்குகள் கணக்கிடப் பெற்று, அதிக வாக்குகள் பெற்ற கட்சி அதிகார பூர்வமான எதிர்க்கட்சியாகவும் அதன் தலைவர் எதிர்க்கட்சித் தலைவராகவும் அங்கீகரிக்கப்பெறுவார்.

மேலும், இரு கட்சிகள் பெற்ற மொத்த வாக்குகளும் ஒன்றாக இருப்பின், எதிர்க்கட்சித் தலைவர் பதவி இருகட்சிகளாலும் மாறி மாறி வகிக்கப்படும்; யார் முதலில் அப்பதவியை வகிக்க வேண்டும் என்பது குலுக்கல் முறையில் நிர்ணயிக்கப்படும்.

(அஅ) 'சட்டமன்ற அணி' என்பது கீழ்க்கண்ட நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்றினை நிறைவு செய்யக்கூடிய ஒரு குறிப்பிட்ட சட்டமன்றக் கட்சியின் உறுப்பினர் பிரிவைக் குறிக்கும்.

(அ) எட்டு பேருக்கு குறையாத உறுப்பினர் எண்ணிக்கையைக் கொண்டிருக்க வேண்டும்.

(ஆ) சட்டமன்றப் பேரவைக்கான மாநிலப் பொதுத்தேர்தலில் மேற்படி கட்சியின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்கள் பெற்ற செல்லுபடியுள்ள வாக்குகள், அந்தப் பொதுத் தேர்தலில் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களும் பெற்ற மொத்த செல்லுபடியுள்ள வாக்குகளில் நான்கு சதவீதத்திற்குக் குறையாததாக இருக்க வேண்டும்.

(ஆஆ) 'சட்டமன்றக் கட்சி' என்பது, சட்டமன்றப் பேரவை தேர்தலில் போட்டியிடுவதற்காக தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பெற்று, ஒரு பொதுச் சின்னம் வழங்கப் பெற்று தேர்தலில் வெற்றி பெற்று "குறைவெண் எண்ணிக்கைக்கு குறையாத உறுப்பினர் எண்ணிக்கையைக் கொண்ட ஒரு கட்சியைக் குறிக்கும்".

(இஇ) 'புறக் கூடங்கள்' (Lobbies) என்பது சட்டமன்றப் பேரவையின் கிழக்கு, மேற்குப் புறங்களில் வேயப் பெற்று அமைந்துள்ள தாழ்வாரங்களைக் (Corridors) குறிக்கும்.

(உஉ) "உறுப்பினர்" என்பது பேரவை உறுப்பினரைக் குறிக்கும்.

மேலும், பேரவையின் உறுப்பினர் அல்லாத அமைச்சர், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 177-வது பிரிவில், குறிப்பிடப் பெற்றவைகளுக்காக உறுப்பினர் எனக் கருதப் பெறுவார். ஆனால், இச்சொல் அமைச்சரின் பேரவைச் செயலரை (Parliamentary Secretary) உள்ளடக்காது.

(ஊஊ) "சட்ட முன்வடிவிற்குப் பொறுப்புடைய உறுப்பினர்" (member incharge of a bill) என்பது—

(i) அரசின் சட்டமுன்வடிவு எனின் அமைச்சரையும்;

(ii) மற்ற சட்ட முன்வடிவு எனின் அச்சட்ட முன்வடிவைப் பேரவைக்கு அறிமுகப்படுத்திய உறுப்பினரையும் குறிக்கும்

(எஎ) "அமைச்சர்" என்பது துணை அமைச்சர் அல்லது அமைச்சரின் பேரவைச் செயலரையும் உள்ளடக்கும்.

(ஏஏ) "தீர்மானம்" என்பது இவ்விதிகளின்படி பேரவையின் ஆய்வுக்கு எப்பொருள் பற்றியேனும் கொண்டுவரப்பெறும் தீர்மானத்தைக் குறிக்கும்.

(ஏஏ) (I) "பேரவை முன் வைக்கப்பெறும் சட்ட முன்வடிவு, விவர அறிக்கை, அறிவிப்பு உள்ளிட்ட ஏடு அல்லது யாதொரு ஆவணம்" என்பது சட்டமன்றப் பேரவைக் கணினி வலையமைப்பு வாயிலாக மின்னணு பதிவுரு வடிவிலான அத்தகைய ஏடு அல்லது ஆவணம் என்று பொருள்படும்.

(ஐஐ) "பேரவையின் அமைப்பு எல்லை" என்பது—

(i) சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைப் பொறுத்தவரை பேரவை மண்டபம், அதன் புறக்கூடங்கள், அதனைச் சார்ந்த அலுவலகங்கள், அமைச்சர்களது அறைகள், நூலகம், சிற்றுண்டிச்சாலை, தலைமைச் செயலகத்திலுள்ள சட்டமன்றக் குழுக்கள் கூடும் அறை, அண்ணா சாலை அரசினர் தோட்டத்திலுள்ள உறுப்பினர் குடியிருப்பு வளாகத்திலுள்ள குழுக்கள் கூடும் அறை, நூலகம் மற்றும் பேரவைத் தலைவரால் அவ்வப்போது குறிப்பிடப்பெறும் இடங்கள் அல்லது கட்டடங்கள், இக்கட்டடங்களைச் சார்ந்த தாழ்வாரங்கள், படிக்கட்டுகள், பேரவை மண்டபத்திலிருந்து மேலே குறிக்கப்பெற்றுள்ள இடங்களுக்குச் செல்வதற்கான பாதைகள் அனைத்தும் பொருந்தும்.

இப்பொருள் விளக்கம் பேரவை அல்லது பேரவைக் குழுக்கள் அல்லது அவற்றின் உட்குழுக்கள் ஆகியவற்றின் கூட்டம் நடந்து கொண்டிருக்கும்பொழுதும் கூட்டம் துவங்குவதற்கு முன்னுள்ள ஒரு மணி நேரத்திற்கும் கூட்டம் முடிந்தபின் உள்ள ஒரு மணி நேரத்திற்கும் பொருந்தும்.

(ii) வெளியார்களைப் பொறுத்தவரை, மாடங்களுக்குச் செல்ல அலுவலகத்திலிருந்து முறைப்படி நுழைவுச் சீட்டு பெற்றிருப்பவர்களுக்கு மட்டும், பேரவையின் மாடங்கள், புறக்கூடங்கள், அவற்றின் படிக்கட்டுகள் ஆகியவற்றிற்கும் பொருந்தும்.

(iii) பேரவைக் குழு ஒன்றின் ஆணையால் எக்காரணம் பற்றியேனும் அழைக்கப் பெற்றவர்களைப் பொறுத்தவரை குழு அறைகள், அவற்றின் தாழ்வாரங்கள், படிக்கட்டுகள் ஆகியவற்றில் அவர்கள் இருக்கும்வரை "பேரவையின் அமைப்பு எல்லைக்குள்" இருப்பவர்களாகக் கருதப் பெறுவார்கள்.

(ஒஒ) "தனி உறுப்பினர்" என்பது அமைச்சர் அல்லாத ஓர் உறுப்பினர் எனப் பொருள்படும்.

(ஓஓ) "தனி உறுப்பினர்" அலுவல் என்பது தனி உறுப்பினர் ஒருவரால் முன்னறிவிப்புக் கொடுக்கப்பெற்றிருக்கும் அலுவல் எனப் பொருள்பெறும். எனினும் சட்டத் தீர்மானங்கள், ஏதேனும் ஒரு சட்டப்படி பேரவைமுன் வைக்கப்பெற வேண்டிய



அறிக்கைகளை விவாதிப்பதற்கான தீர்மானங்கள், ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம், இவ்விதிகளைத் திருத்துவதற்கெனக் கொண்டுவரப்பெறும் தீர்மானங்கள் ஆகியவை இதில் அடங்கா.

(ஔஔ) "விதிகள்" என்பது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகள் ஆகும்.

(அஅஅ) "செயலாளர்" என்பது பேரவைச் செயலாளரையும் செயலாளரின் பணிகளை ஆற்றுவதற்குப் பேரவைத் தலைவரின் இசைவுடன் செயலாளரால் அதிகாரம் வழங்கப்பெற்ற பேரவை அலுவலர் எவரையும் குறிக்கும்.

(ஆஆஆ) "கூட்டத் தொடர்" (Session) என்பது அரசமைப்புச் சட்டத்தின் 174(1)-வது பிரிவின்படி ஆளுநர் கூட்டுகின்ற பேரவையின் முதல் கூட்டத் தொடக்கத்திலிருந்து, 174 (2)-வது பிரிவின் படி அக்கூட்டத் தொடரை இறுதி செய்து வைத்தல் அல்லது பேரவையைக் கலைத்தல் வரையிலான காலத்தைக் குறிக்கும்.

(இஇஇ) "கூட்டம்" (sitting) என்பது பேரவை உறுப்பினர்கள் அலுவல்களை நடத்தும்பொருட்டு கூடும் ஒவ்வொரு நாள் கூட்டத்தின் தொடக்கத்திலிருந்து அது முடியும் வரை நடைபெறும் கூட்டம் ஆகும்.

(ஈஈஈ) "பேரவைத் தலைவர்" என்பது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவரைக் குறிக்கும்.

(உஉஉ) "சட்டத் தீர்மானம்" என்பது நடப்பிலுள்ள சட்டத்தின்படி கொண்டு வரப்படும் தீர்மானம் எனப் பொருள்படும்.

(ஊஊஊ) "மேசை" என்பது பேரவையில் உள்ள மேசையைக் குறிக்கும்.

2. (2) அரசமைப்புச் சட்டத்தில் பயன்படுத்தப் பெற்றுள்ள சொற்கள் அல்லது சொற்றொடர்கள் இவ்விதிகளில் பயன்படுத்தப்பெற்று பொருள் விளக்கம் கூறப்பெறாமல் இருக்குமாயின், சந்தர்ப்பத்தினால் வேறு பொருள் கொள்ள வேண்டியதாக இல்லையெனில், அவை அரசமைப்புச் சட்டத்தில் எப்பொருளில் பயன்படுத்தப் பெற்றுள்ளனவோ அதே பொருள் பெறும்.

## அத்தியாயம் 2

### பேரவையைக் கூட்டுதல், உறுப்பினர்கள் பதிவேடு, பிரமாணம் அல்லது உறுதிமொழி மற்றும் உறுப்பினர் அமரும் முறை

பேரவையைக் கூட்டுதல்

*3. (அ)* பேரவையை ஆளுநர் கூட்டும்போதெல்லாம் பேரவைக் கூட்டத்திற்கான நாள், நேரம், இடம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு அறிவிக்கை ஒன்றினை அரசிதழில் வெளியிட வேண்டும்.

*(ஆ)* செயலாளர் ஒவ்வொரு உறுப்பினருக்கும் பேரவைக் கூட்டத்திற்கென குறிக்கப்பெற்ற நாள், நேரம், இடம் ஆகியவற்றை தெரிவிக்க வேண்டும்.

எனினும் பேரவைக் கூட்டம் குறுகிய முன்னறிவிப்புடனோ அல்லது அவசரமாகவோ கூட்டப்பெறின், ஒவ்வொரு உறுப்பினருக்கும் தனித்தனியே அழைப்பாணைகள் அனுப்பப்பெற வேண்டுவதில்லை. ஆனால், கூடும் நாள், இடம் ஆகியவற்றை அரசிதழிலும் செய்தித்தாள்களிலும் வெளியிட வேண்டும். மேலும், உறுப்பினர்களுக்கு தந்தி மூலமாகவோ அல்லது வேறு வகையிலோ தெரிவிப்பதோடு வானொலி வாயிலாகவும் தெரிவிக்க வேண்டும்.

பிரமாணம் அல்லது உறுதிமொழி

*4. (1)* சட்டமன்றப் பேரவை உறுப்பினர் ஒவ்வொருவரும் பேரவையில் முதன் முதலாகத் தம் இருக்கையில் அமருமுன், அரசமைப்புச் சட்டத்தின் 188-வது பிரிவில் வகை செய்துள்ளவாறு பிரமாணம் அல்லது உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.

*(2)* மேற்கண்ட 1-வது உள் விதியின்படி, பிரமாணம் அல்லது உறுதிமொழி எடுத்துக்கொள்ளாத உறுப்பினர், ஒரு கூட்டத் தொடக்கத்தில் (மற்ற அலுவல்களுக்கு முன்) பேரவையில் பிரமாணம் அல்லது உறுதிமொழி எடுத்துக்கொள்ளலாம் அல்லது செயலாளருக்கு முன்னறிவிப்பு கொடுத்த பின்பு, பேரவைத் தலைவரால் குறிப்பிடப்பெறும் வேறு ஒரு நேரத்திலோ அல்லது இடத்திலோ எந்த ஒரு நாளிலும் பிரமாணம் அல்லது உறுதிமொழி எடுத்துக்கொள்ளலாம்.



உறுப்பினர் பதிவேடு

*5.* அவை உறுப்பினர்கள் பதிவேடு ஒன்று இருத்தல் வேண்டும். ஒவ்வொரு உறுப்பினரும் பிரமாணம் அல்லது உறுதிமொழி எடுத்துக்கொண்டு, இருக்கையில் அமரும் முன்னர் செயலாளர் முன்னிலையில் அப்பதிவேட்டில் கையொப்பமிட வேண்டும்.

உறுப்பினர் அமரும் முறை

*6.* பேரவைத் தலைவர் வகுக்கும் வரிசை முறைப்படி உறுப்பினர்கள் இருக்கையில் அமர வேண்டும்.

## அத்தியாயம் 3

## பேரவைத் தலைவர், துணைத் தலைவர் தேர்தலும் மாற்றுத் தலைவர்களின் நியமனப் பட்டியலும்

பேரவைத் தலைவர் தேர்தல்

*7. (1) பேரவைத் தலைவர் தேர்தல், ஆளுநர் குறிப்பிடும் நாளன்று நடைபெற வேண்டும். அவ்வாறு குறிப்பிடப்பெறும் நாள் பற்றிய முன்னறிவிப்பை ஒவ்வொரு உறுப்பினருக்கும் போதிய அவகாசம் இருக்குமாறு செயலாளர் அனுப்பிவைக்க வேண்டும்.*

*(2) அவ்வாறு குறிப்பிடப்பெற்ற நாளுக்கு முந்தைய நாள் நண்பகலுக்கு முன் எந்நேரத்திலாவது எந்த உறுப்பினரேனும் மற்றொரு உறுப்பினரை வேட்பாளராக முன்மொழியலாம். வேட்புத்தாளில் மொழியப்பெற்ற உறுப்பினர் பெயரும், முன்மொழிபவர், வழிமொழிபவர் ஆகியோரின் கையொப்பங்களும், வேட்பாளர் தாம் தேர்ந்தெடுக்கப்பெற்றால் பேரவைத் தலைவராகப் பணியாற்றுவதற்கு இசைவு தெரிவிக்கும் உறுதிமொழியும் இருத்தல் வேண்டும். இவ்வேட்புத்தாள் செயலாளரிடத்தில் முன்மொழிந்தவராலோ, வழிமொழிந்தவராலோ, வேட்பாளராலோ நேரில் கொடுக்கப்பெற வேண்டும்.*

*எனினும் ஓர் உறுப்பினர் தமது பெயரை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்களை முன்மொழியவோ, வழிமொழியவோ கூடாது.*

*(3) இத்தேர்தல் பேரவைக் கூட்டமொன்றில் நடைபெற வேண்டும்.*

*(4) தேர்தலுக்கென குறிப்பிடப்பெற்ற நாளில் துணைத் தலைவர் அல்லது விதி 9(1)-ன்கீழ் நியமிக்கப்பெற்ற மாற்றுத் தலைவர் அல்லது பேரவையால் தீர்மானிக்கப்பெறும் ஓர் உறுப்பினர் அல்லது அரசமைப்புச் சட்டத்தின் 180-வது பிரிவு (1)-வது உட்பிரிவின்கீழ் ஆளுநரால் நியமிக்கப்பெறும் ஓர் உறுப்பினர் முறைப்படி மொழியப் பெற்றுள்ள வேட்பாளர்கள், அவர்களை முன்மொழிந்தவர்கள், வழிமொழிந்தவர்கள் ஆகியோரின் பெயர்களை பேரவைக்குப் படித்துக்காட்ட வேண்டும். அத்தேர்தலுக்கு ஒரே ஒரு வேட்பாளர் மட்டும் மொழியப்பெற்றிருந்தால் அவர் தேர்ந்தெடுக்கப்பெற்றதாக அறிவிக்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் மொழியப் பெற்றிருந்தால், மறைவு வாக்குப் பதிவு முறைப்படி பேரவைத் தலைவரை பேரவை தேர்ந்தெடுக்க வேண்டும்.*



*(5) மேற்கண்ட (4)-வது உட்பிரிவின்படி பெயர்களைப் பேரவைக்குத் தலைமை வகிப்பவர் பேரவைக்குப் படித்துக்காட்டும் முன்னர் வேட்பாளரோ அவர் பெயரை முன்மொழிந்தவரோ, வழிமொழிந்தவரோ பேரவை உறுப்பினராக பிரமாணம் அல்லது உறுதிமொழி எடுத்துக் கொண்டிராவிட்டால், அவ்வேட்பாளர் முறைப்படி மொழியப்பெற்றவராக கருதப்பெறமாட்டார். மேலும், அவ்வாறு பிரமாணம் அல்லது உறுதிமொழி எடுத்துக்கொள்ளாத உறுப்பினர் வாக்களிக்கவும் தகுதியற்றவர் ஆவார்.*

*(6) இரண்டிற்கு மேற்பட்ட வேட்பாளர்கள் மொழியப் பெற்றிருந்து, முதல் வாக்கெடுப்பில் எந்த வேட்பாளரும் மற்ற அனைத்து வேட்பாளர்களின் மொத்த வாக்குகளைவிட அதிகமான வாக்குகள் பெறாவிட்டால், மிகக்குறைந்த வாக்குகள் பெற்றவரை நீக்கிவிட்டு, மறுவாக்கெடுப்பு நடத்தவேண்டும். இவ்வாறு ஒவ்வொரு வாக்கெடுப்பிலும் எந்த வேட்பாளர் மிகக்குறைந்த வாக்குகளை பெறுகிறாரோ அந்த வேட்பாளரை பின் தொடரும் வாக்கெடுப்பிலிருந்து நீக்கிவிட வேண்டும். இறுதியாக ஒரு வேட்பாளர் மீதம் இருக்கும் ஒரு வேட்பாளரைவிட அதிகமான வாக்குகளை பெறும்வரை அல்லது ஒரு வேட்பாளர் மற்ற அனைத்து வேட்பாளர்களும் பெற்ற மொத்த வாக்குகளைவிட அதிகமான வாக்குகளைப் பெறும்வரை வாக்கெடுப்பு தொடர வேண்டும்.*

*(7) மேற்கண்டவாறு நடத்தப் பெறும் எவ்வாக்கெடுப்பிலாவது இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வேட்பாளர்கள் சமமான வாக்குகள் பெறின், அவர்களில் ஒருவர் 6-வது உட்பிரிவின்படி வாக்கெடுப்பிலிருந்து நீக்கப்பெறவேண்டியிருப்பின் யார் நீக்கப்பெற வேண்டும் என்பதைச் சீட்டுக் குலுக்கிப்போட்டு தீர்மானிக்க வேண்டும்.*

*(8) இரு வேட்பாளர்கள் மட்டுமே முறைப்படி மொழியப்பெற்றிருந்தால் மறைவு வாக்கெடுப்பு நடத்தப்பெற்று, அதிக வாக்குகள் பெறும் வேட்பாளரே தேர்ந்தெடுக்கப்பெற்றிருப்பதாக அறிவிக்க வேண்டும். இரு வேட்பாளர்களும் சமமான வாக்குகள் பெறின், எவ்வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பெற வேண்டுமென்பதை சீட்டுக் குலுக்கிப்போட்டு தீர்மானிக்க வேண்டும்.*

பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்.

*8. (1)* துணைத் தலைவர் தேர்தல், பேரவைத் தலைவரால், அவர் இல்லாதபோது, ஆளுநரால், குறிக்கப்பெறும் நாளில் நடைபெற வேண்டும். அவ்வாறு குறிக்கப்பெற்ற நாளினை செயலாளர் உறுப்பினர்களுக்கு போதிய அவகாசம் இருக்கும் வகையில் தெரிவிக்க வேண்டும்.

(2) 7-வது விதியின் உட்பிரிவுகள் (2)லிருந்து (8) வரையில் கண்டுள்ள நடைமுறைகள் துணைத் தலைவர் தேர்தலுக்கும் பொருந்தும்.

### மாற்றுத் தலைவர்கள்

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

*9. (1)* பேரவைக் கூட்டத் தொடரின் தொடக்கத்தில் அல்லது தேவைக்கு ஏற்ப அவ்வப்போது பேரவை உறுப்பினர்களிலிருந்து ஆறுக்கு மேற்படாத உறுப்பினர்களை மாற்றுத் தலைவர்கள் பட்டியலில் பேரவைத் தலைவர் நியமிக்கலாம். பேரவைத் தலைவரும் துணைத் தலைவரும் அவையில் இல்லாதபோது பேரவைத் தலைவர் அல்லது துணைத் தலைவர் அல்லது மாற்றுத் தலைவர் கேட்டுக் கொள்வதற்கு இணங்க, மாற்றுத் தலைவர்கள் பட்டியலில் இடம் பெற்ற எவரேனும் ஒருவர் பேரவைக் கூட்டத்திற்கு தலைமை வகிக்கலாம்.

ஆயினும் பேரவைத் தலைவரும், துணைத் தலைவரும் இல்லாதிருந்து மேற்கண்டுள்ளபடி வேண்டப்படாவிடில், பேரவை முன்னவர், மாற்றுத் தலைவர்கள் பட்டியலில் உள்ள எவரையேனும் பேரவைக்கூட்டத்திற்கு தலைமை தாங்க நியமிக்கலாம்.

(2) மேற்கூறிய உட்பிரிவு (1)-இன்படி நியமனம் செய்யப்பெற்ற மாற்றுத் தலைவர், புதிய மாற்றுத்தலைவர்கள் நியமிக்கப்பெறும் வரையில் பதவி வகிப்பார்.

தலைமை வகிப்பவரின் அதிகாரங்கள்.

*10.* துணைத் தலைவர் அல்லது பேரவைக்கு தலைமை தாங்கும் தகுதியுள்ள ஓர் உறுப்பினர் அவ்வாறு தலைமை தாங்கும்போது பேரவைத் தலைவருக்கு வழங்கப்பெற்றுள்ள எல்லா அதிகாரங்களையும் பெறுவார். மேலும், இத்தகைய தருணங்களில் பேரவைத் தலைவரைக் குறிக்கும் இவ்விதிகளின் குறிப்புகள் எல்லாம் அவ்வாறு பேரவைத் தலைமை வகிப்பவரைக் குறிப்பதாகவே கருதப்பெறும்.



## அத்தியாயம் 4

### ஆளுநர் உரை

ஆளுநர் உரை.

*11.* அரசமைப்புச் சட்டத்தின் 176 அல்லது 175-வது பிரிவின்படி பேரவைக் கூட்டத்தில் ஆளுநர் உரையாற்றிய பின்பு நடக்கும் பேரவையின் முதல் கூட்டத்தில் ஆளுநர் உரையின் பிரதியொன்று பேரவைமுன் வைக்கப்பெற வேண்டும்.

ஆளுநர் உரைமீது விவாதம்.

*12. (1)* அரசமைப்புச் சட்டத்தின் 176-வது பிரிவு, 1வது உட்பிரிவிற்கிணங்க, ஆளுநர் உரையில் குறிப்பிடப்பெற்றுள்ள பொருள்கள் பற்றி விவாதிக்க தேவைப்பெறும் காலத்தைப் பேரவைத் தலைவர் அலுவல் ஆய்வுக் குழுவைக் கலந்து ஆலோசித்து அரசமைப்புச் சட்டத்தின் 176-வது பிரிவு 2-வது உட்பிரிவின்படி ஒதுக்க வேண்டும்.

மேலும், அலுவல் ஆய்வுக் குழு அமைக்கப்பெறவில்லை என்றாலோ, இயங்கவில்லையென்றாலோ, பேரவைத் தலைவர் பேரவை முன்னவரைக் கலந்து ஆலோசித்து, மேற்கண்டுள்ள உட்பிரிவில் குறிப்பிடப்பெற்றுள்ள காலத்தை ஒதுக்க வேண்டும்.

(2) உறுப்பினர் ஒருவரால் மொழியப்பெற்று மற்றொரு உறுப்பினரால் வழிமொழியப்பெற்ற நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது மேற்கூறிய விவாதம் நடைபெற வேண்டும்.

(3) அத்தீர்மானத்திற்குப் பேரவைத் தலைவர் பொருத்தமெனக் கருதும் வடிவத்தில் திருத்தங்கள் மொழியப்பெறலாம்.

ஆளுநர் உரை மீதான விவாதத்திற்கு முன்பு எடுத்துக் கொள்ளப் பெறும் மற்ற அலுவல்கள்.

*13. (1)* ஆளுநர் உரையின் மீதான விவாதத்திற்கென ஒதுக்கப்பெற்ற நாளாக இருப்பினும், அந்நாளில்—

(அ) சட்டமுன்வடிவு அல்லது சட்டமுன்வடிவுகளை அறிமுகப்படுத்த அனுமதி கோரும் தீர்மானம் அல்லது தீர்மானங்களை மொழியலாம். மேலும், சட்டமுன்வடிவு அல்லது சட்டமுன்வடிவுகளை அறிமுகம் செய்யலாம்.

(ஆ) உரை மீதான விவாதம் தொடங்குவதற்கு அல்லது தொடர்வதற்கு முன், மரபு வழி சம்பிரதாயமான (formal) அலுவல்களை மேற்கொள்ளலாம்.

*(2)* அரசினர் சட்டமுன்வடிவு அல்லது அரசின் பிற அலுவல்களை விவாதிக்க வேண்டுமென கொண்டுவரப்பெறும் தீர்மானத்திற்கிணங்க உரையின் மீதான விவாதம் தள்ளிவைக்கப் பெறலாம். அவ்வாறு கொண்டுவரப்பெறும் தீர்மானம் பேரவைத் தலைவரால் உடனே அவையின் முடிவுக்கு விடப்பெற வேண்டும். திருத்தமோ, விவாதமோ அனுமதிக்கப் பெறாது.

*(3)* உரையின் மீதான விவாதம் ஒரு கூட்ட நிகழ்வின்போது விதி 56-ன்படி அனுமதிக்கப்பெறும் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலம் இடையில் நிறுத்திவைக்கப்பெறலாம்.

ஆளுநர் உரை மீதான விவாத விதிகள்.

14. அரசுத் தீர்மானங்களுக்குப் பொருந்தும் விவாத விதிகள், ஆளுநர் உரை மீதான விவாதத்திற்கும் ஏற்ற மாறுதல்களுடன் பொருந்தும்.

ஆயினும், முதலமைச்சரோ அல்லது வேறு அமைச்சரோ, அவர் விவாதத்தில் ஏற்கெனவே பங்கு பெற்றிருந்தாலும் இல்லாவிட்டாலும் அரசின் சார்பில் விவாத முடிவில் பேசுவதற்கு பொதுவாக உரிமை உண்டு.

ஆளுநரின் மறுமொழி

15. நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு ஆளுநரின் மறுமொழி ஏதேனும்வரின், அதைப் பேரவைத் தலைவர் பேரவைக்கு அறிவிக்க வேண்டும். பேரவைக் கூட்டம் நடைபெறாதிருப்பின் அம்மறுமொழி உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பெற வேண்டும்.

நேரம் ஒதுக்கீடு செய்தல்.

16. அரசமைப்புச் சட்டத்தின் 175-வது பிரிவின் 1-வது உட்பிரிவிற்கிணங்க ஆற்றப்பெறும் ஆளுநர் உரையில் குறிப்பிடப்பெற்றுள்ள பொருள்கள் பற்றி விவாதிப்பதற்கென பேரவைத் தலைவர் நேரத்தை ஒதுக்கலாம்.

ஆளுநர் உரையின் போது அவையில் ஒழுங்கைக் காத்தல்.

17. அரசமைப்புச் சட்டத்தின் 175 அல்லது 176-வது பிரிவின்படி அவை கூடியிருக்கும்போது ஆளுநர் உரை நிகழ்த்துகையிலோ, நிகழ்த்துவதற்கு முன்னரோ, பின்னரோ உறுப்பினர் எவரும் தமது பேச்சினாலோ, ஒழுங்கு பிரச்சினையினாலோ, வேறு எவ்வகையிலோ தடுக்கவோ, குறுக்கீடு செய்யவோ கூடாது. அவ்வாறு தடங்கலோ குறுக்கீடோ செய்வது பேரவையின் ஒழுங்கிற்குப் பெருத்த ஊறு விளைவிப்பதாகக்



கருதப்பெற்று, அடுத்து நிகழும் கூட்டத்தில் பேரவைத் தலைவரால் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பெறும்.

## பேரவைக் கூட்டத் தொடரை இறுதி செய்தல்

கூட்டத் தொடரை இறுதி செய்தல்.

18. *(அ)* பேரவையின் ஒரு கூட்டத் தொடர், இறுதி செய்தல் (prorogation) மூலம் முடிவுபெறும். அவ்வாறு இறுதி செய்யப்பெறுவது, அரசிதழில் வெளியிடப் பெறுவதோடு, உறுப்பினர்களுக்கும் தெரிவிக்கப்பெற வேண்டும்.

*(ஆ)* ஒரு கூட்டத் தொடர் இறுதி செய்யப்பெற்றபின் வினாக்கள், சட்டத் தீர்மானங்கள், பேரவையில் அறிமுகம் செய்யப்பெற்றிருக்கின்ற சட்டமுன்வடிவுகள், மொழியப் பெற்றிருக்கின்ற தனித் தீர்மானங்கள் ஆகியவை தவிர, நிலுவையிலிருக்கும் மற்ற எல்லா முன்னறிவிப்புகளும் அலுவல்களும் செயல் திறனற்றவையாகிவிடும். அவ்வாறு செயல் திறனற்றுப் போகாத அலுவல்கள் அக்கூட்டத்தொடர் இறுதி செய்யப்பெறும் போது எக்கட்டத்தை எய்தி இருந்தனவோ அதே கட்டத்தில் அடுத்த கூட்டத் தொடருக்குக் கொண்டு செல்லப்பெறும்.

மேலும், வினாக்களைத் தவிர, மற்ற தீர்மானங்களைப் பொறுத்தவரை தேவையான புதிய முன்னறிவிப்பு கொடுக்கப்பெற வேண்டும்.

*(இ)* கூட்டத்தொடர் இறுதி செய்துவைக்கப் பெறுவதால் இவ்விதிகளின்கீழ் இயங்கும் குழு அல்லது ஆய்வு குழுவின் அலுவல் எவ்விதத்திலும் பாதிக்கப் பெறாது.

## அத்தியாயம் 5

### வராமைக்கான அனுமதி வழங்கல், பதவி விலகுதல், பேரவையில் இடங்கள் காலியாதல்

வருகைப் பதிவேடு.

*19.* ஒவ்வொரு கூட்டத்தின்போதும், உறுப்பினர்களது வருகையைக் குறிக்கும் பதிவேடு ஒன்றினை செயலாளர் வைத்திருக்க வேண்டும். இப்பதிவேடு, உறுப்பினர்கள் வேண்டும்போது அவர்களது பார்வைக்கும் கிடைக்குமாறு செய்ய வேண்டும்.

வராமைக்கான அனுமதியும் பதவிகள் காலியாதலும்.

*20. (1)* பேரவைக் கூட்டங்களுக்கு வராமலிருப்பதற்கான அனுமதியை உறுப்பினர்களுக்குப் பேரவை அளிக்கலாம். வராத காலத்தைக் குறிப்பிட்டு அதற்கான தீர்மானத்தை அவரோ அல்லது அவருக்காக வேறோர் உறுப்பினரோ கொண்டு வரலாம். அவ்வாறு கொண்டுவரப்பெறும் தீர்மானம் திருத்தமோ விவாதமோயின்றி வாக்கெடுப்பிற்கு விடப்பெற வேண்டும்.

*(2)* அனுமதி பெறாமல் அரசமைப்புச் சட்டத்தின் 190-வது பிரிவின் 4-வது உட்பிரிவின்படி கணக்கிடப்பெற்ற 60 நாட்களுக்குத் தொடர்ந்து எல்லாக் கூட்டங்களுக்கும் எந்த உறுப்பினரேனும் வராவிடின் அவரின் பதவி காலியானதாக அறிவிக்கப்பெற வேண்டும் என்ற தீர்மானத்தை பேரவை உறுப்பினர் எவரேனும் மொழியலாம். அத்தீர்மானம் திருத்தமோ விவாதமோயின்றி பேரவையின் வாக்கெடுப்பிற்கு விடப்பெற வேண்டும்.

பேரவையினின்று பதவி விலகுதல்.

*21. (1)* பேரவை உறுப்பினர் பதவியிலிருந்து விலக விரும்பும் ஓர் உறுப்பினர், இதற்காக இணைப்பு “ஊ” வில் குறிப்பிட்டுள்ள படிவத்தில் பேரவைத் தலைவருக்கு தம்முடைய எண்ணத்தை தம் கைப்பட எழுதிக் கையொப்பமிட்டுத் தெரிவிக்க வேண்டும்.

*(2)* பேரவைத் தலைவர் ஓர் உறுப்பினரது பதவி விலகலை ஏற்றவுடன், செயலாளர் அச்செய்தியை தகவல் தாளிலும் (Information Sheet), அரசிதழிலும் கூடிய விரைவில் வெளியிட வேண்டும். மேலும் அவ்வாறு காலியான இடத்தை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்காக அவ்வறிவிப்பின் பிரதியைத் தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

மேலும், பதவி விலகல் ஒரு குறிப்பிட்ட எதிர்காலத் தேதியில் நடைமுறைக்கு வரவேண்டும் என இருப்பின், எந்நாளிலிருந்து



பதவி விலகல் அமலுக்கு வருகிறதோ அந்நாளுக்கு முன்னதாக இன்றி அச்செய்தி தகவல் தாளிலும் அரசிதழிலும் வெளியிடப்பெற வேண்டும்.

பதவி விலகலை ஏற்றுக் கொள்ளுதல்.

*22.* ஓர் உறுப்பினர் தம் பதவி விலகல் கடிதத்தைப் பேரவைத் தலைவரிடம் நேர்முகமாக கொடுப்பதுடன், பதவி விலகல் தம் சொந்த விருப்பப்படியானதும் மெய்யானதும் ஆகும் என்றும் தெரிவிப்பின், மேலும் அதுகுறித்துப் பேரவைத் தலைவருக்கு வேறு வகையான மாறுபட்ட செய்தியோ, தகவலோ இல்லையெனில், பேரவைத் தலைவர் அப்பதவி விலகல் கடிதத்தை ஏற்றுக்கொள்ளலாம்.

பதவி விலகலை பேரவைக்கு அறிவித்தல்.

*23.* பேரவைத் தலைவர் உறுப்பினர் ஒருவரது பதவி விலகலை ஏற்றால், கூடிய விரைவில் அந்த உறுப்பினர் ‘பதவி விலகல்’ செய்வதையும், அதைத் தாம் ஏற்றுக்கொண்டதையும் பேரவைக்கு அறிவிக்க வேண்டும்.

***விளக்கம்.***—பேரவைக் கூட்டம் இல்லாதிருப்பின் பேரவை அடுத்துக் கூடும்பொழுது பேரவைத் தலைவர் பேரவைக்கு அச்செய்தியைத் தெரிவிக்க வேண்டும்.

பதவி விலகல் குறித்து பேரவைத் தலைவரின் விசாரணை.

*24.* பதவி விலகல் கடிதம் அஞ்சல் வழியாகவோ அல்லது வேறு ஒருவர் மூலமாகவோ பேரவைத் தலைவருக்குக் கிடைக்குமாயின், பேரவைத் தலைவர் அப்பதவி விலகல் உறுப்பினரின் சொந்த விருப்பத்தின்படியானதா, உண்மையானதா என்பதை அறிந்துகொள்ளத் தேவையான தாம் பொருத்தமெனக் கருதும் விசாரணையை நடத்தித் தெரிந்துகொள்ள வேண்டும். பேரவைத் தலைவர் தாமாகவோ அல்லது பேரவைச் செயலகத்தின் உதவியைக் கொண்டோ அல்லது தாம் பொருத்தமெனக் கருதும் வேறு எந்த ஒரு அமைப்பினுடைய உதவியைக் கொண்டோ ஒரு சுருக்கமான விசாரணையை நடத்தி அப்பதவி விலகல் அவ்வுறுப்பினரின் சொந்த விருப்பத்திற்கு மாறானதாகவோ அல்லது உண்மையற்றதாகவோ இருப்பதாகத் தெரிந்துகொண்டால், அதனை அவர் ஏற்கலாகாது.

***விளக்கம்.***—அந்த சுருக்கமான விசாரணை பதவி விலகும் உறுப்பினருக்கு முகவரி இடப்பெற்ற கடிதப் போக்குவரத்து மூலமோ அல்லது அவரிடம் நேர்முகமாக விசாரிப்பதன் மூலமோ இருக்கலாம்.

## அத்தியாயம் 6

### பேரவைக் கூட்டங்களும் அலுவல்கள் அமைப்பு முறையும்

கூட்டங்களை ஒத்தி வைத்தல்.

*25. (1) விதி 122-இன் வரம்பிற்குட்பட்டு பொதுவாக இவ்விதிகளில் பேரவை தனது அன்றாட நடவடிக்கைகளை முடித்துக்கொள்ளக் குறித்துள்ள கால அளவில் அல்லது பேரவையினால் அவ்வப்போது நிர்ணயிக்கப்பெறும் கூட்ட முடிவு நேரத்தில் பேரவையை அக்கூட்டத் தொடரின் அடுத்த நாளைக்கும் பேரவைத் தலைவர் ஒத்திவைக்க வேண்டும் அல்லது நாள் குறிப்பிடாது ஒத்திவைக்க வேண்டும்.*

*மேலும், பேரவையின் முன்னுள்ள அலுவல்களின் நிலைமையைக் கருத்தில்கொண்டு, பேரவையின் கருத்தை அறிந்த பின்னர், பேரவைத் தலைவர் அதே நாளில் பிந்திய ஒரு நேரத்திற்குப் பேரவையை ஒத்திவைக்கலாம்.*

எனினும், பேரவை ஒரு தீர்மான வடிவில் முடிவு செய்தாலன்றி கூடும் நாள் குறிப்பிடாமலோ (sine die) அல்லது அடுத்து கூட வேண்டிய நாளுக்குப் பிந்தியோ பேரவையை ஒத்திவைக்கலாகாது.

*(2) மேற்கொண்டுள்ள விதிகளுக்கு முரணாகப் பேரவை ஒத்திவைக்கப்பெற்றது என்று அறிவிக்கப்பெறுமானால், துணைத் தலைவர் அல்லது மாற்றுத் தலைவர்கள் பட்டியலில் உள்ள உறுப்பினர் அல்லது பேரவையால் தற்காலிகமாகத் தேர்ந்தெடுக்கப்பெறுகிற உறுப்பினர் தலைமையில் பேரவைக் கூட்டம் தொடர்ந்து நடைபெறலாம்.*

கூட்ட நாளில் மாற்றம்.

*26. (1) பேரவை நாள் குறிப்பிடப்பெறாது ஒத்திவைக்கப் பெற்றிருப்பின் பேரவையைத் திரும்ப எந்த ஒரு நாளிலும் கூட்டுவதற்குப் பேரவைத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.*

*(2) பேரவை, ஒரு குறிப்பிட்ட நாளுக்கு அல்லது ஒரு குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட நேரத்திற்கு ஒத்திவைக்கப்பெற்றிருப்பின், அவ்வாறு குறிப்பிடப்பெற்ற நாளுக்கு முன்போ பின்போ அல்லது அந்நாளில் குறிப்பிடப்பெற்ற நேரத்திற்கு முன்போ பின்போ பேரவையைக் கூட்ட பேரவைத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.*

குறைவெண்.

*27. பேரவைத் தலைவர் அல்லது பேரவைக்குத் தலைமை வகிப்பவர் உட்பட குறைந்தது பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையில் பத்தில் ஒரு பங்கு உறுப்பினர்களாவது பேரவையில் இருந்தால்தான் பேரவை தனது அதிகாரங்களைச் செயல்படுத்த இயலும்.*



குறைவெண் இன்மையால் ஒத்திவைத்தல்

*28. எந்த நேரத்திலாவது கூட்டத்திற்கான குறைவெண் இன்மையை தலைமை வகிப்பவரது கவனத்திற்குக் கொண்டுவரின் அழைப்பு மணி (Quorum bell) ஒலிக்கப்பெற வேண்டும். அவ்வாறு ஒலிக்கப்பெற்ற 15 நிமிடங்களுக்குப் பிறகும் குறைவெண் இல்லாதிருப்பின், தலைமை வகிப்பவர் பேரவை சாதாரணமாகக் கூடும் அடுத்த நாளுக்கோ அன்றி அதே நாளில் அவரால் குறிப்பிடப்பெறும் பிந்திய நேரத்திற்கோ பேரவையை ஒத்திவைக்கவேண்டும்.*

பேரவை பொதுவாகக் கூடும் நேரம்

*29. பேரவைக் கூட்டங்கள் சாதாரணமாக காலை 10-00 மணிக்குத் தொடங்கி பிற்பகல் 2-00 மணிக்கு முடிவடையும்.*

எனினும், நாள் நேரம் குறிப்பிடாது ஒத்திவைக்கப்பெற்றுள்ள பேரவையைத் திரும்பக் கூட்டும்பொழுது முதல் நாள் கூட்டம் துவங்கும் நேரத்தையும் முடியும் நேரத்தையும் பேரவைத் தலைவர் நிர்ணயிக்க வேண்டும்.

அலுவல் பட்டியலும் பேரவையில் வைக்கப் பெறும் ஏடுகளும்.

*30. (1) ஒவ்வொரு நாளுக்கும் உரிய அலுவல் பட்டியலைச் செயலாளர் தயாரித்து அனைத்து உறுப்பினர்களுக்கும் வன்நகல் வடிவில் அல்லது சட்டமன்றப் பேரவைக் கணினி வலையமைப்பு வாயிலாக மின்னணு பதிவுரு வடிவில் அனுப்பிவைக்க வேண்டும்.*

*(2) இவ்விதிகளில் வகை செய்திருந்தாலன்றி, மரபு வழி அல்லது சடங்குமுறை அலுவல்களைத் தவிர, அந்த நாள் அலுவல்பட்டியலில் இடம் பெறாத அலுவல் எதையும் அக்கூட்டத்தில் நடத்தக் கூடாது.*

*(3) பேரவை ஏற்கும் ஒரு தீர்மானத்தினாலன்றி அலுவல் பட்டியலில் உள்ள அலுவல் வரிசையை மாற்றக் கூடாது.*

*(4) இவ்விதிகளில் வகை செய்திருந்தாலன்றி முன்னறிவிப்புக் கொடுக்கப்பெற வேண்டிய அலுவல் எதையும், அந்த முன்னறிவிப்புக் காலம் முடிவதற்கு முன் அலுவல் பட்டியலில் சேர்க்கக் கூடாது.*

*(5) ஓர் ஏடு எந்த நாளில் அலுவல் பட்டியலில் பேரவைமுன் வைக்கப்பெற்றிருப்பதாகக் குறிக்கப் பெறுகிறதோ அல்லது பேரவை நடவடிக்கைகளில் எந்த நாளில் அது இடம் பெறுகிறதோ, அந்த நாளில் அது பேரவை மேசைமுன் வைக்கப்பெற்றதாக அல்லது பேரவைமுன் வைக்கப்பெற்றதாகக் கருதப்பெறும். அவ்வாறு வைக்கப்பெறும் ஏடுகளின் பிரதிகள்*

அனைத்து உறுப்பினர்களுக்கும் வன்நகல் வடிவில் அல்லது சட்டமன்றப் பேரவைக் கணினி வலையமைப்பு வாயிலான மின்னணு பதிவுரு வடிவில் .கிடைக்குமாறு செய்ய வேண்டும்.

எனினும், 1956 ஆம் ஆண்டு வணிக நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் (1) உட்பிரிவின் கீழோ அல்லது வேறு எந்த ஒரு சட்டத்தின் கீழோ வணிக நிறுவனங்கள் செயல்படும் முறை குறித்த ஆண்டறிக்கை மற்றும் தணிக்கை அறிக்கையை சட்டமன்றப் பேரவைமுன் வைக்கப் பெறுவதில் ஏதேனும் காலதாமதம் ஏற்பட்டிருப்பின் அக் கால தாமதத்திற்கான காரணங்களை விளக்கும் வகையில் ஒரு விவர அறிக்கை ஒன்று இணைக்கப்பெற வேண்டும்.

(6) ஒரு ஏட்டினை அல்லது ஆவணத்தை பேரவை மேசை முன் வைக்க விரும்பும் அமைச்சர் அல்லது உறுப்பினர் அதனை முறைப்படி சான்று கையொப்பமிட்டிருத்தல் வேண்டும்.

(7) பேரவை மேசை முன் வைக்கப்பெற்ற அனைத்து ஏடுகளும் மற்றும் ஆவணங்களும் பொது ஆவணங்கள் எனக் கருதப்பெறும்.

பேரவையில் விவாதம்.

31. எந்த ஒரு சட்டத்தின்படி பேரவை மேசைமுன் வைக்கப்பெறும் எந்த ஏட்டினையும் உறுப்பினர் எவரேனும் பேரவை விதிகளில் வகை செய்யப்பட்டுள்ளவாறு பொருத்தமான தீர்மானம் ஒன்றினுக்கு அறிவிப்பு கொடுத்து பேரவைத் தலைவரால் அனுமதிக்கபெறின், பேரவையில் விவாதிக்கலாம்.

வினா நேரம்.

32. பேரவை வேறுவிதமாக ஒருமனதாக, முடிவு செய்தாலன்றி, ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப்பெற வேண்டும். மேலும், பேரவைத் தலைவர் தம் உசிதத்தின்படி வினா நேரத்தை நீட்டிக்கலாம்.

எனினும், ஒரு கூட்டத் தொடக்க நாளில், தேவைப்படின், பேரவைத் தலைவர் அந்நாள் வினா நேரத்தை நீக்கிவிடலாம்.

தனி உறுப்பினர் அலுவலுக்கு நேரம் ஒதுக்குதலும் முதலிடம் அளித்தலும்.

33. (1) ஆளுநர் உரை மீதான விவாதத்திற்கென ஒதுக்கப்பெறும் நாட்களில் வரும் வியாழக்கிழமைகள் மற்றும் அரசமைப்புச் சட்டத்தின் 202 முதல் 206 முடிய உள்ள பிரிவுகளின்படி நிதியைப் பொறுத்த அலுவல்களின் விவாதத்திற்கென ஒதுக்கப்பெறும் நாட்களில் வரும் வியாழக்கிழமைகள் நீங்கலாக பேரவை கூடும் மற்ற எல்லா வியாழக்கிழமைகளிலும் தனி உறுப்பினர் அலுவல் முதலிடம் பெறும்.



ஆயினும், அவ்வாறு எடுத்துக்கொள்ளப்பெற்ற நாள் அல்லது நாட்களுக்குப் பதிலாக முறையே ஒரு நாளையோ அல்லது நாட்களையோ பேரவைத் தலைவர், பேரவை முன்னவரைக் கலந்து, ஆளுநர் உரை மீதான விவாதமும் நிதி அலுவல்கள் பற்றிய விவாதங்களும் முடிவுற்றபின், தனி உறுப்பினர் அலுவலுக்கென ஒதுக்கலாம்.

மேலும், இவ்விதியின்படி தனி உறுப்பினர் அலுவலுக்கு முதலிடம் கொடுக்க வேண்டிய வியாழக்கிழமைகளிலும் கூட இவ்விதியைத் தளர்த்தி அரசு அலுவல்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென அமைச்சர் ஒருவரால் கொண்டுவரப்பெறும் தீர்மானத்தைப் பேரவை ஏற்று அவ்வாறே அனுமதிக்கலாம்.

எனினும், இவ்வாறு எந்த வியாழக்கிழமையேனும் அரசு அலுவலுக்கென எடுத்துக்கொள்ளப்பெறுமானால் அதற்குப் பதிலாக அதே வாரத்தில் அல்லது அடுத்த வாரத்தில் வேறொரு நாளை தனி உறுப்பினர் அலுவலுக்கென பேரவைத் தலைவர் ஒதுக்கலாம்.

(2) பேரவை முன்னவரின் இசைவின்றி மற்ற நாட்களில் அரசு அலுவலைத் தவிர வேறு எந்த அலுவலையும் எடுத்துக் கொள்ளலாகாது.

அரசு அலுவல் வரிசை முறை.

34. அரசு அலுவல்கள் பேரவை முன்னவர் முடிவு செய்யும் வரிசையில் அமைக்கப்பெற வேண்டும்.

தனி உறுப்பினர் அலுவல் வரிசை முறை

35. (1) தனி உறுப்பினரின் அலுவல்கள் கீழ்க்காணும் வரிசையில் அமைக்கப்பெற வேண்டும்.

(அ) சட்டமுன்வடிவுகள் அவை அடைந்துள்ள நிலைக்கேற்ப வரிசையாக எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும், அதாவது—

(i) ஆளுநரால் அரசமைப்புச் சட்டத்தின் 200 ஆவது பிரிவின்படி, செய்தியுடன் திருப்பியனுப்பப்பெற்ற சட்டமுன்வடிவுகள்;

(ii) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப் பெற்றுள்ள சட்டமுன்வடிவுகள்;

(iii) ஆய்வுக் குழு அறிக்கை கொடுத்துள்ள சட்டமுன்வடிவுகள்;

(iv) கருத்துக்கள் பெற வேண்டி சுற்றுக்கு அனுப்பப்பெற்று வந்துள்ள சட்டமுன்வடிவுகள்;

(v) அறிமுகப்படுத்தப்பெற்று மற்ற கட்டங்களுக்கு மேற்கொண்டு அறிவிப்புகள் வராமலோ அல்லது நிறைவேற்றப்பெறாமலோ இருக்கும் சட்டமுன்வடிவுகள்;

(vi) அறிமுகப்படுத்த அனுமதி கோரும் தீர்மானம் வந்துள்ள சட்டமுன்வடிவுகள்.

(ஆ) தனித் தீர்மானங்கள்

(2) ஒரே மாதிரி நிலையை அடைந்துள்ள சட்டமுன்வடிவுகளுக்குப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பெற்ற வரிசைப்படி முன்னுரிமை அளிக்கப் பெறும்.

(3) அறிமுகப்படுத்தப்பெற வேண்டிய சட்டமுன்வடிவுகளும் தனித் தீர்மானங்களும் எவ்வரிசைப்படி இடம்பெற வேண்டும் என்பது தனித்தனியே குலுக்குச் சீட்டுப்போட்டு முடிவு செய்யப்பெற வேண்டும்.

(4) சட்டமுன்வடிவுகளை அறிமுகப்படுத்த அனுமதி கோரி முன்னறிவிப்புக் கொடுத்துள்ள அல்லது விவாதத்திற்கு தகுதி பெற்றுள்ள தனித் தீர்மானங்களுக்கு முன்னறிவிப்புக்கொடுத்துள்ள உறுப்பினர்களது பெயர்கள் அடங்கியனவாக குலுக்குச் சீட்டுகள் இருக்க வேண்டும்.

(5) ஓர் உறுப்பினரின் பெயரை ஒரு சட்டமுன்வடிவிற்கும், ஒரு தனித் தீர்மானத்திற்கும் மட்டுமே குலுக்குச் சீட்டில் சேர்த்துக் கொள்ளலாம். எந்த சட்டமுன்வடிவு அல்லது எந்தத் தீர்மானம் அந்த உறுப்பினர் பெயரில் சேர்க்கப்பெற வேண்டுமென்பது அந்த உறுப்பினரின் விருப்பத்தைப் பொருத்ததாகும். அவ்வாறு விருப்பம் தெரிவிக்கப்பெறாவிடில், முன்னறிவிப்புகள் வந்து சேர்ந்த கால வரிசைப்படி அவை சேர்க்கப்பெறும்.

(6) மேற்கூறிய குலுக்குச் சீட்டு எவ்வப்போது நடைபெற வேண்டும் என்பது பேரவைத் தலைவரால் முடிவு செய்யப்பெறும்.

(7) குறிப்பிட்ட நாளன்று எடுத்துக்கொள்ளப்பெற வேண்டிய தனி உறுப்பினர் அலுவல்களில் எடுத்துக்கொள்ளப்பெறாத அலுவல்கள் யாவும் அக்கூட்டத் தொடரில் அதே வகையான அலுவல்களுக்கென ஒதுக்கப்பெற்ற அடுத்த நாளுக்கு ஒத்திவைக்கப்பெறும். அந்த அலுவல்கள் யாவும், அடுத்துவரும் கூட்ட நாளுக்கான குலுக்குச் சீட்டில், அதே உறுப்பினர்



பெயரில் சேர்க்கப்பெற வேண்டும். அக்குலுக்குச் சீட்டில் தேர்ந்தெடுக்கப்பெற்று முடிவு செய்யப் பெறுவதற்கிணங்க அடுத்த நாளுக்கு அவை வரிசைப்படுத்தப்பெறும்.

எனினும், பேரவை ஒத்திவைக்கப்பெறும்போது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்று முடிவு பெறாமலிருக்கும் அலுவல், தனி உறுப்பினர் அலுவலுக்கென ஒதுக்கப்பெறும் அடுத்த நாளில் அதே வகையான அலுவல் பட்டியலில் முதல் இனமாக இவ்விதியின்படி சேர்த்துக்கொள்ளப்பெற வேண்டும்.

(8) இவ் விதியை நடைமுறைப்படுத்தும்போது சிக்கல் ஏதேனும் எழுந்தால் அது பேரவைத் தலைவரின் முடிவுக்கு விடப்பெற வேண்டும். அவரது முடிவே இறுதியானது.

பேரவைக்கு முன்னறிவிப்பு.

36. (1) வேறுவிதமான வகை செய்திருந்தாலன்றி, இவ்விதி களின்படி கொடுக்கப்பெற வேண்டிய ஒவ்வொரு முன்னறிவிப்பும் எழுத்து மூலமாக செயலாளருக்கு முகவரியிட்டு பேரவைச் செயலகத்தில் சேர்க்கப்பெற வேண்டும். இதற்கெனச் செயலகம் ஞாயிற்றுக்கிழமை மற்றும் பொது விடுமுறை நாட்களைத் தவிர சட்டமன்றப் பேரவை கூடும் நாட்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரையிலும் மற்றும் எல்லா அலுவல் நாட்களிலும் முற்பகல் 11 மணியிலிருந்து பிற்பகல் 3 மணி வரை திறந்திருக்கும்.

(2) அரசமைப்புச் சட்டத்தின் 188-வது பிரிவின்படி பிரமாணம் அல்லது உறுதிமொழி எடுத்துக்கொள்ளாத உறுப்பினர், இவ்விதியின்கீழ் முன்னறிவிப்புக் கொடுக்கலாம். ஆயினும், அந்த முன்னறிவிப்பு அவர் அந்த பிரமாணம் அல்லது உறுதிமொழி எடுத்துக்கொள்வதற்கு முன்னதாக பேரவையின் அலுவல் பட்டியலில் இடம் பெறலாகாது.

(3) விடுமுறை நாளிலோ அல்லது பேரவை கூடும் நாளில் பிற்பகல் 2 மணிக்குப் பின்போ அல்லது பேரவைக் கூட்டம் இல்லாத நாட்களில் பிற்பகல் 3 மணிக்குப் பின்போ கொடுக்கப்பெறும் முன்னறிவிப்பு அடுத்த அலுவல் நாளன்று கொடுக்கப்பெற்றதாகக் கருதப்பெறும்.

(4) உறுப்பினரால் செயலாளருக்கு அனுப்பப்பெறும் ஒவ்வொரு முன்னறிவிப்போ, கடிதமோ நல்ல தாளில் தெளிவாகத் தெரியும்படி எழுதப்பெற்று உறுப்பினரின் கையொப்பமும் இடப்பெற்று அவர் பெயரும் உடையதாக இருத்தல் வேண்டும். இல்லையெனில் அது மறுக்கப்பெறலாம்.

(5) கொடுக்கப்பெறும் முன்னறிவிப்பினைப் பேரவைத் தலைவர் அனுமதித்து உறுப்பினர்களுக்கு அனுப்பாதவரை அதனை உறுப்பினரோ அல்லது வேறு எவரோ வெளியிடக்கூடாது.

மேலும், ஒரு வினா விடையளிக்கப் பெறுவதற்காக வினாப் பட்டியலில் பேரவைத் தலைவரால் சேர்க்கப்பெறும்வரை அவ்வினாவின் பொருளடக்கத்தை எம்முறையிலும் வெளியிடலாகாது.

(6) வேறு வகையில் குறிப்பிட்டாலன்றி இவ்விதிகளின் கீழ் கொடுக்கப்பெறும் எந்த ஒரு முன்னறிவிப்பும் குறிப்பிட்ட காலத்திற்குள் இவ்வலுவலக அறிவிப்புப் பிரிவில் சேர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு சேர்க்கப்படாத முன்னறிவிப்பு செல்லத்தக்கதாகாது.

உறுப்பினர் களுக்கு அனுப்பப் பெறும் கடிதங்களும் முன்னறி விப்புகளும்.

37. உறுப்பினர் ஒருவர் வேறுவிதமாக எழுத்து மூலமாக கேட்டுக்கொண்டாலன்றி பேரவைச் செயலகத்திலிருந்து அவருக்கு அனுப்பப்பெறும் அறிவிப்புகளும் மற்ற கடிதங்களும்....

(அ) கூட்ட நாட்களிலும் கூட்டத்திற்கு முந்திய இரண்டு நாட்களிலும் பேரவை கூடும் இடத்திலுள்ள அவரது முகவரிக்கு அனுப்பப்பெறும்.

(ஆ) மற்ற நாட்களில் பேரவைச் செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட அவர்களது நிலையான முகவரிக்கு அனுப்பப்பெறும்.

மேலும், கூட்ட நாட்களில் மேற்கூறிய அறிவிப்பு அல்லது கடிதம் உறுப்பினர்களுக்கென பேரவையில் ஒதுக்கப்பெற்ற இருக்கைகளில் வைக்கலாம் அல்லது நேரில் வழங்கலாம்.



# அத்தியாயம் 7

## வினாக்கள்

வினாக்களின் பொருள்

38. அமைச்சர் ஒருவரின் அதிகார வரம்பில் உள்ள குறிப்பிட்ட பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள் ஒன்றினைக் குறித்து தகவல் பெறுவதற்கு அந்த அமைச்சரிடம் எந்த உறுப்பினரும் வினா கேட்கலாம்.

உடுக்குறி யிட்ட மற்றும் உடுக்குறி யிடாத வினாக்கள்

39. வாய்மொழி விடையை விரும்பும் உறுப்பினர் தமது வினாவினை உடுக்குறியிட்டு (*) தனிப்படுத்தி அனுப்ப வேண்டும். அவ்வாறு உடுக்குறியிட்டு தனிப்படுத்தாத வினாவாக இருப்பின், அவ்வினா, அனுமதிக்கப்பெற்றால், உடுக்குறியிடாத வினாப்பட்டியலில் அச்சிடப்பெற்று எழுத்து மூலமாக விடை அளிக்கப்பெறும்.

வினா உடுக்குறி யிட்டதா, இடாததா என்பதை பேரவைத் தலைவர் முடிவு செய்தல்.

40. உடுக்குறியிட்ட முன்னறிவிப்பு கொடுக்கப்பெற்ற வினாவிற்கோ, வாய்மொழி விடைக்கென அனுமதிக்கப்பெற்ற வினாவிற்கோ, எழுத்து மூலமாக விடையளிப்பதே பொருத்தமாக இருக்கும் எனப் பேரவைத் தலைவர் கருதுவாரேயானால் அவ்வினாவை உடுக்குறியிடாத வினாவாக மாற்றி எழுத்து மூலமான விடைக்குரிய வினாப்பட்டியலில் சேர்க்கலாம். இதில் பேரவைத்தலைவரின் முடிவே இறுதியானதாகும்;

என்றாலும், ஒரு வினா உடுக்குறியிட்ட வினாவாக அனுமதிக்கப்பெற்றபின் பேரவைத் தலைவர் விரும்புவாரேயானால் அவ்வினாவிற்கு வாய்மொழியாக விடையளிக்க வேண்டுமென முன்னறிவிப்பு கொடுத்த உறுப்பினரை அவ்வாறு அவர் விரும்பியதற்கான காரணங்களை சுருக்கமாகக் கூறுமாறு கேட்டு அறிந்து அக்காரணங்களை ஆய்ந்தபிறகு, அவ்வினாவை எழுத்து மூல விடைக்கான வினாப்பட்டியலில் சேர்க்கலாம்.

வினாவிற் குரிய பொருள்

41. ஒரு அமைச்சரிடம் கேட்கப்பெறும் வினா அவருக்கு அதிகாரத் தொடர்புள்ள பொதுக் காரியங்கள் பற்றியதாகவோ அவரது அதிகாரப் பொறுப்பிலுள்ள நிர்வாகக் காரியங்கள் பற்றியதாகவோ அவற்றின் தொடர்பாக அவரிடம் உள்ள தகவலைப் பற்றியதாகவோ இருத்தல் வேண்டும்.

வினாக்களின் வடிவமைப்பு மற்றும் பொருள் அடக்கம்.

42. வினா ஒன்று அனுமதிக்கப்பெற வேண்டுமாயின் அது பின்வரும் வரையறைகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்;

(1) அரசமைப்புச் சட்டத்தின்படியும் இவ்விதிகளின்படியும் அனுமதிக்கப் பெறக்கூடியதாக இருத்தல் வேண்டும்;

(2) வினாவைத் தெளிவுபடுத்துவதற்குத் தேவையில்லாத ஒரு பெயரையோ ஒரு விவரத்தையோ வெளியிடுவதாக இருக்கக் கூடாது;

(3) ஏதேனும் விவரம் ஒன்றினை வினா உள்ளடக்கியிருப்பின் அந்தவிவரம் முழுவதும் சரியானது என்பதற்கு அவ்வினாவை எழுப்பும் உறுப்பினரே பொறுப்பேற்க வேண்டும்;

(4) செய்தித்தாள்களிலிருந்து திரட்டப்பட்டவற்றை உள்ளடக்கியிருத்தல் கூடாது;

(5) வாதங்கள், யூகங்கள், மறைமுகமான குற்றச்சாட்டுகள், கேலிச் சொற்கள், அவதூறுக் கூற்றுகள் ஆகியவற்றைக் கொண்டிருத்தல் கூடாது;

(6) எதைப்பற்றியும் கருத்தைத் தெரிவிக்கும்படியோ சட்ட நுணுக்கப் பிரச்சினைக்கு அல்லது கற்பனை பிரச்சினைக்குத் தீர்வு காணும்படியோ கோருதல் கூடாது;

(7) ஒருவரது பதவி அல்லது பொதுவாழ்வைப் பற்றியல்லாது அவரது தனிப்பட்ட ஒழுக்கம் அல்லது நடத்தை பற்றியதாக இருக்கக்கூடாது;

(8) தனிப்பட்டவர்களின் குறைகளைப் பற்றியதாகவோ முற்றிலும் தனி இடத்தைச் சார்ந்த குறைகளைப் பற்றியதாகவோ இருக்கக் கூடாது;

(9) எந்த ஒரு நீதிமன்றத்தின் விசாரணையில் இருக்கும் வழக்கைப் பற்றியதாக இருக்கக்கூடாது. மேலும், உச்ச நீதிமன்ற அல்லது உயர்நீதிமன்ற நீதிபதியின் நீதி வழங்கும் அலுவலைப் பொறுத்த நடத்தை பற்றியதாகவும் இருக்கக் கூடாது;

(10) மிக நீண்டதாக இருக்கக்கூடாது.

(11) பேரவையில் ஏற்கெனவே விடையளிக்கப்பெற்ற அல்லது விடை மறுக்கப்பெற்ற வினாக்களின் பொருள் பற்றியதாக இருக்கக்கூடாது;

(12) விடையில் அடக்க முடியாத அளவிற்குப் பரந்த ஒரு கொள்கை விளக்கத்தைக் கேட்பதாக அமையக்கூடாது;



(13) அமைச்சரவைக் கூட்ட நடவடிக்கைகளைப் பற்றிய தகவலைக்கோருவதாக இருக்கக்கூடாது;

(14) அற்பமான பொருள்களைப் பற்றிய தகவலைக் கேட்பதாக இருக்கக் கூடாது;

(15) சாதாரணமாக பழைய வரலாறு குறித்த தகவல்களைக் கேட்பதாக இருக்கக் கூடாது;

(16) எளிதாகக் கிடைக்கக்கூடிய ஆவணங்களிலோ பொருள் விவர நூல்களிலோ கிடைக்கக்கூடிய தகவல்களை வேண்டுவதாக இருக்கக்கூடாது;

(17) சட்டப்படி அமைக்கப்பெற்ற விசாரணைக்குழு, நீதிமன்றமாக அல்லது பகுதி நீதிமன்றமாக இயங்க சட்டப்படி அமைக்கப்பெற்ற ஆணைக்குழு அல்லது ஆய்வதற்காகவோ, புலனாய்வதற்காகவோ அமைக்கப்பெற்ற குழு ஆகியவற்றின் ஆய்வில் இருக்கும் ஒரு பொருள் பற்றிய தகவலைச் சாதாரணமாக கேட்கக் கூடாது; ஆயினும், அவற்றின் ஆய்வுக்கு எந்தவித குந்தகமும் ஏற்படுத்தாதவாறு இருப்பின், அவைகள் கடைப்பிடிக்கும் முறை பற்றியதாகவோ எப்பொருளைப்பற்றி ஆராய அமைக்கப் பெற்றன என்பதைப் பற்றியதாகவோ விசாரணை எந்நிலையில் உள்ளது என்பதைப் பற்றியதாகவோ அமையலாம்.

(18) ஒரே பொருள் குறித்து சிறு மாற்றங்களுடன் மீண்டும் மீண்டும் கேட்கக்கூடாது;

(19) சட்டமன்றக் குழு அல்லது அரசு அமைத்த குழுவின் ஆய்வில் இருக்கும் பொருள் பற்றிய தகவலை, அக்குழுவின் அறிக்கை வெளியிடப்பெறும் வரையில் சாதாரணமாகக் கேட்கக்கூடாது; மேலும்,

(20) பொது நலனைக் கருதி வெளிப்படுத்தக்கூடாத அந்தரங்கமான அல்லது இரகசியமான எந்த ஒரு பொருளைப்பற்றியும் தகவல் கோருவதாக இருக்கக்கூடாது.

ஒரே பொருள் பற்றிய வினாக்கள்.

43. ஓர் உறுப்பினரின் வினா அனுமதிக்கப்பெற்றபின் அதே பொருள் பற்றிய வினாக்களுக்கு வேறு உறுப்பினர்கள் முன் அறிவிப்புக் கொடுப்பார்களேயானால் எல்லா உறுப்பினர்களின் பெயர்களையும் இணைத்து பொதுவான விடை ஒன்றை அளிக்கலாம்.

*வினாக்கள் அனுமதிப்பது பற்றி பேரவைத் தலைவர் முடிவு செய்தல்.*

*44. (1)* ஒருவினா அனுமதிக்கத்தக்கதா என்பதைப் பேரவைத் தலைவர் முடிவு செய்வார். ஒருவினா விதிகளுக்கு முரணானது என்றோ அல்லது அதை எழுப்பும் உறுப்பினர் தம் உரிமையைத் தவறாகப் பயன்படுத்துகிறார் என்றோ பேரவைத் தலைவர் கருதினால் அவ்வினாவிற்கு அனுமதி மறுக்கலாம்.

*(2)* ஒரு வினாவின் பொருள் அல்லது வடிவமைப்பு விதிகளுக்கு முரணானது எனப் பேரவைத் தலைவர் கருதினால் அவ்வினாவை விதிகளுக்கு ஏற்ப மாற்றம் செய்து, அனுமதித்து, அதனை சம்பந்தப்பட்ட உறுப்பினருக்குத் தெரிவிக்கலாம்.

*வினாப் பட்டியல்.*

*45.* வினாக்களின் முன்னறிவிப்பு செயலாளருக்குக் கிடைத்த 15 நாட்களுக்குள்ளாக, அவைகள் இயல்பாக அனுமதிக்கப்பெற்று உரிய துறைக்கு அனுப்பப்பெற வேண்டும். அனுமதிக்கப்பெற்ற வினாக்கள் பேரவைத் தலைவரால் அனுமதிக்கப்பெற்ற நாளிலிருந்து 42-வது நாள் அல்லது அதற்குள்ளாக வினாப்பட்டியலில் சேர்க்கப்பெற வேண்டும்.

எனினும், வினா ஒன்றுக்கான விடையை அது அனுமதிக்கப் பெற்ற நாளிலிருந்து 42 நாட்களுக்குள் செயலாளருக்கு அனுப்பிவைக்க முடியாவிடில் அதற்குத் தகுந்த காரணங்கள் காட்டப் பெற்றால், பேரவைத் தலைவர் மேலும் இரண்டு வாரங்களுக்கு மேற்படாமல் விடை அனுப்ப வேண்டிய கால அளவை நீட்டிக்கலாம்; அப்படி நீட்டிக்கப்பெற்ற காலம் முடிந்ததும் அவ்வினா, வினாப்பட்டியலில் சேர்க்கப்பெற வேண்டும்.

*உடுக்குறியிட்ட வினாக்களை எடுத்துக் கொள்ளும் வரிசை முறை.*

*46. (1)* ஒரு நாளைக்கு சேர்க்கப்பெற்ற உடுக்குறியிட்ட வினாக்கள், வினாப் பட்டியலில் உள்ள வரிசைப்படி எடுத்துக் கொள்ளப்பெறும்.

*(2)* வாய்மொழி விடைக்காக, எந்த ஒரு நாளிலும் ஒரே உறுப்பினரது பெயரில் இரண்டிற்கும் மேற்பட்ட உடுக்குறியிட்ட வினாக்களை வினாப்பட்டியலில் சேர்க்கக் கூடாது;

மேலும், அந்நாளுக்கான வினாப் பட்டியலில், ஏதேனும் ஒரு வினாவிற்கு ஒன்றிற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் பெயர்கள் இணைக்கப்பெற்றிருக்குமானால், மேற்கண்ட விதிக்காக எந்த உறுப்பினரின் பெயர் அந்த இணைப்பில் முன்னதாக உள்ளதோ அவர் அவ்வினாவை கொடுத்தவராகக் கருதப்பெறுவார்.



*(3)* வினா ஒன்றை எடுத்துக்கொள்ளும்போது அந்த வினாவிற்கு முன்னறிவிப்புக் கொடுத்த உறுப்பினர் பேரவையில் இல்லாமற்போனால் வேறு எந்த உறுப்பினரின் வேண்டுகோளின்பேரிலும் பேரவைத் தலைவர் அவ்வினாவிற்கான விடையை அளிக்கும்படி செய்யலாம்.

*(4)* வினாக்கள் யாவும் வரிசைப்படி எடுத்துக் கொள்ளப்பெற்று, முடிவடைந்தபின், உறுப்பினர் இல்லாத காரணத்தால் விடுபட்டுப்போன வினா ஏதேனும் இருப்பின், நேரமும் இருந்தால், உரிய உறுப்பினர் வந்திருந்தால் அவ்வினாவை எழுப்ப அவரைப் பேரவைத் தலைவர் அனுமதிக்கலாம்.

*(5)* விடையளிக்கப்பெறாத அனைத்து உடுக்குறியிட்ட வினாக்களும், அனைத்து உடுக்குறியிடாத வினாக்களும் அவற்றின் விடைகளுடன் பேரவை நடவடிக்கைகள் பணித்துறை வெளியீட்டில் சேர்க்கப்பெற வேண்டும்.

*(6)* உரிய அமைச்சரது வேண்டுகோளின்பேரில் ஒரு நாளின் வினாப்பட்டியலில் சேர்க்கப்பெற்ற வினா அல்லது வினாக்களைப் பேரவைத் தலைவர் வேறொரு நாளுக்கு ஒத்திவைக்கலாம்.

*நீண்ட அறிக்கைகள் அல்லது புள்ளி விவரங்கள் கோரும் வினாக்கள்*

*47. (அ)* நீண்ட அறிக்கைகள் அல்லது புள்ளி விவரங்கள் கோரும் வினாக்கள் உடுக்குறியிடப்பெறக்கூடாது.

*(ஆ)* ஒரு உடுக்குறியிட்ட வினாவிற்கு அளிக்கப்பெறும் விடை நீண்டதாகவோ, மிகுந்த புள்ளி விவரங்களைக் கொண்டதாகவோ இருப்பின், வாய்மொழியாக விடையளிப்பதற்குப் பதிலாக, அதைப் பேரவை மேசையின்மீது வைக்க வேண்டுமென்றும், பேரவை நடவடிக்கைகள் பணித்துறை வெளியீட்டில் சேர்க்கப்பெற வேண்டுமென்றும், பேரவைத் தலைவர் ஆணையிடலாம்.

*வினாக்கள் வினவும் முறை.*

*48.* விதிகளுக்குட்பட்டு வினாக்கள் பேரவைத் தலைவர் தம் உசிதப்படி தீர்மானிக்கிற வகையில் வினவப்பெற்று விடைகள் அளிக்கப்பெற வேண்டும்.

*துணை வினாக்களும் அவைகளை அனுமதித் தலும்*

*49. (1)* உடுக்குறியிட்ட வினாவிற்கு அளிக்கப்பெற்ற விடையின் மீது மேற்கொண்டு விளக்கம் பெறும் வகையில் வினாவிற்கு முன்னறிவிப்பு கொடுத்த எந்த உறுப்பினரும் துணை வினா அல்லது வினாக்களைக் கேட்கலாம்.

மேலும், பேரவைத் தலைவர் தம் விருப்பப்படி மற்ற உறுப்பினர்களையும் துணை வினாக்கள் கேட்பதற்கு அனுமதி அளிக்கலாம்.

(2) பேரவைத் தலைவர் எந்த ஒரு துணை வினாவையும்-

(அ) வினாக்கள் குறித்த விதிகளை அது மீறுவதாக உள்ளது எனக் கருதினால், அல்லது

(ஆ) அதே வினா குறித்து நியாயமான அளவு போதிய துணை வினாக்களுக்கு இடம் அளிக்கப் பெற்றுவிட்டதாகக் கருதினால் அனுமதிக்க மறுக்கலாம்.

*வினா அல்லது துணை வினாவிற்கு விடையளிக்க மறுத்தல்*

50. (அ) பொது நலனுக்கு ஒவ்வாது என்ற காரணத்தினால், ஒரு வினாவிற்கோ, துணை வினாவிற்கோ விடையளிக்க அமைச்சர் மறுக்கலாம்.

(ஆ) முன்னறிவிப்பு வேண்டுமென்ற காரணத்தினால் துணை வினா ஒன்றுக்கு விடையளிக்க அமைச்சர் மறுக்கலாம்.

*ஒரு கூட்டத் தொடர் அல்லது கூட்ட இறுதியில் நிலுவையில் உள்ள வினாக்கள்*

51. பேரவைத் தலைவர் தம் உசிதப்படி ஒரு கூட்டத்தொடரின் முடிவிலோ அல்லது ஒரு கூட்டத்தின் முடிவிலோ விடையளிக்கப்பெறாமல் நிலுவையில் இருக்கும் வினாக்களை உடுக்குறியிடாதவைகளாக மாற்றி, அவற்றுக்கான விடைகளை பேரவை மேசையின் மீது வைக்கலாம் என்று ஆணையிடலாம்.

*குறுகியகால வினாக்கள்*

52. (1) பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருளைப்பற்றி உரிய அமைச்சரது இசைவுடன் 7 நாட்களுக்குக் குறைவான முன்னறிவிப்போடு வினா ஒன்றைக் கேட்கலாம்.

(2) அந்த 7 நாட்களுக்குள், உரிய அமைச்சரால் குறிப்பிடப்பெறும் நாளில், அத்தகைய வினாக்களுக்கான விடைகள் அளிக்கப்பெறவேண்டும். அந்நாள் வினாப் பட்டியலில் கண்டுள்ள வாய்மொழி விடைக்கான வினாக்கள் முடிந்தவுடன், இவ்வினாக்கள் எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.

(3) பேரவைக் கூட்டத்திற்கான நாள் குறிப்பிடப் பெறாத காலத்திலும், நாள் குறிப்பிட்டிருந்தால், அந்நாளுக்கு 10 நாட்களுக்கு முன்னரும், குறுகிய கால வினாவிற்கான முன்னறிவிப்புகள் ஏற்றுக்கொள்ளப் பெறலாகாது. அத்தகைய முன்னறிவிப்புகள் நாள் ஒன்றுக்கு ஒரு உறுப்பினரிடமிருந்து ஒன்றுக்கு மேல் ஏற்றுக்கொள்ளப் பெறலாகாது.



(4) இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் ஒரே பொருள் பற்றிய குறுகிய கால வினாக்கள் கொடுத்து, அவற்றுள் ஒன்று குறுகிய காலத்தில் விடையளிக்கப்பெறுவதற்கு ஏற்றுக்கொள்ளப் பெற்று இருக்குமேயானால், அவ்வினாவிற்கு முன்னறிவிப்பு கொடுத்தவரின் பெயரோடு மேற்கொண்டு நான்கிற்கு மேற்படாத உறுப்பினர்களின் பெயர்களும் அவர்களின் முன்னறிவிப்புகள் கிடைத்த கால வரிசைப்படி சேர்த்துக் கொள்ளப் பெறவேண்டும்.

(5) குறுகிய கால வினா ஒன்றுக்கு உரிய அமைச்சர் அக்குறுகிய காலத்தில் விடையளிக்க இயலாவிடின், அவ்வினா வாய்மொழி மூலம் விடையளிக்கப்பெற வேண்டிய அளவிற்குப் போதிய பொது முக்கியத்துவம் வாய்ந்தது எனப் பேரவைத் தலைவர் கருதினால், அவ்வினாவை 45-வது விதிக்கிணங்க விடையளிக்கப்பெற வேண்டிய நாளுக்குரிய வினாப்பட்டியலில் சேர்த்துக் கொள்ளப் பேரவைத் தலைவர் ஆணையிடலாம்.

(6) குறுகிய கால வினா ஒன்றுக்கு முன்னறிவிப்புக் கொடுக்கும் உறுப்பினர் அவ்வினாவைக் குறுகிய கால முன்னறிவிப்புடன் கேட்பதற்கான காரணங்களைச் சுருக்கமாகக் குறிப்பிட வேண்டும். அவ்வாறு காரணங்கள் எதுவும் தெரிவிக்காவிட்டால், அவ்வினா, அவ்வுறுப்பினருக்குத் திருப்பியனுப்பப் பெறும்.

*வினா நேரத்தில் விவாதக் கட்டுப்பாடு*

53. வினா நேரத்தில் ஒரு வினா அல்லது ஒரு வினாவிற்கு அளித்த விடையைப் பற்றி எவ்வித விவாதமும் அனுமதிக்கப்பெறலாகாது.

எனினும், அந்நாள் வினா ஒன்றில் எழுப்பப் பெற்ற அவசர முக்கியத்துவம் வாயந்த பொருள் பற்றி விவாதிக்க வேண்டுமென வினா நேரத்தில் கோரியதின் மேல் பேரவைத் தலைவர், தம் உசிதப்படி அதற்கென அந்நாளைய அலுவல் முடிந்த பின்போ அன்றி அவர் தீர்மானிக்கிற மற்றொரு நாளிலோ அரை மணி நேரத்தை ஒதுக்கலாம். அதற்கென ஒதுக்கப்பெற்ற நேரத்தில் வேறு எந்த அலுவலும் நடைபெறலாகாது. அவ்விவாதத்தின் மீது வாக்கெடுப்பும் கூடாது.

அரை மணி நேர விவாதம்

*54. (1)* முன்னறிவிப்பு கொடுக்கப்பெறும் நாளுக்கு முன் ஐந்து நாட்களுக்குள்ளாக வாய்மொழியாக அல்லது எழுத்து மூலமாக கொடுக்கப்பெற்ற விடையின் பொருள் போதிய முக்கியத்துவம் உள்ளதாக இருந்து, மேலும், அப்பொருள் பற்றிய விளக்கம் தேவைப்பட்டால், அது பற்றிய விவாதத்திற்கென வாரத்தில் மூன்று கூட்டங்களில் அரை மணி நேரத்தைப் பேரவைத் தலைவர் ஒதுக்கலாம்.

*(2)* அவ்வாறு விவாதத்தை எழுப்ப விரும்பும் உறுப்பினர் ஒருவர், எந்த நாளில் அது பற்றி விவாதிக்க வேண்டுமென்று விரும்புகிறாரோ, அந்நாளுக்கு இரண்டு நாட்கள் முன்னதாகச் செயலாளருக்கு எழுத்து மூலமாக முன்னறிவிப்பு கொடுக்க வேண்டும். அதில் எந்தெந்த முக்கியக் கூறுகள் பற்றி விவாதம் எழுப்ப விரும்புகிறார் என்பதையும், விவாதம் கோருவதற்கான காரணங்களையும் சுருக்கமாகக் குறிப்பிட வேண்டும்.

எனினும், அவ்வாறு கொடுக்கபெறும் முன்னறிவிப்பில் ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் கையொப்பமிட்டிருப்பின் முதலில் கையொப்பமிட்ட உறுப்பினரால் மட்டுமே அந்த முன்னறிவிப்பு கொடுக்கப் பெற்றதாகக் கருதப்படும்.

மேலும், இதற்கு வேண்டிய முன்னறிவிப்புக் காலத்தையும் பேரவைத் தலைவர் உரிய அமைச்சர் இசைவு பெற்றுத் தளர்த்தலாம்.

*(3)* விவாதம் எழுப்பப்பெறும் அளவிற்கு அப்பொருள் போதிய பொது முக்கியத்துவம் வாய்ந்ததா என்பதைக் குறித்துப் பேரவைத்தலைவர் தீர்மானிக்க வேண்டும். இதில் அவரது முடிவே இறுதியானது.

*(4)* ஒன்றுக்கு மேற்பட்ட முன்னறிவிப்புகள் ஒரே நாளுக்கு வரப்பெற்று, அவைகள் பேரவைத் தலைவரால் அனுமதிக்கப்படுமேயாயின் அவற்றில் ஒரு முன்னறிவிப்பைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு செயலாளர் குலுக்குச் சீட்டு முறையை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப் பெற்ற முன்னறிவிப்பு அந்நாளில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.

*(5)* பேரவையில் அவ்விவாதத்திற்கென முறையான தீர்மானமோ வாக்கெடுப்போ இருத்தல் ஆகாது. அரை மணி நேரமானவுடன் விவாதம் முடிவுறும்.



## அத்தியாயம் 8

## அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள்கள் மீது கவனஈர்ப்பு

அவசர பொது முக்கியத் துவம் வாய்ந்த பொருள்கள் மீது கவன ஈர்ப்பு.

*55. (1)* ஓர் உறுப்பினர், எழுத்து மூலமாக முன்னறிவிப்பு கொடுத்து, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருள் பற்றி அமைச்சரது கவனத்தை ஈர்க்கலாம்.

எனினும், அவ்வாறு முன்னறிவிப்பு கொடுத்த உறுப்பினர் தவிர்க்க முடியாத காரணங்களால் பேரவைக்கு வர இயலாவிடில் அவர் சார்பில் வேறோர் உறுப்பினர் பேரவைத் தலைவரது அனுமதியுடன் அமைச்சரின் கவனத்தை ஈர்க்கலாம்.

மேலும் அவைகள் முக்கியமான பொருள் பற்றியதாக இருப்பின் அவற்றின் மீதான அறிக்கைகளை பேரவையிலே அளிக்க வேண்டுமென பேரவைத் தலைவர் தாமாகவே பணிக்கலாம்.

*(2)* எந்த நாள் கூட்டத்தில் ஒரு பொருள் எழுப்பப்பெற இருக்கிறதோ அதற்கு ஏழு நாட்களுக்கு முன்னதாகக் கொடுக்கப்பெறும் முன்னறிவிப்புகள் ஏற்றுக்கொள்ளப்பெற மாட்டாது.

*(3)* அத்தகைய முன்னறிவிப்பு அனுமதிக்கப்பெற்ற நாளிலிருந்து ஏழு நாட்களுக்குள் எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.

*(4)* அத்தகைய முன்னறிவிப்பு வினாக்களுக்குப் பின்னரும், அலுவல் பட்டியலில் குறிப்பிடப்பெற்ற பிற அலுவல்களைத் தொடங்குவதற்கு முன்னரும் எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும். அதன் மீது அமைச்சர் சுருக்கமான அறிக்கையை அளிக்கலாம்.

*(5)* அளிக்கப்பெற்ற அறிக்கையின் மீது எவ்வித விவாதமும் அப்போது கூடாது. ஆயினும், தெளிவு அல்லது விளக்கம் பெறும் வகையில் அமைச்சரின் கவனத்தை ஈர்த்த உறுப்பினர் இரண்டுக்கு மேற்படாத வினாக்களைக் கேட்பதற்குப் பேரவைத் தலைவர் தம் உசிதப்படி அனுமதிக்கலாம்.

மேலும், எப்பொருள் பற்றியும் நிகழ்ச்சி நிரலில் ஐந்துக்கு மேற்பட்ட உறுப்பினர்களின் பெயர்கள் சேர்க்கப் பெற்றிருந்தால் பேரவைத் தலைவர் தம் உசிதப்படி நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பெற்ற உறுப்பினர்களில் ஏதேனும் ஐந்து உறுப்பினர்களை ஒன்று அல்லது இரண்டு வினாக்கள் தெளிவு அல்லது விளக்கம் பெறும் வகையில் கேட்க அனுமதிக்கலாம்.

*(6)* இவ்விதியின் கீழ் இரண்டிற்கு மேற்பட்ட பொருள்களை ஒரே நாளில் கொண்டு வரலாகாது. அதிலும், முதல் கவன ஈர்ப்பைக் கொண்டுவந்த உறுப்பினரே, இரண்டாவது பொருள் குறித்தும் கொண்டு வரக்கூடாது.

*(7)* ஒரே நாளில் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்கள் கொண்டு வரப்பெற்றால், அதிக அவசர முக்கியத்துவம் உடையன என்று பேரவைத் தலைவர் கருதும் இரண்டுக்கு மட்டும் முன்னிடம் கொடுக்கப்பெறும்; மற்ற முன்னறிவிப்புகள் பேரவைத் தலைவரால் குறிக்கப் பெறும் வேறு ஒரு நாளில் எடுத்துக் கொள்ளப்பெறலாம். அன்றி அக்கூட்டத் தொடரில் எடுத்துக் கொள்ளப்பெற முடியாவிட்டால் அம்முன்னறிவிப்புகளுக்கு அமைச்சர் தந்துள்ள அறிக்கைகள் உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெறலாம்.

*(8)* இவ்விதியின் கீழ் அனுமதிக்கப் பெற்ற முன்னறிவிப்புகள் அக்கூட்டத்தின் கடைசி நாளில் நிலுவையில் இருக்குமேயானால், அந்நாளில் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை இவ் விதியின்படி கொண்டுவருவதற்கு பேரவைத் தலைவர், தம் உசிதப்படி அனுமதிக்கலாம்.

*(9)* அக்கூட்டக் கடைசிநாளில் நிலுவையில் இருக்கும் மற்ற முன்னறிவிப்புகள் எல்லாம் செயலற்றவையாகிவிடும்.

எனினும், அமைச்சர்களிடமிருந்து ஏற்கெனவே அவற்றுக்கு வந்துள்ள அறிக்கைகள் உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற வேண்டும்.



## அத்தியாயம் 9

### பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து விவாதிக்க ஒத்தி வைப்பு தீர்மானம்

ஒத்திவைப்பு தீர்மானம்.

*56.* ஒரு குறிப்பிட்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து விவாதிப்பதற்காகப் பேரவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்ற தீர்மானத்தை இந்த அத்தியாயத்தின் விதிகளுக்கு இணங்க கொண்டு வரலாம்.

பேரவையின் அனுமதி கேட்க பேரவைத் தலைவரின் இசைவு

*57.* ஒரு குறிப்பிட்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து விவாதிப்பதற்காக பேரவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்ற தீர்மானத்தைக் கொண்டுவர விரும்பும் ஓர் உறுப்பினர் அதனை அவர் எடுத்துக் கொள்ள விரும்பும் நாளில் விவாதிக்க இருக்கும் நிகழ்வினைப் பற்றிச் சுருக்கமான விளக்கத்துடன் கூடிய முன்னறிவிப்பின் மூன்று பிரதிகளை பேரவை அலுவலகத்தில் கொடுப்பதாக இருந்தால் பேரவைக் கூட்டம் தொடங்குவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பும் செயலாளரிடத்திலோ அல்லது பேரவைத் தலைவரிடத்திலோ, நேர்முகமாகக் கொடுப்பதாயிருந்தால் பேரவைக் கூட்டம் தொடங்குவதற்கு அரைமணி நேரத்திற்கு முன்பும், பேரவை முன்னவருக்கும், பேரவைத் தலைவருக்கும் சேர்ப்பிக்கப் பெறுவதற்காகக் கொடுக்க வேண்டும். மேலும் அத்தீர்மானத்தை மொழிய பேரவையின் அனுமதியைப் பெற பேரவைமுன் கொண்டுவருவதற்கு பேரவைத் தலைவரின் முன்னிசைவினைப் பெற வேண்டும்.

இசைவு மறுக்கும் அதிகாரமும் மறுப்பு பற்றி உறுப்பின ருக்குத் தெரிவித்தலும்.

*58.* அப்பொருளைப் பேரவையில் எழுப்புவதற்கு பேரவைத் தலைவர் தமது இசைவைத் தர மறுக்கலாம். அவ்வாறு மறுக்கப் பெறின், அதற்கான காரணங்களுடன் அம்மறுப்பை உறுப்பினருக்குத் தெரிவிக்க வேண்டும். அதன்பின், அப்பொருளை அப்படியே, உறுப்பினர் பேரவையில் எழுப்பலாகாது.

தீர்மானத்தை அனுமதிப்பது பற்றி பேரவைத் தலைவர் முடிவு செய்தல்.

*59.* முன்னறிவிப்பில் எழுப்பப் பெற்றுள்ள நிகழ்வினைப் பற்றி விவாதிக்க தமது இசைவினைக் கொடுப்பதற்கு அல்லது மறுப்பதற்கு முன்னர் அது குறித்து முடிவெடுப்பதற்கு தகுந்த போதிய விவரங்கள் தம்மிடத்தில் இல்லையெனப் பேரவைத் தலைவர் கருதுவாரேயானால், வந்துள்ள அறிவிப்பினைப் பேரவைக்கு அறிவித்து, உரிய உறுப்பினர்களிடமும் அமைச்சரிடமும் அதுபற்றி

சுருக்கமானதொரு விளக்கம் கேட்டு அதனை அனுமதிப்பது பற்றிய தமது முடிவை பேரவைத் தலைவர் தெரிவிக்கலாம்.

எனினும், மேற்கண்ட விதியின் கீழ் ஒரு நாளில் ஒரு பொருளுக்கு மேல் பேரவையில் எடுத்துக்கொள்ளக்கூடாது.

மேலும், ஒன்றுக்கு மேற்பட்ட முன்னறிவிப்புகள் வரப்பெறின், அவற்றுள் எதனை அவையில் கொண்டு வருவது மிக முக்கியமெனப் பேரவைத் தலைவர் கருதுகிறாரோ அதனைத் தம் விருப்பப்படி தேர்ந்தெடுப்பார்.

மேலும், இவ்விதிகளின் கீழ் எழுப்பப்பெறும் எப்பொருளையேனும் ஒத்திவைப்புத் தீர்மான வடிவில் கொண்டுவருவதைவிட, வேறு பொருத்தமான வடிவில் கொண்டுவர விதிகளிலே வழி இருக்குமேயானால் அவ்விதிகளின்படி அம்முன்னறிவிப்பை மாற்றியமைக்குமாறு பேரவைத் தலைவர் ஆணையிட்டு, எந்நாளில் அது பேரவையில் எடுத்துக் கொள்ளப்பெறும் என்பதற்கான நாளையும் நிர்ணயித்து, உரிய உறுப்பினருக்குத் தெரிவிக்க வேண்டும். இதில் பேரவைத் தலைவரின் முடிவே இறுதியானதாகும். மேலும் பேரவைமுன் அதே பொருளை எவ்வகையிலும் எழுப்ப முயலக்கூடாது.

*தீர்மானத்தைத் தள்ளுபடி செய்ததற்கான காரணத்தை கூறுதல்.*

60. தீர்மானத்தைத் தள்ளுபடி செய்வதென்று பேரவைத் தலைவர் முடிவு செய்தால், அம்முடிவிற்கான காரணங்களை அவர் தம் உசிதப்படி கூறலாம்.

*பேரவையின் அனுமதியை கோர வேண்டிய நேரம்.*

61. விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பெற இருக்கும் பொருள் முறையானது எனப் பேரவைத் தலைவர் முடிவு செய்யின் இது பற்றி விவாதிக்கப் பேரவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும் என்ற தீர்மானத்தை மொழிவதற்கு பேரவையின் அனுமதியை உறுப்பினர் கோரவேண்டும்.

*பேரவையின் அனுமதியைக் கேட்பதற்கான முறை.*

62. பேரவையின் அனுமதியை அந்த உறுப்பினர் கோரியவுடன் உறுப்பினர் கோரும் அனுமதியை பேரவை அளிக்கிறதா என்று பேரவைத் தலைவர் கேட்க வேண்டும். எவ்வுறுப்பினரேனும் எதிர்ப்புத் தெரிவிப்பின், தீர்மானத்திற்கு ஆதரவாக உள்ள உறுப்பினர்களை அவரவர்கள் இடங்களில் எழுந்து நிற்கும்படி பேரவைத் தலைவர் கேட்டுக் கொள்ள வேண்டும். இருபத்து



நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் எழுந்து நின்று இசைவு அளிப்பின் பேரவையின் அனுமதி உறுப்பினருக்கு அளிக்கப் பெறுகிறது எனப் பேரவைத் தலைவர் அறிவிக்க வேண்டும். இருபத்துநான்குக்கு குறைவான உறுப்பினர்கள் எழுந்து நின்றால் பேரவையின் அனுமதி உறுப்பினருக்கு இல்லையெனப் பேரவைத் தலைவர் அறிவிக்க வேண்டும்.

*தீர்மானத்தை எடுத்துக் கொள்ளும் நேரம்.*

63. தீர்மானத்தை மொழிவதற்குப் பேரவை அனுமதி கொடுத்தால் அத்தீர்மானம் அதே நாளில், பேரவைக் கூட்ட நேரம் முடிவதற்கு 1½ மணி நேரத்திற்கு முன் எடுத்துக் கொள்ளப்பெறும் எனப் பேரவைத் தலைவர் பேரவைக்கு அறிவிக்க வேண்டும்.

*தீர்மானங் களை திரும்பக் கொண்டு வருதல்.*

64. பேரவையின் அனுமதியைப் பெறத் தவறும் தீர்மானம் ஒன்று, அதே கூட்டத் தொடரில் மீண்டும் 56-வது விதியின் கீழ் கொண்டுவரப் பெறலாகாது.

*தீர்மானம் கொண்டு வருவதற்கான வரையறைகள்.*

65. அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு குறிப்பிட்ட நிகழ்வினை விவாதிக்கும் பொருட்டு, பேரவையின் அலுவல்களை ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம் பின்வரும் வரையறைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். அவையாவன:

(i) ஒரு நாள் கூட்டத்தில், 62-வது விதியின்கீழ் ஒன்றுக்கு மேற்பட்ட தீர்மானம் விவாதிக்கப் பெறலாகாது.

(ii) ஒரு தீர்மானத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்வுகளை விவாதிக்கக் கூடாது.

(iii) அண்மையில் நடந்த ஒரு குறிப்பிட்ட நிகழ்வினைப் (Recent occurrence) பற்றியதாக மட்டுமே தீர்மானம் இருத்தல் வேண்டும்.

(iv) அதே கூட்டத் தொடரில் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் வாயிலாகவோ அல்லது வேறு வகையிலோ பேரவையில் விவாதிக்கப்பெற்ற ஒரு பொருள் பற்றி மீண்டும் விவாதம் எழுப்புவதாகத் தீர்மானம் இருத்தலாகாது.

(v) ஆய்வுக்கென்று முன்னரே ஒதுக்கப்பெற்றிருக்கிற ஒரு பொருளைப் பற்றியோ, முன்னரே முன்னறிவிப்புக் கொடுக்கப்பட்டு விரைவில் பேரவை முன்பு வர இருக்கும் நிலையில் உள்ள தீர்மானத்தின் பொருளைப் பற்றியோ, முன்கூட்டியே விவாதத்தை

எழுப்பும்படியானதாகத் தீர்மானம் இருத்தலாகாது.

(vi) தீர்மானம் உரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்புவதாக இருத்தலாகாது.

(vii) அரசமைப்புச் சட்டத்தின்படியோ அல்லது இவ்விதிகளின்படியோ போதிய முன்னறிவிப்புடன் தனித் தன்மையுடைய தீர்மானமாக (Distinct Motion) கொடுக்கப்பெற வேண்டிய ஒரு பொருளைப் பற்றியதாக தீர்மானம் இருத்தலாகாது.

(viii) விவாதிக்கப்பெற இருக்கும் பொருள் சாதாரண சட்ட நிர்வாகத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும்.

(ix) சட்டமியற்றித் தீர்வு காணவேண்டிய குறைகளைப் பற்றியதாக தீர்மானம் இருத்தலாகாது.

(x) தெளிவாக அரசின் பொறுப்புக்குட்பட்ட ஒரு பொருளைப் பற்றியதாகத் தீர்மானம் இருத்தல் வேண்டும்.

(xi) நீதிமன்றத்தின் ஆய்வில் உள்ள எப்பொருள் பற்றியும் தீர்மானம் இருத்தலாகாது.

விசாரணைக் குழு ஆணைக் குழு போன்றவை களின் முன்னுள்ள பொருள்கள் குறித்து விவாதம் எழுப்பும் தீர்மானம்

*66.* சட்டப்படி அமைக்கப்பெற்ற விசாரணைக்குழு, நீதிமன்றமாக அல்லது பகுதி நீதிமன்றமாக இயங்க சட்டப்படி அமைக்கப்பெற்ற ஆணைக்குழு அல்லது ஒரு பொருள் குறித்து ஆய்வதற்காக அல்லது புலனாய்வதற்காக அமைக்கப்பெற்ற குழு அல்லது விசாரணை மன்றம் ஆகியவற்றின் ஆய்வில் இருக்கும் பொருள் குறித்து விவாதம் எழுப்பும் வகையில் அமையும் தீர்மானம் சாதாரணமாக அனுமதிக்கப் பெறலாகாது.

ஆயினும், அவைகள் கடைப்பிடிக்கும் நடைமுறைகள் அல்லது அவற்றின் முன்னுள்ள பொருள்கள் அல்லது விசாரணை எந்நிலையில் உள்ளது என்பதைப் பற்றியதாக இருந்து, அவைகளின் ஆய்வுக்கு குந்தகம் ஏற்படுத்தக் கூடியதாக இருக்காது எனப் பேரவைத் தலைவர் திருப்தி அடைந்தால், அவர் தம் உசிதப்படி அத்தகைய பொருள்பற்றி மட்டும் அவையில் எழுப்புவதற்கு அனுமதிக்கலாம்.

விவாதம் முடிவுற வேண்டிய நேரம்.

*67.* அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு குறிப்பிட்ட நிகழ்வின் மீதான விவாதம் முன்னதாக முடிவடையாவிடில் அவ்விவாதம் தொடங்கிய இரண்டு மணி நேர இறுதியில் தானாகவே முடிவுறும். பிறகு அதையொட்டி எப்பிரச்சினையும் பேரவையின் வாக்கெடுப்பிற்கு விடப்பெறல் கூடாது.



## அத்தியாயம் 10

### பேரவைத் தலைவர் அல்லது துணைத் தலைவரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கான தனித் தீர்மானம்

பேரவைத் தலைவர் அல்லது துணைத் தலைவரை பதவியிலிருந்து நீக்குவதற்கான தீர்மானம்

*68.* பேரவைத் தலைவர் அல்லது துணைத் தலைவரைப் பதவியிலிருந்து நீக்குவதற்காக அரசமைப்புச் சட்டத்தின் *179*-வது பிரிவு *(சி)* உட்பிரிவின்படி தனித் தீர்மானம் ஒன்றினை மொழிய விரும்பும் உறுப்பினர் எழுத்து மூலமாக தீர்மான வடிவுடன் பதினான்கு நாட்கள் முன்னறிவிப்புடன் செயலாளருக்கும் அதன் பிரதி ஒன்றை பேரவைத் தலைவருக்கும் கொடுக்க வேண்டும்.

எனினும், அவ்வாறு தனித்தீர்மானம் மொழிய இருக்கும் எண்ணம் பற்றி, செயலாளருக்கு குறைந்தது *14* நாட்கள் முன்னறிவிப்புக் கொடுக்கப் பெற்றாலன்றி, அதற்கான தனித் தீர்மானம் எதுவும் மொழியப் பெறுதல் கூடாது.

விவாத நேரம்.

*69.* மேற்கண்ட *68*-வது விதியின்படி முன்னறிவிப்பு வரப்பெற்றவுடன் அத்தனித் தீர்மானத்தை மொழிய பேரவையின் அனுமதி கோரும் தீர்மானம் ஒன்று உரிய உறுப்பினர் பெயரில், அரசமைப்புச் சட்டத்தின் *179*-வது பிரிவின்படி தேவைப்படும் *14* நாட்கள் முன்னறிவிப்புக் காலம் முடிவடைந்தவுடன் கூட்டப்பெறும் முதல் கூட்ட நாளில் அலுவல் பட்டியலில் சேர்க்கப்பெற வேண்டும்.

இம்மாதிரியான தீர்மானம் வினா நேரம் முடிவுற்றதும் உடனடியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.

பேரவையின் அனுமதி

*70 (1)* நிர்ணயிக்கப்பெற்ற நாளன்று, பேரவைக் கூட்டத்திற்கு தலைமைவகிப்பவர், அத்தனித் தீர்மானத்தைப் படித்துக் காட்டி, அதைக் கொண்டுவர இசைவளிக்கும் உறுப்பினர்களை அவரவர்கள் இடங்களில் எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொள்ள வேண்டும். *35*-க்குக் குறையாத உறுப்பினர்கள் எழுந்து நின்று இசைவு அளிப்பின் பேரவைக் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பவர் பேரவையின் அனுமதி கிடைத்துள்ளது என அறிவிக்க வேண்டும். *35*-க்கும் குறைவான உறுப்பினர்கள் எழுந்து நிற்பின், அத்தீர்மானத்திற்கான முன்னறிவிப்பு கொடுத்த உறுப்பினருக்கு பேரவை அனுமதியை மறுத்து விட்டது எனத் தலைமை வகிப்பவர் தெரிவிக்க வேண்டும்.

(2) பேரவை அனுமதி அளித்துவிட்டால் அத்தனித் தீர்மானத்தின் மீதான விவாதம் உடனடியாகவோ அல்லது அனுமதித்த நாளிலிருந்து 7 நாட்களுக்கு மேற்படாத ஒரு நாளிலோ நடைபெறுமாறு பேரவையே ஒரு நாளினை நிர்ணயிக்கலாம்.

*69 மற்றும் 70 ஆகிய விதிகளுக்கு உட்படாத தற்குச் சிறப்பு விதி.*

71. விதிகள் 69, 70 ஆகியவற்றில் குறிப்பிடப்பெற்றுள்ளவை கடைப்பிடிக்கப் பெறவில்லையெனில், பேரவை உறுப்பினர் ஒருவரால் கொண்டுவரப்பெறும் தீர்மானத்தின்மீது, 70-வது விதியின்கீழ் பேரவையின் நடவடிக்கைகளை நடத்தி வைப்பதற்காக பேரவைக்கு தலைமை தாங்க ஒருவரை பேரவை தேர்ந்தெடுக்கலாம்.



## அத்தியாயம் 11

### அமைச்சரவையின்மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், பதவி விலகிய அமைச்சரின் விளக்கம்

*அமைச் சரவையின் மீது நம்பிக்கை யின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம்.*

72. (1) அமைச்சரவையின்மீது, நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம் அல்லது அமைச்சரவையின் குறிப்பிட்ட ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம், பேரவைத் தலைவரின் இசைவுடன், பின்வரும் வரையறைகளுக்கு உட்பட்டுக் கொண்டு வரப்பெறலாம், அவையாவன:

(அ) அத்தீர்மானத்திற்கு பேரவையின் அனுமதியை வினாக்கள் முடிந்த பின், அந்நாளைய அலுவல் பட்டியலில் உள்ள அடுத்த அலுவலை எடுத்துக் கொள்வதற்கு முன் கோரலாம்.

(ஆ) பேரவையின் முன் அனுமதியைக் கோரும் உறுப்பினர், தாம் கொண்டுவரப்போகும் தீர்மானத்திற்கு எழுத்து வடிவமான முன்னறிவிப்பை அந்நாளைய கூட்டம் தொடங்குவதற்கு முன்னர் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும்.

(2) அத்தீர்மானம் முறைப்படி உள்ளது எனப் பேரவைத் தலைவர் கருதினால், அதைப் பேரவைக்குப் படித்துக்காட்டி, அதற்கு இசைவு வழங்குவதை ஆதரிக்கும் உறுப்பினர்களை அவரவர்கள் இடங்களில் எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொள்ள வேண்டும். அதன்படி, 24-க்குக் குறையாத உறுப்பினர்கள் எழுந்து நின்று ஆதரவைத் தெரிவிப்பின் பேரவை அனுமதி கொடுத்துவிட்டது என அறிவித்து அனுமதி கோரப்பெற்ற நாளிலிருந்து பத்து நாட்களுக்கு மேற்படாது, அவர் குறிப்பிடுகிற நாளில் அத்தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பெறும் என்றும், அதனை எடுத்துக் கொள்வதற்கான நாளையும் பேரவைத் தலைவர் குறிப்பிட வேண்டும். 24-க்குக் குறைவான உறுப்பினர்கள் எழுந்து நின்றால், பேரவை அனுமதி கொடுக்கவில்லையெனப் உறுப்பினருக்கு பேரவைத் தலைவர் தெரிவிக்க வேண்டும்.

*அமைச்சர் பதவியிலிருந்து விலகிய உறுப்பினரின் விளக்கம்.*

73. (1) அமைச்சர் பதவியை விட்டுவிலகிய உறுப்பினர் பேரவைத் தலைவரின் இசைவைப் பெற்று தாம் பதவியை விட்டு விலகியதற்கான தன்னிலை விளக்கத்தை அளிக்கலாம்.

(2) (அ) வினாக்கள் முடிவுற்றபின், அந்நாளுக்குரிய அலுவல் பட்டியலில் குறிப்பிடப்பெற்றுள்ள பிற அலுவல்கள்

தொடங்கப் பெறுவதற்கு முன்னால் அவ்விளக்கம் அளிக்கப்பெற வேண்டும்.

(ஆ) அவ்வாறு கொடுக்கப்பெற இருக்கும் விளக்கத்தின் பிரதியொன்றைப் பேரவைத் தலைவருக்கும், பேரவை முன்னவருக்கும், விளக்கம் அளிக்க இருக்கும் நாளுக்கு ஒரு நாள் முன்னதாகவே அனுப்பி வைக்க வேண்டும்.

எனினும், எழுத்து மூலமாக இல்லாவிடின், அவ்விளக்கத்தின் சுருக்கத்தை அல்லது முக்கியக் கூறுகளைப் பேரவைத் தலைவருக்கும் பேரவை முன்னவருக்கும் ஒரு நாள் முன்னதாகவே அனுப்பி வைக்க வேண்டும்.

(3) அவ்விளக்கத்தின்மீது, எவ்வித விவாதமும் கூடாது. ஆயினும் அவ்விளக்கத்திற்குப்பின், அதற்குத் தொடர்புடைய பொருத்தமான விளக்கம் ஒன்றை அமைச்சர் ஒருவர் அளிக்கலாம்.



## அத்தியாயம் 12

### நிர்வாகம் பற்றிய அவசரப் பொருள்கள் குறித்து ஒரு மணி நேரத்திற்கு மேற்படாத குறுகியகால விவாதம்

*விவாதம் எழுப்புவதற்கான முன்னறிவிப்பு.*

74. (1) நிர்வாகம் பற்றிய ஒரு அவசரப் பொருள் பற்றி விவாதம் எழுப்ப விரும்பும் உறுப்பினர், அப்பொருள் பற்றி குறிப்பாகவும் தெளிவுறவும் குறிப்பிட்டு எழுத்து மூலமான முன்னறிவிப்பைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும்.

(2) அப் பொருள் பற்றி, விவாதம் எழுப்பப்பெறுவதற்கான காரணங்களுடன் கூடிய விளக்கக் குறிப்பு ஒன்று அந்த முன்னறிவிப்புடன் இணைக்கப் பெற வேண்டும்.

*அனுமதியைப் பேரவைத் தலைவர் தீர்மானித்தல்.*

75. அப் பொருள் பேரவையில் எழுப்பப்பெறத் தக்க அளவிற்குப் போதிய அவசர முக்கியத்துவம் வாய்ந்தது எனப் பேரவைத் தலைவர் கருதினால், அந்த முன்னறிவிப்பை அனுமதித்து, பேரவை முன்னவருடன் கலந்தாலோசித்து அதன் மீது விவாதத்திற்கான நாளை அவர் முடிவு செய்யலாம். மேலும், அதற்கென ஒரு மணி நேரத்திற்கு மேற்படாத காலத்தை ஒதுக்கலாம்.

*அனுமதிப்பதற்கான வரையறைகள்.*

76. இவ்வத்தியாயத்தின்படி, விவாதம் அனுமதிக்கப் பெறுவதற்கான ஒரு பொருள் கீழ்க்காணும் வரையறைகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும். அவையாவன:

(i) திட்டவட்டமான ஒரு குறிப்பிட்ட பொருளை எழுப்புவதாக இருத்தல் வேண்டும்.

(ii) அண்மையில் நடந்த நிகழ்வு ஒன்றைக் குறிப்பதாக மட்டுமே இருத்தல் வேண்டும்.

(iii) உரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்புவதாக இருத்தல் கூடாது.

(iv) அதே கூட்டத்தொடரில் விவாதிக்கப்பெற்ற பொருளைக் குறித்து மீண்டும் விவாதம் எழுப்புவதாக இருத்தல் கூடாது.

(v) அதே கூட்டத்தொடரில் விவாதிக்கப் பெறவேண்டுமென்று முன்னரேயே முடிவு செய்யப்பெற்ற பொருளாகவோ அல்லது அக்கூட்டத் தொடரிலே விவாதத்திற்கு வரக்கூடிய பொருளாகவோ இருத்தல் கூடாது.

(vi) இந்தியாவின் எப்பகுதியிலும் உள்ள நீதிமன்றத்தின் விசாரணையில் உள்ள எப்பொருள் பற்றியதாகவும் இருத்தல் கூடாது.

(vii) சட்டப்படி அமைக்கப் பெற்ற விசாரணைக் குழு, நீதிமன்றமாக அல்லது பகுதி நீதிமன்றமாக இயங்க சட்டப்படி அமைக்கப்பெற்ற ஆணைக் குழு அல்லது ஒரு பொருள் குறித்து ஆய்வதற்காக அல்லது புலனாய்வதற்காக அமைக்கப்பெற்ற குழு ஆகியவற்றின் ஆய்வில் இருக்கும் எப்பொருளோடும் தொடர்புடையதாக இருத்தல் கூடாது.

உரையாற்றுவதற்குக் காலவரம்பு.

*77.* பேரவைத் தலைவர் பொருத்தமெனக் கருதினால் உரைகளுக்கு (Speeches) காலவரம்பு நிர்ணயிக்கலாம்.



## அத்தியாயம் 13

### நாள் குறிப்பிடப் பெறாத தீர்மானங்கள்

பொதுநலன் குறித்த பொருள் பற்றிய விவாதம்.

*78.* அரசமைப்புச் சட்டத்திலோ, இவ்விதிகளிலோ வேறுவிதமாக வகை செய்திருந்தாலன்றி, பொது நலனைக் குறித்த பொருள் பற்றிய விவாதம் ஒரு தீர்மானத்தின் மீது பேரவைத் தலைவரது இசைவு பெற்று நடைபெற வேண்டும்.

தீர்மானத்திற்கான முன்னறிவிப்பு

*79.* தீர்மானத்திற்கான முன்னறிவிப்பு எழுத்து மூலமாகச் செயலாளருக்கு முகவரியிட்டு அனுப்பப்பெற வேண்டும்.

தீர்மானத்தை அனுமதிப்பதற்கான வரையறைகள்.

*80.* தீர்மானம் ஒன்று அனுமதிக்கப்பெற வேண்டுமாயின் அது கீழ்க்கண்ட வரையறைகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும், அவையாவன:—

(i) திட்டவட்டமான ஒரு குறிப்பிட்ட பொருளை எழுப்புவதாக இருத்தல் வேண்டும்.

(ii) வாதங்கள், யூகங்கள், கேலிச் சொற்கள் மறைமுகமான குற்றச்சாட்டுகள் அல்லது அவதூறான கூற்றுகள் அடங்கியிருத்தல் கூடாது.

(iii) ஒருவரது பொது வாழ்க்கையைப் பற்றியதாகவன்றி, அவரது தனிப்பட்ட ஒழுக்கம் அல்லது நடத்தை பற்றியதாக இருத்தல் கூடாது.

(iv) அண்மையில் நடந்த நிகழ்வு ஒன்றைப் பற்றியதாக மட்டுமே இருத்தல் வேண்டும்.

(v) உரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்புவதாக இருத்தல் கூடாது.

(vi) அதே கூட்டத்தொடரில் விவாதிக்கப் பெற்ற பொருள் ஒன்றைப் பற்றி மீண்டும் விவாதம் எழுப்புவதாக இருத்தல் கூடாது.

(vii) அதே கூட்டத் தொடரில் விவாதிக்கப்படக்கூடிய பொருள் ஒன்றை முன்கூட்டியே எழுப்புவதாக இருத்தல் கூடாது.

(viii) இந்தியாவின் எப்பகுதியிலும் உள்ள நீதிமன்றத்தின் விசாரணையில் உள்ள எப்பொருள் பற்றியதாகவும் இருத்தல் கூடாது.

தீர்மானத்தை அனுமதிப்பது பற்றிப் பேரவைத் தலைவர் முடிவு செய்தல்.

81. ஒரு தீர்மானம் அல்லது அதன் ஒரு பகுதி இவ்விதிகளின்படி அனுமதிக்கப்படத்தக்கதா இல்லையா என்பதைப் பேரவைத் தலைவர் முடிவு செய்ய வேண்டும். தீர்மானம் கொண்டுவரும் உரிமையைத் தவறாகப் பயன்படுத்தக் கூடியதாகவோ, பேரவையின் நடவடிக்கைகளுக்குத் திட்டமிட்டுத் தடங்கல் விளைவிக்கக் கூடியதாகவோ, பாதகம் விளைவிக்கக் கூடியதாகவோ, இவ்விதிகளுக்கு முரணானதாகவோ ஒரு தீர்மானம் அல்லது அதன் ஒரு பகுதி இருக்கிறதெனப் பேரவைத் தலைவர் கருதுவாரேயானால், அதற்கான அனுமதியை மறுக்கலாம்.

விசாரணைக் குழு, ஆணைக்குழு போன்றவைகளின் முன்னுள்ள பொருள்கள் குறித்து விவாதம் எழுப்பும் தீர்மானம்.

82. சட்டப்படி அமைக்கப்பெற்ற விசாரணைக் குழு, நீதிமன்றமாக அல்லது பகுதி நீதிமன்றமாக இயங்கச் சட்டப்படி அமைக்கப்பெற்ற ஆணைக் குழு அல்லது ஆய்வதற்காகவோ, புலனாய்வதற்காகவோ அமைக்கப் பெற்ற குழு இவற்றின் ஆய்வில் இருக்கும் ஒரு பொருள் பற்றி விவாதம் எழுப்பும் வகையில் அமையும் தீர்மானம் சாதாரணமாக அனுமதிக்கப் பெறலாகாது.

எனினும், அவற்றின் ஆய்வுக்கு எவ்வித இடையூறும் ஏற்படுத்தாது என்று பேரவைத் தலைவர் கருதினால், அவைகள் கடைப்பிடிக்கும் முறை குறித்தோ, எப்பொருளைப் பற்றி ஆராய அவை அமைக்கப் பெற்றன என்பதைக் குறித்தோ, விசாரணை எந்நிலையில் உள்ளது என்பதைக் குறித்தோ எழுப்ப பேரவைத் தலைவர் தம் உசிதப்படி அனுமதிக்கலாம்.

நாள் குறிப்பிடப் பெறாத தீர்மானங்களைச் சுற்றனுப்புதல்.

83. பேரவைத் தலைவர் ஒரு தீர்மானத்திற்கான முன்னறிவிப்பை அனுமதித்து, அது விவாதிக்கப்பெற வேண்டிய நாள் குறிப்பிடப்படாவிடில் உறுப்பினர்களுக்கான தகவல் தாளில், 'நாள் குறிப்பிடப் பெறாத தீர்மானங்கள்' என்ற தலைப்பின்கீழ் அது உடனடியாக அறிவிக்கப்பெற வேண்டும்.

தீர்மானங்கள் மீதான விவாதமும் நேரம் ஒதுக்குதலும்.

84. பேரவையின் அலுவல் நிலைக்கு ஏற்ப, பேரவை முன்னவருடன் கலந்தாலோசித்து, தீர்மானத்தின் மீது விவாதத்திற்கான நாள் அல்லது நாட்கள் அல்லது ஒரு நாளின் ஒரு பகுதியைப் பேரவைத் தலைவர் ஒதுக்கலாம்.



குறிப்பிட்ட கால முடிவில் பேரவைத் தலைவர் வாக்கெடுப்புக்கு விடுதல்.

85. விவாதத்திற்கென முறையே ஒதுக்கப்பெற்ற நாளில் குறிக்கப்பெற்ற நேரத்தில் அல்லது ஒதுக்கப்பெற்ற நாட்களின் கடைசி நாளில், உடனடியாக மூலப் பிரச்சினையின்மீது அவையின் முடிவைத் தீர்மானிப்பதற்கு அவசியமான பிரச்சினை ஒவ்வொன்றையும் பேரவைத் தலைவர் பேரவையின் முடிவிற்கு விடவேண்டும்.

# அத்தியாயம் 14

## பொது நடைமுறை விதிகள்

பேரவையின் அலுவல் மொழி.

*86.* பேரவையின் அலுவல் தமிழிலோ, ஆங்கிலத்திலோ இருமொழிகளிலுமோ நடைபெறலாம்.

மேலும் ஓர் உறுப்பினர் மாநில அரசினால் ஏற்பளிக்கப்பெற்ற எம்மொழியிலாவது அல்லது இந்தியிலாவது உரையாற்றலாம்.

மேலும் மேற்கூறிய மொழிகள் எதிலும் தமது கருத்தைத் தெளிவுற எடுத்துரைக்க முடியாத உறுப்பினர் தமது தாய்மொழியில் பேரவையில் உரையாற்றுவதற்குப் பேரவைத் தலைவர் அனுமதிக்கலாம்.

**விளக்கம்.**—இவ்விதியில் ஏற்பளிக்கப்பெற்ற மொழி எனப் பெறுவது. கீழ்க்காணும் மொழிகளில் ஒன்றைக் குறிக்கும். அவையாவன: தெலுங்கு, மலையாளம், கன்னடம்.

பேரவையில் இருக்கும் உறுப்பினர்கள் கடைபிடிக்க வேண்டிய விதிகள்.

*87.* பேரவையில் உரையாற்றாமல் இருக்கும் ஓர் உறுப்பினர்—

(i) பேரவையின் அலுவல் பற்றியன்றி, செய்தித்தாள் எதையும் படிக்கலாகாது.

(ii) அமைதியாக இருத்தல் வேண்டும்.

(iii) ஓர் உறுப்பினர் உரையாற்றிக் கொண்டிருக்கும்போது, ஒழுங்கற்ற சொற்களாலோ அல்லது கூச்சல் அல்லது முறையற்ற வேறு வகைகளிலோ அவரை இடைமறித்தல் கூடாது.

(iv) இருக்கையில் அமருகையிலும், இருக்கையை விட்டு வெளியே செல்லுகையிலும், தலைவரை நோக்கி வணங்கி மரியாதை செலுத்த வேண்டும்.

(v) தலைவர் இருக்கைக்கும் உரையாற்றிக் கொண்டிருக்கும் உறுப்பினர்களுக்கும் இடையில் குறுக்கே செல்லக் கூடாது.

(vi) பேரவையில், பேரவைத் தலைவர் உரையாற்றிக் கொண்டிருக்கும்போது எழுந்து நிற்கக் கூடாது.

(vii) பேரவையின் நடவடிக்கைகளைத் தடுக்கவோ வேறு வகையான ஒலிகளாலோ அல்லது வேறு வகையிலோ இடைமறிக்கக்கூடாது. மேலும், பேரவையில் விவாதங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கும்போது நேர்முக வர்ணனைகள் செய்யக்கூடாது.



(viii) பேரவையில் உரையாற்றிக் கொண்டிருக்கும்போது பேரவை மாடங்களில் உள்ள வெளியார்கள் பற்றி ஏதும் குறிப்பிடுதல் கூடாது.

(ix) வெளியார்கள் பார்வையாளர் மாடத்தில் இருக்கும்போது பேரவைத் தலைவர் குறிப்பிட்டாலன்றி அவர்களை வரவேற்கும் வகையில் ஆரவாரம் செய்யக் கூடாது.

(x) சட்டமன்ற உறுப்பினர்கள் கைபேசியை பேரவைக்குள் கொண்டு வரக்கூடாது.

உறுப்பினர்கள் எழுந்து நின்று உரையாற்ற வேண்டும்.

*88. (1)* பேரவை முன்னுள்ள பொருள் குறித்து கருத்துத் தெரிவிக்க விரும்பும் எந்த உறுப்பினரும் தமது இடத்தில் எழுந்து நின்று பேரவைத் தலைவர் பேசுமாறு அழைத்த பின்னர் பேரவைத் தலைவரை நோக்கி உரையாற்ற வேண்டும்;

எனினும், உடல் நலிவாலோ அல்லது வேறு ஊனத்தினாலோ இயலாதிருப்பின், ஓர் உறுப்பினர் தம் இருக்கையில் அமர்ந்தவாறே உரையாற்ற அனுமதிக்கப் பெறலாம்.

*(2)* பேரவைத் தலைவர் எழுந்து நின்றால் உறுப்பினர் எவரும் பேசக் கூடாது; உரையாற்றிக் கொண்டிருந்தால் உரையைத் தொடராது உடனடியாகத் தமது இருக்கையில் அமர்ந்து விட வேண்டும்.

*(3)* பேரவையில் பேரவைத் தலைவர் பேசிக் கொண்டிருக்கும் பொழுது உறுப்பினர் எவரும் தமது இருக்கையை விட்டுச் செல்லலாகாது.

விவாதத்தில் உள்ள பொருள்பற்றி விளக்கங்கள் கோருதல்.

*89.* விவாதத்தின்போது விளக்கம் கோரும் வகையில், ஓர் உறுப்பினர் மற்றொரு உறுப்பினரை அவர் உரையாற்றிக் கொண்டிருக்கையில் ஏதேனும் கேட்க வேண்டி இருப்பின், அவ்வினாவை பேரவைத் தலைவர் அனுமதியுடன் கேட்கலாம்.

விவாத வரம்புகள்

*90.* ஆற்றப் பெறும் உரை ஒவ்வொன்றும் அத்தருணத்தில் பேரவையின் ஆய்வில் உள்ள பொருளுக்குத் தொடர்புடையதாக மட்டுமே இருத்தல் வேண்டும்.

அறிக்கையின் மொழி தன்னடக்க முள்ளதாய் இருத்தல் வேண்டும்.

*91.* பேரவைத் தலைவரின் அனுமதியுடன் இவ்விதிகளுக்குட் பட்ட எந்த ஓர் அறிக்கையும் படிக்கப் பெறலாம். அறிக்கை படிக்கப் பெறும் நாளுக்கு ஒரு நாள் முன்னதாகவாவது அதன் நகல் செயலாளருக்கு அனுப்பப் பெற வேண்டும். அறிக்கையில் இருக்க வேண்டிய பொருளுக்குத் தொடர்பில்லாத பொருளோ

அவதூறான வார்த்தைகளோ அல்லது தனிப்பட்ட குற்றச்சாட்டுகளோ அதில் இருக்கக்கூடாது; தன்னடக்கமுள்ள வரம்பு ஒழுங்குகளுக்குட்பட்ட மொழியில் அறிக்கை அமைந்திருக்க வேண்டும். அறிக்கையின் எந்த ஒரு பகுதியாவது இவ்விதியினை மீறுவதாக பேரவைத் தலைவர் கருதினால் அந்தப் பகுதியோ, பகுதிகளோ நீக்கப் பெறலாம் என்று அவர் ஆணையிடலாம், அவரது ஆணையே இறுதியானதாகும்.

*உரையாற்றுகையில் உறுப்பினர்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிகள்.*

*92.* உறுப்பினர் உரையாற்றுகையில்.—

(i) நீதி விசாரணையில் இருக்கும் எப்பொருளின் மீதும் தம் கருத்தைச் சொல்லவோ, அப்பொருள் பற்றிக் குறிப்பிடவோ கூடாது.

(ii) உறுப்பினர் எவரையும் தனிப்பட்ட முறையில் தாக்கக் கூடாது.

(iii) நாடாளுமன்றம், மற்ற மாநிலச் சட்டமன்றங்கள் ஆகியவைகளின் செயல் அல்லது நடவடிக்கைகளைப்பற்றி புண்படுத்தும் சொற்கூறுகளைப் பயன்படுத்துதல் கூடாது.

(iv) பேரவையின் முடிவை மாற்றுவதற்கெனக் கொண்டு வரப்பெற்ற ஒரு நிலையான தீர்மானத்தின்மீது அன்றி பேரவை எடுத்த முடிவிற்குக் களங்கம் கற்பிக்கக் கூடாது.

(v) பேரவைத் தலைவரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கென கொண்டுவரப்பெற்ற நிலையான தீர்மானத்தாலன்றிப் பேரவைத் தலைவரின் நடத்தைக்குக் களங்கம் கற்பிக்கக் கூடாது.

(vi) பேரவைத் தலைவரின் அலுவலகத்தைப் பற்றியோ அல்லது பேரவைச் செயலகத்தைக் குறித்தோ எந்த வகையிலும் உள்நோக்கம் கற்பிக்கக் கூடாது.

(vii) குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநரைப் பற்றியோ அல்லது நீதிமன்றம் ஒன்றின் நடத்தைக்குக் களங்கம் கற்பிக்கும் வகையில் பேசக் கூடாது. மேலும், விவாதத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் ஆளுநர் அல்லது குடியரசுத் தலைவரின் பெயரைப் பயன்படுத்துதல் கூடாது.

(viii) நாட்டிற்குக் கேடு விளைவிப்பதான, நாட்டுக்குத் துரோகம் விளைவிப்பதான அவதூறான அல்லது பேரவைக்கு ஒவ்வாத பயன்படுத்தக்கூடாத சொற்களை பயன்படுத்துதல் கூடாது; அல்லது



(ix) பேரவை அலுவலைத் தடுக்கும் வகையில் தம் பேச்சுரிமையைப் பயன்படுத்தக் கூடாது.

*ஓர் உறுப்பினர் அல்லது அதிகாரி மீதான தனிப்பட்ட குற்றச்சாட்டு.*

*93.* ஓர் உறுப்பினர் எழுத்து மூலமாக முன் கூட்டியே பேரவைத் தலைவர், அமைச்சர், சம்பந்தப்பட்ட உறுப்பினர் ஆகியோருக்கு தெரிவித்திருந்தாலன்றி மற்ற எந்த உறுப்பினர் மீதோ அல்லது எந்த அலுவலர் மீதோ அவதூறாகவோ அல்லது தனிப்பட்ட முறையில் அவர் மீது குற்றம் சாட்டக்கூடாது. அவ்வாறு முன்னறிவிப்பு கொடுப்பது குற்றம் சாட்டப்பட்ட உறுப்பினரோ அல்லது அமைச்சரோ அதனைப் புலனாய்வு செய்து பதில் அளிப்பதற்கு ஏதுவாக இருக்க வேண்டும்.

மேலும், அவ்வாறான முன்னறிவிப்பினை சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கோ அல்லது அமைச்சருக்கோ, நேரிடையாகவோ அல்லது சட்டமன்றப் பேரவைச் செயலகத்தின் மூலமாகவோ கொடுக்கலாம்.

எனினும், அவ்வாறு சொல்லவிருக்கும் குற்றச்சாட்டுகள் பேரவையின் கண்ணியத்தைக் குறைப்பதாகவோ அல்லது பொது நலனுக்கு ஒவ்வாததாகவோ அல்லது பேரவை முன் இருக்கும் அலுவல்களைக் குறித்து நேரிடையாகத் தொடர்பு இல்லை என பேரவைத் தலைவர் கருதுவாரேயானால் அதனை எந்த நேரத்திலும் எந்த உறுப்பினரையும் தடை செய்யலாம்.

*உறுப்பினர் ஒருவர் வேறோர் உறுப்பினரிடம் கேட்கும் வினா பேரவைத் தலைவர் மூலமாகவே கேட்கப்பெற வேண்டும்.*

*94.* அவையில் ஆய்வில் இருக்கும் பொருள் பற்றி ஏதேனும் விளக்கம் பெறுவதற்கோ அல்லது வேறு தகுந்த காரணத்திற்காக எந்த ஓர் உறுப்பினரும் வேறு உறுப்பினரிடம் பேரவைத் தலைவர் மூலமாக வினாவினைக் கேட்கலாம்.

*தீர்மானங்கள்*

*95.* பேரவையினால் முடிவு செய்யப்பெற வேண்டிய ஒவ்வொரு பொருளும் தீர்மான வடிவில் உறுப்பினர் ஒருவரால் மொழியப்பெற்று அதில் எழும் பிரச்சினை என்னவென்று குறிப்பிட்டுப் பேரவைத் தலைவர் படிப்பதன் மூலம் பேரவையின் முன் கொண்டுவரப் பெறும்.

*தீர்மானங்களை வெளியிடுதல்.*

*96.* எத்தீர்மானமும், பேரவைத் தலைவரால் அனுமதிக்கப் பெறுவதற்கு முன்பு வெளியிடப் பெறுதல் கூடாது.

*தீர்மானங்களை வழி மொழிதல்.*

*97.* (1) ஒவ்வொரு தீர்மானமும் உறுப்பினர் ஒருவரால் முன் மொழியப்பெற்று, மற்றொரு உறுப்பினரால் வழிமொழியப்பெற வேண்டும்; நிலையான தீர்மானத்தை வழிமொழியும் உறுப்பினர் தமது உரையை விவாதத்தின் பிந்திய கட்டத்தில் ஆற்றலாம்.

*(2)* வழிமொழியப் பெறாத தீர்மானம் உடனே கைவிடப்பெறும். எனினும், அமைச்சர் ஒருவரால் மொழியப் பெறும் தீர்மானமோ வரவு-செலவுத் திட்ட மானியக் கோரிக்கை எதனையும் குறைக்க வேண்டுமென்று கோரும் தீர்மானமோ வழிமொழியப் பெற வேண்டியதில்லை.

*உரையாற்றும் வரிசை முறை..*

*98.* தீர்மானம் ஒன்றைப் பேரவைத் தலைவர் பேரவைக்குப் படித்துக் காட்டிய பின்னர், அவர் அழைக்கிற வரிசையில் உறுப்பினர்கள் அதன் மீது பேசலாம்.

*வாக்கெடுப்பு முறை.*

*99. (1)* அரசமைப்புச் சட்டத்திலோ, பிற சட்டங்களிலோ இவ்விதிகளிலோ வேறுவிதமாக வகை செய்யப்பட்டிருந்தாலன்றி ஒரு தீர்மானத்தின் மீதான விவாதம் முடிவுற்றதும் பேரவைத் தலைவர் பிரச்சினையைப் பேரவையின் வாக்கெடுப்பிற்கு விட்டு குரல் வாக்கெடுப்பு மூலம் முடிவு சொல்ல வேண்டும். அப்போது தீர்மானத்தை ஏற்போர் 'ஆம்' என்றும் எதிர்ப்போர் 'இல்லை' என்றும் சொல்லுமாறு பேரவைத் தலைவர் கேட்டுக் கொள்ள வேண்டும்.

*(2)* அதன் பின் 'ஆம்' என்போரே அதிகம் என்று கருதுகிறேன் அல்லது 'இல்லை' என்போரே அதிகம் என்று கருதுகிறேன் எனப் பேரவைத் தலைவர் சொல்ல வேண்டும். பேரவையின் முடிவைக் குறித்துப் பேரவைத் தலைவரின் கருத்தை யாரும் மறுக்காவிடின் அவர் இருமுறை 'ஆம்' என்போரே அதிகம் அல்லது 'இல்லை' என்போரே அதிகம் என்று சொல்லி பேரவையின் முன் உள்ள பிரச்சினையை முடிவு செய்ய வேண்டும்.

*(3)* பேரவையின் முடிவைக் குறித்துப் பேரவைத் தலைவரின் கருத்து மறுக்கப்பெறின், எண்ணிக் கணிக்கும் முறையில் பேரவையின் வாக்குகளை எடுக்க வேண்டும்.

*(4)* எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பு எம்முறையில் அமைய வேண்டும் என்பதைப் பேரவைத் தலைவர் நிர்ணயிக்க வேண்டும்.



*(5)* பேரவையின் வாக்குகளை எண்ணிக் கணிக்கும் முறையில் எடுக்கப் பேரவைத் தலைவர் முடிவு செய்தால் அழைப்பு மணியை அடிக்கும்படி அவர் ஆணையிட்டு இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு நுழைவாயில்கள் அனைத்தையும் மூடும்படியாக ஆணையிட வேண்டும்; பிறகு, உள் விதி *(2)*-ல் கூறியபடி இரண்டாவது முறையாகப் பிரச்சினையைப் பேரவை முன் வைக்க வேண்டும். அவரது கருத்து மறுமுறையும் மறுக்கப்பெற்றால் 'ஆம்' என்போரையும், 'இல்லை' என்போரையும் அவரவர்கள் இடத்தில் எழுந்து நிற்குமாறு கேட்டுக் கொண்டு வாக்காளருடைய பெயர்கள் பதிவு செய்யப்பெற வேண்டும்.

*(6)* எண்ணிக் கணித்த வாக்கெடுப்பின் முடிவு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பெற வேண்டும். அது மறுக்கப்பெறக் கூடாது.

*(7)* எண்ணிக் கணித்த வாக்கெடுப்பின் முடிவைப் பேரவைத் தலைவர் அறிவிப்பதற்கு முன்னர் வாக்குகள் பதிவு செய்ததில் ஏதேனும் தவறு ஏற்பட்டுள்ளது என ஐயமின்றி அறிந்தால் அதை திருத்திக் கொள்வதற்கு பேரவைத் தலைவர் அனுமதிக்கலாம். அழைப்பு மணி கேட்கவில்லை என்ற காரணத்தால் எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பின் முடிவு எந்த உறுப்பினராலும் மறுக்கப் பெறக் கூடாது.

*(8)* எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பு அவசியமின்றி கேட்கப்படுகிறதென்று பேரவைத் தலைவர் கருதினால் அவர் முறையே 'ஆம்' என்று ஏற்பவர்களையும், 'இல்லை' என்று எதிர்ப்பவர்களையும் தனித்தனியே அவரவர்களது இருக்கையில் எழுந்து நிற்குமாறு கேட்டுக் கொண்டு அவர்களது எண்ணிக்கையைக் கணித்துப் பேரவையின் முடிவு என்ன என்பதை அறிவிக்கலாம். அவ்வாறு கணிக்கப் பெறும்போது வாக்காளர்களின் பெயர்கள் தனித்தனியே பதிவு செய்யப்பெற மாட்டாது.

*(9)* பேரவையால் முடிவு செய்யப்பெற இருக்கும் பொருளில் வாக்களிக்கும் உறுப்பினர் எவருக்கேனும் நேர்முகமாகவோ தனித்தோ ஆதாயமளிக்கக்கூடிய வகையிலோ தொடர்பு உள்ளது என்ற காரணத்தால் அவர் அளிக்கும் வாக்கைச் சேர்க்கக் கூடாது என எதிர்ப்பு எழுப்பப்பெறின், தேவை என்று பேரவைத் தலைவர் கருதினால் எதிர்ப்பை எழுப்பும் உறுப்பினரை அவ்வாறு

எதிர்ப்பதற்கான காரணங்களைக் குறிப்பாகப் பேரவைக்கு கூறுமாறும், எந்த உறுப்பினரின் வாக்குக்கு எதிர்ப்பு எழுப்பப்படுகிறதோ அந்த உறுப்பினரின் விளக்கத்தையும் கேட்டு அவரது வாக்கு, எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்ளப்பெற வேண்டுமா இல்லையா என்பதைப் பேரவைத் தலைவர் முடிவு செய்ய வேண்டும். இதில் அவரது முடிவு இறுதியானதாகும்.

அவ்வாறு உறுப்பினர் அல்லது உறுப்பினர்களது வாக்குகளுக்கு எழுப்பப் பெறும் எதிர்ப்பு, எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பு முடிந்தவுடன் வாக்கெடுப்பின் முடிவைப் பேரவைத் தலைவர் அறிவிப்பதற்கு முன்னதாக எழுப்பப்பெற வேண்டும்.

**விளக்கம்**.—இவ்விதியைப் பொறுத்தவரை வாக்களிக்கும் எந்த உறுப்பினரது வாக்கு ஏற்கப்பெறக்கூடாது என்று எதிர்ப்பு எழுப்பப் பெறுகிறதோ அது அந்த உறுப்பினரை தனிப்பட்ட முறையில் சார்ந்ததாக இருக்கவேண்டுமேயன்றி பொதுவாக மற்றவர்களோடு இணைந்ததாகவோ ஒரு வகுப்பு அல்லது பிரிவினரது நலத்துடன் ஒன்றியதாகவோ, அரசினரது கொள்கையைப் பற்றியதாகவோ இருத்தல் கூடாது.

*தீர்மானங் களின் வரையறைகள்.*

*100.* பேரவை ஏற்கெனவே அதே கூட்டத் தொடரில் முடிவு எடுத்துள்ள ஒரு தீர்மானத்திற்குப் பெரும்பாலும் ஒத்த கருத்துள்ள மற்றொரு தீர்மானம் கொண்டு வரப்பெறலாகாது.

**விளக்கம்.—***(1)* பேரவையில் சட்ட முன்வடிவு ஒன்று ஏற்கெனவே நிறைவேற்றப் பெற்றிருந்தாலோ அல்லது நிராகரிக்கப் பெற்றிருந்தாலோ அன்றி, அதைப்பற்றிப் பேரவை முடிவு எடுத்திருப்பதாகக் கருதப்பெறலாகாது.

**விளக்கம்.—***(2)* சட்ட முன்வடிவு ஒன்றின்மீது கீழ்க்கண்ட தீர்மானங்களிலே ஏதேனும் ஒன்றைப் பேரவை நிராகரித்திருந்தால் அச்சட்ட முன்வடிவு இவ்விதியைப் பொறுத்தவரை நிராகரிக்கப் பெற்றதாகக் கருதப்படும்.

(i) சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்த அனுமதி கோரும் தீர்மானம்;

(ii) சட்ட முன்வடிவிற்குப் பொறுப்புடைய உறுப்பினரால் கொண்டு வரப்பெற்ற சட்ட முன்வடிவு ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்பெற வேண்டும் என்ற தீர்மானம்;



(iii) சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும் என்ற தீர்மானம்;

(iv) சட்ட முன்வடிவு ஆய்வுக் குழுவினால் ஆய்ந்து அறிக்கையளிக்கப் பெற்றவாறு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் என்ற தீர்மானம்;

அல்லது

(v) சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டும் என்ற தீர்மானம்.

*தீர்மானங் களைத் திரும்பப் பெறுதல்.*

*101.(1)* ஓர் உறுப்பினர் தாம் மொழிந்த தீர்மானத்தையோ அல்லது தீர்மானத்திற்கு கொடுத்த திருத்தத்தையோ, உறுப்பினர் எவரும் மறுக்காத நிலையில் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறலாம்.

எனினும், தீர்மானம் ஒன்றுக்குத் திருத்தம் முன்மொழியப் பெற்றிருந்தால், திருத்தத்தின் மீது முடிவு எடுக்கப் பெறும் வரை, மூலத் தீர்மானத்தைத் திரும்பப் பெறலாகாது.

*(2)* தீர்மானத்தின் ஒரு பிரச்சினையைப் பேரவையின் வாக்கெடுப்பிற்கு விடும்போது அதனை மொழிந்த உறுப்பினர் பேரவையில் இல்லாதிருப்பின் அப்பிரச்சினையை வாக்கெடுப்பிற்கு விடவேண்டுமென வேறு உறுப்பினர் எவரேனும் கேட்டுக் கொண்டாலன்றி அது திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்பெறும்.

*மறு உரையும் பதிலுரையும் ஆற்றும் உரிமை.*

*102.* பதிலுரை ஆற்றும் உரிமையினாலோ, வேறுவிதமாக இவ்விதிகளில் வகை செய்திருந்தாலோ அன்றி எந்த உறுப்பினரும் ஒரு தீர்மானத்தின் மீது ஒரு முறைக்கு மேல் பேசக்கூடாது. ஆனால் விவாதத்தின்போது, குறிப்பிடப்பெற்ற அல்லது களங்கம் கற்பிக்கப்பெற்ற உறுப்பினர் ஒருவர் பேரவைத் தலைவரின் அனுமதி பெற்று தன்னிலை விளக்கம் கூறும் வகையில் பேசலாம். அவ்விளக்கம் அவரைப்பற்றி அல்லது அவர்மீது கற்பிக்கப்பெற்ற களங்கம் பற்றி முற்றிலும் பொருத்தமுடையதாக இருக்கலாமேயன்றி புதிய அல்லது சர்ச்சைக்குரிய வேறு எப்பொருளைப் பற்றியதாகவும் இருக்கக்கூடாது.

*பதிலளிக்கும் உரிமை.*

*103. (1)* நிலையான தீர்மானத்தை (Substantive Motion) மொழிந்த உறுப்பினர் ஒருவர் விவாதத்திற்கு பதில் கூறும் வகையில் மறுமுறை பேசலாம். *56*-வது விதியின் கீழ் ஒத்திவைப்புத் தீர்மானத்தை மொழிந்தவருக்கும் பதிலளிக்கும்

உரிமை உண்டு. தீர்மானம் தனி உறுப்பினர் ஒருவரால் கொண்டு வரப்பெற்றிருந்தால் அவ்வுறுப்பினர் பதிலளித்த பின், அப்பொருள் சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் முன்னரே விவாதத்தில் கலந்து கொண்டிருந்தாலும் இல்லாவிட்டாலும் அதற்குப் பதில் கூறுவதற்கு உரிமை உள்ளவர் ஆவார்.

**விளக்கம்.**—கீழ்க்கண்டவை நிலையான தீர்மானங்களாகக் (Substantive Motion) கருதப்பெறமாட்டா;

(i) வரவு-செலவுத் திட்ட மானியக் கோரிக்கைகள், துணை மானியக் கோரிக்கைகள், கூடுதல் அல்லது மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் கணக்கில் முன்பணம் கோரும் கோரிக்கைகளின் மீதான வெட்டுத் தீர்மானங்கள்; அல்லது

(ii) தனித் தீர்மானத்திற்குத் திருத்தம்; அல்லது

(iii ) ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான திருத்தம்.

*(2)* ஓர் உறுப்பினர் மூலத்தீர்மானத்தின் மீதோ அல்லது வேறு ஒரு தீர்மானத்தின்மீதோ பேசியிருந்தாலும், மற்றொரு திருத்தத்தின் மீதும் பேசலாம்.

*(3)* ஓர் உறுப்பினர் பதிலுரை ஆற்றும்போது, அவ் விவாதத்தில் எழுப்பப்பெற்ற பொருள்களைப் பற்றி மட்டும் கூறலாம். சர்ச்சைக்குரிய புதிய பொருள் எதையும் புகுத்தலாகாது.

திருத்தங்கள் பற்றிய விதிகள்.

*104.* *(1)* சட்ட முன்வடிவு அல்லது தீர்மானத்திற்கு கொண்டு வரப்பெறும் திருத்தம் அதற்குத் தொடர்புடையதாகவும், அதன் பொருள் வரம்பிற்குட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

*(2)* எதிர்த்து வாக்களிக்கும் விளைவை மட்டும் (Negative Vote) உண்டாக்குவதாகத் திருத்தம் இருத்தல் கூடாது.

*(3)* ஒரு சட்ட முன்வடிவின் எந்த ஒரு பகுதிக்கோ, பிரிவுக்கோ அல்லது தீர்மானத்திற்கோ கொண்டு வரப்பெற்ற திருத்தத்தின் மீது ஒரு முடிவு எடுக்கப்பெற்றபின் அச்சட்ட முன்வடிவின் முந்தைய ஒரு பகுதிக்கோ பிரிவுக்கோ அல்லது தீர்மானத்திற்கோ எந்தத் திருத்தமும் பேரவையின் அனுமதியின்றி மொழியப் பெறலாகாது.



*(4)* ஒரு பிரச்சினை மீதான திருத்தம் அதே சட்ட முன்வடிவு அல்லது தீர்மானத்தின் எக்கட்டத்திலேனும் அதே பிரச்சினை குறித்து முன்னால் எடுக்கப்பெற்ற முடிவுக்கு முரண்பட்ட வகையில் அமையக் கூடாது.

*(5)* பேரவைத் தலைவர் தாம் பொருத்தம் எனக் கருதும் வரிசை முறைப்படி திருத்தங்களை வாக்கெடுப்பிற்கு விடலாம்.

எனினும், ஒரே மாதிரியான திருத்தத்திற்கு பல முன்னறிவிப்புகள் வரப்பெறின் சட்ட முன்வடிவிற்கு பொறுப்புடைய உறுப்பினர் தந்துள்ள திருத்தம் இருப்பின் அது முன்னுரிமை பெறும்.

மேலும், ஒரு திருத்தம் விளையாட்டுத்தனமானது என்று பேரவைத் தலைவர் கருதுவாரேயானால் அதனை வாக்கெடுப்பிற்கு வைக்க அவர் மறுக்கலாம்.

*(6)* ஒரு திருத்தம், பின் கொடுக்கப்பெற இருக்கும் திருத்தம் அல்லது அட்டவணைபற்றிக் குறிப்பிடின் அல்லது அவ்வாறான திருத்தம் அல்லது அட்டவணை இன்றி அதன் பொருள் விளங்காவிடின் பின் கொடுக்கப்பெற இருக்கும் திருத்தம் அல்லது அட்டவணைக்கான முன்னறிவிப்பினை முதல் திருத்தம் மொழியப் பெறுவதற்கு முன்னதாகக் கொடுத்து, அந்தத் திருத்தங்களின் கோர்வை மொத்தமாக பொருள் விளங்குமாறு செய்ய வேண்டும்.

*(7)* ஏற்கெனவே முன் மொழியப் பெற்ற ஒரு திருத்தத்திற்கு மற்றொரு திருத்தம் மொழியப் பெறலாம்.

*(8)* அரசின் சட்ட முன்வடிவைப் பொறுத்தமட்டில் அச்சட்ட முன்வடிவிற்கு பொறுப்புடைய உறுப்பினர் அமைச்சர் பதவியில் இல்லை என்பதால் அவர் அளித்துள்ள திருத்தத்திற்கான முன்னறிவிப்புகள் செயலற்றதாகா.

விவாதிப் பதற்கான திருத்தங் களைத் தேர்ந் தெடுத்தல்.

*105.* ஆய்வில் உள்ள எந்த ஒரு தீர்மானத்தையோ சட்ட முன்வடிவையோ பொறுத்தவரை:—

*(1)* பேரவைத் தலைவர் ஒரே மாதிரியான அல்லது ஒருமித்த கருத்துள்ள திருத்தங்கள் பலவற்றில் ஏதேனும் ஒன்றை மட்டும் மொழிவதற்கென தேர்ந்தெடுக்கலாம்.

(2) பேரவைத் தலைவர் அவ்வாறு தேர்ந்தெடுப்பதற்கு முன் தேவையெனக் கருதினால், திருத்தத்திற்கான முன்னறிவிப்புக் கொடுத்துள்ள உறுப்பினர் எவரையும் அத்திருத்தத்தின் நோக்கத்தைப் பற்றிய விளக்கத்தைக் கூறுமாறு கேட்டறிந்து முடிவு செய்யலாம்.

விவாதத்தை முடிவுக்குக் கொண்டு வருதல்.

106. (1) ஒரு தீர்மானம் பேரவையில் மொழியப் பெற்ற எந்நேரத்திலும் அதில் எழும் பிரச்சினை உடனடியாக வாக்கெடுப்பிற்கு விடப்பெற வேண்டும் என எந்த உறுப்பினரும் மொழியலாம்; இவ்விதியைத் தவறாகப் பயன்படுத்துவதாகும் என்றோ, நியாயமான விவாத உரிமையைப் பாதிப்பதாகும் என்றோ பேரவைத் தலைவருக்குத் தோன்றினாலன்றி, பிரச்சினை உடனடியாக வாக்கெடுப்பிற்கு விடப்பெற வேண்டும் என்ற தீர்மானத்தை பேரவையின் முடிவிற்கு விட வேண்டும்.

(2) பிரச்சினை உடனடியாக வாக்கெடுப்புக்கு விடப்பெற வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேறின் ஒரு பிரச்சினை அல்லது அதன் தொடர்பான பிரச்சினைகள் மேற்கொண்டு எவ்வித விவாதமுமின்றி பேரவையில் உடனடி முடிவிற்கு விடப்பெற வேண்டும்.

எனினும், இவ்விதிகளின்படி பதிலளிக்கும் உரிமை பெற்ற உறுப்பினர் எவரையும் பதில் கூறப் பேரவைத் தலைவர் அனுமதிக்கலாம்.

ஒத்திவைப்பு

107. ஒரு கூட்டத்தையோ அலுவலையோ ஒத்திவைக்க வேண்டுமென்றோ, தள்ளிப்போட வேண்டுமென்றோ அலுவல் பட்டியல் வரிசையில் அடுத்துள்ள அலுவலை எடுத்துக் கொள்ளவேண்டுமென்றோ ஒரு தீர்மானம், தனிப் பிரச்சினையாக முன்னறிவிப்பு ஏதுமின்றி எந்நேரத்திலும் அஃது ஓர் உறுப்பினரின் உரையை இடைமறிக்காதவாறு கொண்டுவரப் பெறலாம். அத்தகைய தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் 30-வது விதியின் 3-வது உள் விதியில் வகைசெய்துள்ளபடி கூட்டம் அல்லது அலுவல் அவ்வாறே ஒத்திவைக்கப் பெற அல்லது தள்ளிப்போடப் பெற வேண்டும்; அல்லது நிறைவேற்றப் பெற்ற தீர்மானம் அலுவல் பட்டியலில் உள்ள வரிசையில் அடுத்துள்ள அலுவல் எடுத்துக்கொள்ளப் பெற வேண்டுமென்று இருந்தால் அச்சமயத்தில் அவையின் விவாதத்திலுள்ள அலுவல் முடிவுற்றதாகக் கருதப்பெறும்.



எனினும், அரசமைப்புச் சட்டத்தின்படியோ, இவ்விதிகளில் கண்டுள்ள அதிகாரத்தின்படியோ ஆளுநர் அல்லது பேரவைத் தலைவர் இட்ட சிறப்பு ஆணைப்படி ஓர் அலுவலுக்கென குறிப்பிடப் பெற்ற நாளில் நடைபெறும் கூட்டத்தை அல்லது அலுவலை ஒத்தி வைக்கும்படி அல்லது தள்ளிப்போடும்படி உறுப்பினர் ஒருவர் தீர்மானத்தைக் கொண்டுவர இவ்விதியில் கண்டுள்ள எதுவும் அனுமதிக்காது.

மேலும், அத்தகைய தீர்மானம் பேரவையின் விதிகளைத் தவறாகப் பயன்படுத்துவதாகும் என்று பேரவைத் தலைவர் கருதினால், அதனை உடனடியாகப் பேரவையின் முன் வைக்கவோ, நிராகரிக்கவோ செய்யலாம்;

மேலும், ஒரு பொருள் மீது நடக்கும் விவாதத்தின்போது இவ்விதியின்படியுள்ள தீர்மானம் ஒன்றை ஒரு முறைக்கு மேல் கொண்டு வரலாகாது.

உரையாற்றும் நேரம்.

108. சட்ட முன்வடிவின் மீதோ, தனித் தீர்மானத்தின் மீதோ, சட்டமுன்வடிவு அல்லது தனித் தீர்மானத்திற்கான திருத்தத்தின் மீதோ, 56-வது விதியின்கீழ் கொண்டுவரப்பெறும் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீதோ அல்லது பேரவையின் விவாதத்திற்கு வரும் எப்பொருள் மீதேனும் நடைபெறும் விவாத உரைகளுக்கான கால வரம்பைப் பேரவைத் தலைவர் நிர்ணயிக்கலாம்.

தன்னிலை விளக்கம்.

109. பேரவைத் தலைவர் அனுமதியின் பேரில், உறுப்பினர் ஒருவர் தன்னிலை விளக்கம் ஒன்றினை பேரவை முன் பிரச்சினை எதுவும் இல்லையென்றாலும் அளிக்கலாம். ஆனால், அப்போது சர்ச்சைக்குரிய பொருள் எதையும் கொண்டு வரக்கூடாது; எவ்வித விவாதமும் இருத்தல் கூடாது.

அமைச்சரின் அறிக்கை.

110. (1) பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருளைப் பற்றி ஓர் அமைச்சர் பேரவைத் தலைவரின் இசைவுடன் அறிக்கை ஒன்றை அளிக்கலாம்.

(2) அவ்வறிக்கையின் மீது அப்போது எவ்வித விவாதமும் இருத்தல் கூடாது.

(3) உள் விதி 1-இன் கீழ், அறிக்கையளிக்க விரும்பும் ஓர் அமைச்சர் எந்நாளில் அந்த அறிக்கை அளிக்க விரும்புகிறார் என்பதையும் பேரவைத் தலைவரின் பார்வைக்கு வைக்க அதன் பிரதி ஒன்றையும் முன்கூட்டியே செயலாளருக்கு அனுப்ப வேண்டும்.

அமைச்சரின் திருத்த அறிக்கை.

111. (1) வினாவிற்கு அல்லது துணை வினாவிற்கு விடையளிக்கும் வகையிலோ அல்லது இவ்விதிகளில் 110-வது விதியின் கீழோ அல்லது வேறு எந்த வகையிலோ பேரவையில் அமைச்சர் ஒருவர் அளித்த அறிக்கையில் ஏதேனும் தவறு உள்ளதாக அமைச்சர் கருதினால், பேரவைத் தலைவரின் இசைவைப் பெற்று, மேலும் ஓர் அறிக்கையை அதே கூட்டத்திலோ அல்லது பின்னர் ஒரு நேரத்திலோ அளிக்கலாம்.

(2) அவ்வறிக்கையின் மீது அப்போது எவ்வித விவாதமும் இருத்தல் கூடாது.

(3) உள் விதி 1-இன்கீழ் அறிக்கை அளிக்க விரும்பும் அமைச்சர் எந்நாளில் அந்த அறிக்கையை அளிக்க விரும்புகிறார் என்பதையும், பேரவைத் தலைவரின் பார்வைக்கு வைக்க அதன் பிரதி ஒன்றினையும் முன்கூட்டியே செயலாளருக்கு அனுப்ப வேண்டும்.

அமைச்சரின் திருத்த அறிக்கையின் முன் பிரதிகள் மற்றும் அறிக்கை அளித்தபின் மேற்கொள்ளும் நடைமுறை.

112. (1) உடுக்குறியிட்ட அல்லது குறுகிய கால வினாவிற்கான விடையை அல்லது அவையில் அளிக்கபெற்ற அறிக்கையை அல்லது அவை மேசையின் மீது வைக்கப்பெற்ற வேறு ஏதாவது அறிக்கையை மாற்றி அளிக்கப்பெறும் திருத்த அறிக்கையினை, அறிக்கை விசாரணைப் பகுதியிலோ (Notice Office) நூலகத்திலோ அந்த அறிக்கைகள் கொடுக்கப் பெறும் நாளில், பேரவை கூடும் அரை மணி நேரத்திற்கு முன்னதாக உறுப்பினர்களின் தகவலுக்காக வைக்கப்பெற வேண்டும்.

(2) அவ்வாறு வைக்கப்பெறும் அறிக்கைகள் இரகசியமாகக் கருதப் பெறவேண்டும். உரிய அமைச்சரால் அவ்வறிக்கைகள் பேரவைக்கு அளிக்கப்பெறும் வரையில் அவற்றை வெளியிடுவதற்கு பயன்படுத்தக்கூடாது.

(3) திருத்த அறிக்கை அளிக்கப்பெற்ற பின் அது உடுக்குறியிட்ட அல்லது குறுகிய கால வினாவிற்கு அளிக்கப்பெற்ற விடையைத் திருத்தும் அறிக்கையாக இருப்பின் அதன்பொருள் பற்றி மட்டும் முழுவதும் தொடர்புடையதான துணை வினாக்கள் கேட்க உறுப்பினர்களைப் பேரவைத் தலைவர் அனுமதிக்கலாம்.



அமைச்சரால் அல்லது உறுப்பினரால் அளிக்கப் பெற்ற அறிக்கை யிலுள்ள தவறு அல்லது பிழையைச் சுட்டிக்காட்டு வதற்கான நடைமுறை.

113. (1) அமைச்சரால் அல்லது வேறோர் உறுப்பினரால் அளிக்கப்பெற்ற ஓர் அறிக்கையில் உள்ள தவறு அல்லது பிழையைச் சுட்டிக்காட்ட விரும்பும் உறுப்பினர் ஒருவர், அதனைப் பேரவையில் குறிப்பிடுவதற்கு முன்னதாக அத்தவறு அல்லது பிழை பற்றிய விவரங்களை எழுத்து மூலமாகப் பேரவைத் தலைவருக்கு அறிவிப்புக் கொடுத்து, அதனைப் பேரவையில் எழுப்ப பேரவைத் தலைவரது அனுமதியைக் கோர வேண்டும்.

(2) உறுப்பினர், தமது குற்றச்சாட்டுக்கு ஆதாரமாக தம்மிடம் இருக்கும் சான்றுகளைப் பேரவைத் தலைவர் முன்பு வைக்கலாம்.

(3) குற்றச்சாட்டின் உண்மை நிலையை அறிதற் பொருட்டு பேரவைத் தலைவர், தேவையெனக் கருதினால் சம்பந்தப்பட்ட அமைச்சர் அல்லது உறுப்பினருடைய கவனத்திற்கு அதனை கொண்டு வரலாம்.

(4) அதன் பிறகு, பேரவைத் தலைவர் அவசியம் எனக் கருதினால், அப் பொருளைப் பேரவையில் கொண்டு வருவதற்கு, குற்றம் சாட்டும் உறுப்பினரை அனுமதிக்கலாம். அவ்வாறு அனுமதிக்கப் பெற்ற உறுப்பினர் சம்பந்தப்பட்ட அமைச்சர் அல்லது உறுப்பினருக்கு, அந்த அறிக்கையை அளிப்பதற்கு முன்பே தெரிவிக்க வேண்டும்.

(5) இதற்குப் பதில் அளிக்கும் வகையில் சம்பந்தப்பட்ட அமைச்சரோ, உறுப்பினரோ, பேரவைத் தலைவரின் அனுமதியுடன், சம்பந்தப்பட்ட அந்த உறுப்பினருக்குத் தெரிவித்துவிட்டு ஓர் அறிக்கையை அளிக்கலாம்.

(6) உறுப்பினர் ஒருவரால் கொடுக்கப்பெற்ற அறிக்கை அதற்குப் பதில் அளிக்கும் முறையில் அமைச்சரால் அளிக்கப்பெற்ற அறிக்கை, இவ்வறிக்கைகளின் பிரதிகள் எழுத்து மூலமாகப் போதுமான கால அவகாசத்துடன் முன்கூட்டியே பேரவைத் தலைவருக்கு அனுப்பி வைத்து அவரது ஒப்புதலைப் பெறுவதற்கு முன்னர், அலுவல் பட்டியலில் இணைக்கப்பெறக் கூடாது. பேரவைத் தலைவரால் ஒப்புதல் அளிக்கப்பெற்ற அறிக்கையில் காணப்பெறாத சொற்கள், சொற்றொடர்கள் பேரவையில் கூறப்பெற்றால், அவைகள் பேரவை நடவடிக்கைகள் பணித்துறை வெளியீட்டில் இடம் பெறலாகாது.

மேற்கோளாகக் காட்டப் பெறும் ஏடுகளை பேரவை முன் வைத்தல்.

*114.* ஓர் அமைச்சர் பேரவைமுன் வைக்கப்பெறாத அரசின் நடவடிக்கை ஏடுகளில் இருந்தோ, இதர ஆவணங்களிலிருந்தோ மேற்கோள் காட்டுவதாக இருந்தால், அதற்குப் பொருத்தமான ஏடுகளை அவர் பேரவை முன் வைக்க வேண்டும்.

எனினும், அவற்றை வெளியிடுவது பொது நலனுக்கு உகந்ததாக இருக்காது என அமைச்சர் தெரிவித்தால், அந்த ஆவணங்கள் எதற்கும் இவ்விதி பொருந்தாது.

மேலும், அரசின் நடவடிக்கை ஏடுகள் அல்லது ஆவணங்களில் உள்ளவற்றின் சுருக்கத்தையோ, சாராம்சத்தையோ ஓர் அமைச்சர் தம் சொந்த வார்த்தைகளால் சொல்வாரேயானால், அவற்றுக்குப் பொருத்தமான ஏடுகள் பேரவைமுன் வைக்கப் பெற வேண்டிய அவசியம் இல்லை.

கருத்து அல்லது அறிவுரை அடங்கிய ஆவணத்தைப் பேரவை முன் வைத்தல்.

*115.* ஓர் அமைச்சர் வினாவிற்கு விடை அளிக்கும்போதோ, விவாதத்தின் போதோ தமக்கு ஓர் அரசாங்க அதிகாரியிடம் இருந்தோ வேறு எவரிடம் அல்லது எவ்வமைப்பிடம் இருந்தோ கிடைத்த அறிவுரையை அல்லது கருத்தை வெளியிடுவாரேயானால், அக்கருத்து அல்லது அறிவுரை அடங்கிய ஆவணத்தை அல்லது அதன் பகுதிகளை சாதாரணமாகப் பேரவைமுன் வைத்தல் வேண்டும்.

எனினும், அத்தகைய அறிவுரை அல்லது கருத்தின் சுருக்கத்தையோ அல்லது சாராம்சத்தையோ தம் சொந்த வார்த்தைகளால் சொல்வாரேயானால் அதற்கு இவ்விதி பொருந்தாது.

ஒழுங்குப் பிரச்சினை களும் அதன் மீதான முடிவுகளும்.

*116.* *(1)* எந்நேரத்திலும் உறுப்பினர் ஒருவர் பேரவைத் தலைவரின் முடிவிற்காக ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பலாம். அவ்வாறு எழுப்பும்போது, உறுப்பினர் தாம் எழுப்பும் பிரச்சினை என்ன என்பதைச் சொல்வதோடு மட்டும் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும்.

*(2)* எழுப்பப்பெறும் எல்லா ஒழுங்குப் பிரச்சினைகள் பற்றியும் பேரவைத் தலைவர் முடிவு செய்ய வேண்டும். அவரது முடிவே இறுதியானது.

*(3)* இவ்விதிகளை அல்லது பேரவையின் அலுவலை முறைப்படுத்துகிற அரசமைப்புச் சட்டத்தின் பிரிவுகளைச் செயல்படுத்துதல் அல்லது பொருள் விளக்கம் கூறுதல், குறித்து ஓர் ஒழுங்குப் பிரச்சினை இருத்தல் வேண்டும், மேலும்



பேரவைத் தலைவரின் அதிகார வரம்பிற்கு உட்பட்ட பிரச்சினை ஒன்றை எழுப்புவதாக இருத்தல் வேண்டும்.

*(4)* அந்த நேரத்தில், பேரவையின் முன்னுள்ள அலுவல் குறித்து ஓர் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பப் பெறலாம்;

மேலும், பேரவையின் முன்னுள்ள ஒரு அலுவல் முடிந்து மற்றொரு அலுவலைத் தொடங்குவதற்குமுன், பேரவையின் ஒழுங்கைப் பேணுதல் பற்றியோ அல்லது பேரவையின் ஆய்விலோ உள்ள அலுவல்களின் வரிசை அமைப்புப் பற்றியோ ஒழுங்குப் பிரச்சினை ஒன்றினை எழுப்பப் பேரவைத் தலைவர் அனுமதிக்கலாம்.

*(5)* ஒழுங்குப் பிரச்சினை ஒன்றின் மீது எவ்வித விவாதமும் அனுமதிக்கப்பெறக் கூடாது. இருப்பினும், பேரவைத் தலைவர் அதன் மீது தமது முடிவைக் கூறும் முன், தேவையெனக் கருதினால், அப் பிரச்சினையின் மீது உறுப்பினர்களின் கருத்தைக் கேட்கலாம்.

*(6)* ஒரு ஒழுங்குப் பிரச்சினை உரிமை பிரச்சினையாகாது.

*(7)* ஓர் உறுப்பினர்.

(அ) தகவல் கேட்பதற்காகவோ;

(ஆ) தமது நிலையை விளக்குவதற்காகவோ;

(இ) ஒரு தீர்மானத்தின் மீதான பிரச்சினை பேரவையின் வாக்கெடுப்பிற்கு விடப்பெறும் நேரத்திலோ;

(ஈ) அனுமானத்தின் மீதோ (Hypothetical) அல்லது

(உ) ஒழுங்குப் பிரச்சினை என்ற சாக்கில் விளக்கம் கேட்பதற்காகவோ அல்லது புதிய கருத்துகளை புகுத்துவதற்காகவோ;

(ஊ) வாக்கெடுப்பு மணி ஒலிக்கவில்லை அல்லது கேட்கவில்லை என்பதாகவோ;

ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புதல் கூடாது.

*(8)* ஒழுங்குப் பிரச்சினை எழுப்பும் உரிமை தவறாகப் பயன்படுத்தப் பெறுவதாகப் பேரவைத் தலைவர் கருதினால், உறுப்பினர்களால் எழுப்பப்பெறும் எந்த ஒரு ஒழுங்குப் பிரச்சினையையும் குறித்து நடவடிக்கைக் குறிப்பின் எப் பகுதியையும் நீக்குமாறு அவர் ஆணையிடலாம்.

ஒழுங்கு காத்தல்.

*117.* பேரவைத் தலைவருக்கு இவ்விதிகளைச் செயல்படுத்துவதற்கும் ஒழுங்கின்மையைத் தடுப்பதற்கும் தேவையான அதிகாரங்கள் அனைத்தும் உண்டு.

கூறியது கூறல் அல்லது பொருத்த மற்றதை கூறல்.

*118.* உறுப்பினர் எவரேனும் பேரவையின் ஆய்வில் உள்ள பொருளுக்குத் தொடர்பற்றவைகளைத் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தாலோ, தம்முடைய அல்லது பிற உறுப்பினர்களுடைய வாதங்களையோ சலிப்புத் தட்டுமாறு திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருந்தாலோ, பேரவையின் அலுவலை வேண்டுமென்றே தடை செய்யும் நோக்கத்தோடு பேசிக் கொண்டிருந்தாலோ, அவ்வுறுப்பினரின் அந் நடத்தையைப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வருவதுடன் அவரது பேச்சை நிறுத்திக் கொள்ளுமாறு பேரவைத் தலைவர் ஆணையிடலாம்.

நடவடிக்கை குறிப்பிலிருந்து சொற்களை நீக்குதல்.

*119.* விவாதத்தில் பயன்படுத்தப்பெற்ற சொற்கள் அவதூறாகவோ, இழிவாகவோ பேரவைக்கு ஒவ்வாததாகவோ, கண்ணியக் குறைவாகவோ, குற்றத்திற்கு உட்படுத்துவதாகவோ அல்லது விதிகளுக்குப் புறம்பாக முன் அனுமதி பெறாமல் பிற உறுப்பினர் மீது குற்றம் சுமத்துவதாகவோ அமைகின்றன எனப் பேரவைத் தலைவர் கருதுவாரேயானால், அச் சொற்களை அல்லது நடவடிக்கைப் பகுதிகளைப் பேரவை நடவடிக்கைகள் பணித்துறை வெளியீட்டில் இருந்து நீக்குமாறு ஆணையிடலாம்.

உறுப்பினரை வெளியேற்றும் படி ஆணையிடல்.

*120.* உறுப்பினர் ஒருவரது நடத்தை மிகவும் ஒழுங்கீனமானது எனப் பேரவைத் தலைவர் கருதினால், அவரைப் பேரவையிலிருந்து உடனடியாக வெளியேறுமாறு அவர் கட்டளையிடலாம். அவ்வாறு பணிக்கப்பெற்ற உறுப்பினர் உடனடியாகப் பேரவையிலிருந்து வெளியேறி விடுவதோடு, அன்றைய கூட்டத்திற்கு மீண்டும் வராமலும் இருக்க வேண்டும். ஓர் உறுப்பினர் ஒரே கூட்டத் தொடரில் இரண்டாவது முறையாக அவ்வாறு வெளியேறுமாறு பணிக்கப்பெற்றால், அக்கூட்டத் தொடர் காலத்திற்கு மேற்படாதவாறு, அக்கூட்டத் தொடரில் நடக்க இருக்கும் கூட்டங்களுக்கு வராமல் இருக்குமாறு பேரவைத் தலைவர் கட்டளையிடலாம். அவ்வாறு பணிக்கப்பெற்ற ஓர் உறுப்பினர் அதன்படி கூட்டங்களுக்கு வராது இருக்கவேண்டும். அந்த உறுப்பினர் வெளியேற மறுப்பின், அவரை வலுக்கட்டாயமாக அகற்றுமாறு "பேரவை சார்ஜென்டிற்கு" பேரவைத் தலைவர் ஆணையிடலாம்,



அவ்வாறு ஆணையிடப்பெற்ற உறுப்பினரின் வராமை, அரசமைப்புச் சட்டத்தின் 190-ஆவது பிரிவு (4) உட்பிரிவின்படி வாராமை குறித்துக் கணக்கிடுவதில், சேர்த்துக்கொள்ளப் பெறமாட்டாது.

உறுப்பினரின் பெயரிட்டுக் குறிப்பிடுதல்.

*121.(1)* ஓர் உறுப்பினர், பேரவைத் தலைவரின் அதிகாரத்தை புறக்கணித்தோ அல்லது பேரவையின் விதிகளைத் தொடர்ந்து முறையற்று பயன்படுத்தி, வேண்டுமென்றே பேரவையின் அலுவலை நடைபெறாது இடைமறித்தாலோ, பேரவைத் தலைவர் தேவை என்று கருதினால், அந்த உறுப்பினரின் பெயரிட்டுக் குறிப்பிடலாம்.

*(2)* அவ்வாறு பேரவைத் தலைவரால் ஓர் உறுப்பினர் பெயரிட்டுக் குறிப்பிடப் பெற்றால், அந்த உறுப்பினர் பேரவைக் கூட்டத்தொடரின் எஞ்சியுள்ள நாட்களுக்கு மிகாமல் பேரவைப் பணிகளினின்றும் தற்காலிக நீக்கம் செய்ய வேண்டும் என்ற தீர்மானம் மொழியப் பெற்று அதனை பேரவைத் தலைவர் எவ்வித விவாதமின்றி உடனடியாக பேரவையின் முடிவிற்கு விடவேண்டும்.

எனினும், பேரவை, அம்மாதிரி நீக்கம் செய்ததை வேறு தீர்மானத்தின் மூலம் எந்த நேரத்திலும் முடிவுறச் செய்யலாம்.

*(3)* இவ்விதியின்கீழ், தற்காலிக நீக்கம் செய்யப்பெற்ற உறுப்பினர் உடனடியாக பேரவையின் அமைப்பு எல்லையினின்று வெளியேறுவதுடன் அம்மாதிரி தற்காலிக நீக்கத்தில் குறிக்கப்பெற்ற கால அளவு வரை அமைப்பு எல்லைக்கு வெளியே இருத்தல் வேண்டும்.

அவ்வாறு பணிக்கப்பெற்ற உறுப்பினர் வெளியேறுவதற்கு மறுத்தால், பேரவைத் தலைவர் சட்டமன்றக் காவல் தலைவரைக் கொண்டு உறுப்பினரை பலாத்காரமாக வெளியேற்ற ஆணையிடலாம் அன்றி அவையில் நுழைய விடாமலும் தடுக்கலாம்.

கூட்டத்தை நிறுத்தி வைத்தல்.

*122.* பேரவையின் ஒழுங்கும், அமைதியும் மிகப் பெருமளவிற்குச் சீர்குலையுமானால், பேரவைத் தலைவர் ஒரு கூட்டத்தை பேரவை அடுத்துக் கூடும் நாளுக்கு ஒத்திவைக்கவோ அல்லது அதே நாளில் ஒரு குறிப்பிட்ட நேரம்வரை நிறுத்திவைக்கவோ செய்யலாம்.

## அத்தியாயம் 15

### சட்டமியற்றல்

அறிமுகம் செய்வதற்கான முன் அறிவிப்பு.

*123.* சட்ட முன்வடிவு ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு அனுமதிகோரும் தீர்மானத்தைக் கொண்டுவர விரும்பும் உறுப்பினர் அச்சட்ட முன்வடிவின் பிரதி ஒன்றை அதற்கான காரணங்கள், நோக்கங்கள் பற்றிய விளக்கக் குறிப்புடன் (Statement) ஐந்து நாட்கள் முன்னறிவிப்போடு அதற்கான படிவத்தில் (அட்டவணை ஈ-ல் உள்ளவாறு) செயலாளரிடம் சேர்ப்பிக்க வேணடும்.

மேலும், அரசினர் சட்டமுன்வடிவு எனில் முன்னறிவிப்போடு உறுப்பினர்களுக்கு அனுப்புவதற்குத் தேவையான சட்டமுன்வடிவின் பிரதிகள் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பெறவேண்டும்.

மேலும், தனி உறுப்பினர், பேரவையில் ஒரு சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்த அனுமதி கோரி முன்னறிவிப்புக் கொடுத்தால், பேரவைத் தலைவர் அச்சட்ட முன்வடிவின் பிரிவுகளுக்கேற்ப அதன் காரணங்கள், நோக்கங்கள் பற்றிய விளக்கத்தில் ஏதேனும் மாறுதல் அவசியம் என நினைத்தால் அவற்றை மாற்றி அமைக்கலாம்.

சார்ந்துள்ள சட்ட முன் வடிவுகள்.

*124.* ஒரு சட்ட முன்வடிவு, ஏற்கெனவே பேரவையில் ஆய்விலுள்ள ஒரு சட்ட முன்வடிவின் மீது முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ சார்ந்திருப்பின், இது எந்தச் சட்ட முன்வடிவின் மீது சார்ந்திருக்கிறதோ அது பேரவையினால் ஏற்கப்பெறும் என்ற நம்பிக்கையோடு அறிமுகப்படுத்தப் பெறலாம்.

மேலும், அந்த முதல் சட்ட முன்வடிவு அவையினால் நிறைவேற்றப் பெற்று, குடியரசுத் தலைவராலோ அல்லது ஆளுநராலோ எவ்வகையில் ஒப்பளிக்கப்பெற வேண்டுமோ அவ்வாறு ஒப்புதல் அளிக்கப்பெற்ற பின்னர்தான் இந்த இரண்டாவது சட்ட முன்வடிவு பேரவையின் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பெற்று நிறைவேற்றப்பெற வேண்டும்.



ஒருமித்த (Identical) சட்ட முன் வடிவுகள்.

*125.* பேரவையின் ஆய்வில் ஒரு சட்ட முன்வடிவு இருக்கும்போது, அதனை அறிமுகப்படுத்துவதற்கு முன்னரோ, பின்னரோ, அதே போன்றதொரு (Identical) சட்டமுன்வடிவுக்கு வரப்பெற்ற அறிவிப்பு பேரவைத் தலைவர் வேறு விதமாக பணித்தாலன்றி, தள்ளுபடி செய்யப்பெறும்; அல்லது நிலுவையில் உள்ள அறிவிப்புகள் பட்டியலில் சேர்க்கப்பெறாது.

சட்டமுன் வடிவுகளில் நிதி விளக்கக் குறிப்பும் நிதிப் பிரிவுகளும்.

*126.* பணச்செலவினை ஏற்படுத்தும் ஒரு சட்டமுன்வடிவோடு நிதி விளக்கக் குறிப்பு ஒன்றினை இணைத்து அனுப்ப வேண்டும். அக்குறிப்பு செலவு ஏற்படுத்தும் பிரிவுகளைச் சுட்டிக்காட்டுவதோடு, அச்சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப் பெற்றால், அதனால் ஏற்படக்கூடிய தொடர் செலவு, தொடராச் செலவு ஆகியவைகளின் மதிப்பீடுகளும் அதில் காணப்பெற வேண்டும்.

மேலும், சட்டமுன்வடிவில் செலவினைக் குறிக்கும் பிரிவுகள் தடித்த எழுத்திலோ அல்லது சாய்ந்த எழுத்திலோ உறுப்பினர்களது கவனத்தைக் கவரும் வகையில் அச்சிடப் பெற வேண்டும்.

சட்டமியற்றும் அதிகார ஒப்படைவு வழங்கியுள்ள சட்ட முன் வடிவுகளுக்கு விளக்கக் குறிப்புகள்.

*127.* ஒரு சட்ட முன்வடிவில் சட்டமியற்றும் அதிகாரத்தை ஒப்படைவு செய்யும் செயற்குறிப்புகள் இருக்குமாயின், அவற்றையும் அவற்றின் வரையறைகளையும் விளக்கி அந்த ஒப்படைவு சாதாரணமானதா அல்லது தனித் தன்மை வாய்ந்ததா என்பதையும் சுட்டிக்காட்டி ஒரு விளக்கக் குறிப்பு அச்சட்ட முன்வடிவோடு இணைக்கப்பெற வேண்டும்.

மேலும், சட்ட முன்வடிவின் ஏதேனும் ஒரு பிரிவு சட்டமியற்றும் அதிகாரங்களை அரசுக்கோ அல்லது அதன் அதிகாரத்திற்குட்பட்ட வேறோர் அமைப்புக்கோ ஒப்படைவு செய்வதாக இருப்பின், அது சட்ட விதிகள் ஆய்வுக்குழுவால் (Committee on Delegated Legislation) விதிக்கப்பெற்ற விதிகளுக்கோ அல்லது கோட்பாடுகளுக்கோ உட்படாது இருந்தால் அக்குழுவின் பரிந்துரைகள்படி அமைக்கப் பெறுவதற்கு பேரவைத் தலைவர் அச்சட்ட முன்வடிவினை திருப்பிவிடலாம்.

மேலும், சட்டமியற்றும் அதிகார ஒப்படைவுகள் அடங்கிய பிரிவுகள் அடிக்கோடிட்டு அல்லது பக்கக் கோடிட்டு இருத்தல் வேண்டும்.

சட்டமுன் வடிவுகள் அறிமுகம் செய்ய பரிந்துரை அல்லது முன் இசைவு.

*128. சட்ட முன்வடிவு அல்லது திருத்தம் ஒன்று ஆளுநர் பரிந்துரை அல்லது குடியரசுத் தலைவரின் முன் ஒப்புதல் இன்றி கொண்டு வரப்பெற முடியாது எனப் பேரவைத் தலைவர் கருதுவாரேயாயின் அத்தகைய சட்ட முன்வடிவு அல்லது திருத்தம் பற்றிய முன்னறிவிப்பு வந்தவுடன், அந்தச் சட்ட முன்வடிவு அல்லது திருத்தத்தை, பரிந்துரை அல்லது முன் இசைவு அளிக்க அதிகாரம் பெற்றவருக்கு பேரவைத் தலைவர் அனுப்ப வேண்டும். அவ்வாறு பரிந்துரை அல்லது முன் இசைவு அளிக்கப் பெற்றாலன்றி அத் தீர்மானம் அலுவல் பட்டியலில் சேர்க்கப்பெறக் கூடாது.*

அறிமுகப் படுத்த அனுமதி கோரும் தீர்மானம்.

*129. (1) ஒரு சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்த அனுமதி கோரும் தீர்மானம் எதிர்க்கப் பெற்றால் பேரவைத் தலைவர், தாம் தேவையெனக் கருதினால், அத் தீர்மானத்தை மொழியும் உறுப்பினரையும் எதிர்க்கும் உறுப்பினரையும் அவர்களது கருத்தை சுருக்கமாகக் கூற அனுமதித்த பிறகு, மேற்கொண்டு எவ்வித விவாதமும் இன்றி பேரவையின் முடிவிற்கு அதை விட வேண்டும்.*

*(2) அத்தகைய தீர்மானம் ஏற்கப் பெற்றால் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெறலாம்.*

வெளியிடுதல்.

*130. சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றபின் கூடிய விரைவில் அச்சட்ட முன்வடிவு, காரணங்கள், நோக்கங்கள் பற்றிய விளக்க அறிக்கையோடு அரசிதழில் வெளியிடப் பெற வேண்டும்.*

*எனினும், சட்ட முன் வடிவை அறிமுகப்படுத்துவதற்கு அனுமதி கோரும் தீர்மானம் எதுவும் வரப்பெறாத நிலையிலேயே சட்ட முன்வடிவு ஒன்றினை அதன் காரணங்கள், நோக்கங்கள் பற்றிய விளக்க அறிக்கையோடு அரசிதழில் வெளியிடுமாறு பேரவைத் தலைவர் ஆணையிடலாம். அவ்வாறு வெளியிடப் பெறின், அச்சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்துவதற்கு அனுமதி கோரும் தீர்மானம் தேவையில்லை. மேலும், அவ்வாறு வெளியிடப்பெற்ற சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றால், அது மறுமுறையும் அரசிதழில் வெளியிடப் பெற வேண்டியதில்லை.*



சட்டமுன் வடிவுகள் பற்றிய தீர்மானங்கள் கொண்டு வருவோர்.

*131. ஒரு சட்ட முன்வடிவு ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் அல்லது அது நிறைவேற்றப் பெற வேண்டுமென்ற தீர்மானத்தை, அச்சட்ட முன்வடிவிற்குப் பொறுப்புடைய உறுப்பினரைத் தவிர வேறு எவரும் கொண்டுவரலாகாது. மேலும், ஒரு சட்டமுன்வடிவு ஆய்வுக்குழுவிற்கு அனுப்பப் பெற வேண்டும் அல்லது மக்கள் கருத்தை தெரிந்து கொள்வதற்காக சுற்றுக்கு அனுப்பப்பெற வேண்டும் அல்லது மறு சுற்றுக்கு அனுப்பப்பெற வேண்டுமென்ற தீர்மானத்தை, அச்சட்ட முன்வடிவிற்குப் பொறுப்புடைய உறுப்பினரைத் தவிர, வேறு எவரும் மூலத் தீர்மானத்திற்குத் திருத்தமாக அன்றி கொண்டுவரலாகாது.*

*எனினும், ஒரு சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்ற பிறகு அதற்கு பொறுப்புள்ள உறுப்பினர், அச்சட்ட முன்வடிவு சம்பந்தமான அடுத்த கட்டத்தீர்மானத்தைக் கொண்டுவர இயலாதிருப்பின் அதற்கான காரணங்கள் போதுமானவை எனப் பேரவைத் தலைவர் கருதினால், பேரவைத் தலைவரின் அனுமதியோடு, அக்குறிப்பிட்ட தீர்மானத்தை மொழிய மற்றொரு உறுப்பினருக்கு அவர் அதிகாரமளிக்கலாம்.*

**விளக்கம்:** *வரம்பு நிபந்தனை (Proviso) எவ்வாறு இருப்பினும், அச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்த உறுப்பினரே தொடர்ந்து அச்சட்ட முன்வடிவுக்குப் பொறுப்புடைய உறுப்பினராக இருப்பார்.*

அறிமுகத் திற்கு பின் வரும் தீர்மானம்.

*132. (1) ஒரு சட்ட முன்வடிவு அரசிதழில் வெளிவந்த பின் எந்நேரத்திலும் அச்சட்ட முன்வடிவுக்குப் பொறுப்புடைய உறுப்பினர் 5 நாட்கள் முன்னறிவிப்புக் கொடுத்து, அச்சட்ட முன்வடிவு பற்றிய கீழ்க்கண்ட தீர்மானங்களில் எதையேனும் ஒன்றைக் கொண்டு வரலாம்:—*

*அவையாவன:—*

*(அ) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்; அல்லது*

*(ஆ) பேரவையின் ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப் பெற வேண்டும்.*

*(இ) மக்கள் கருத்தைத் தெரிந்து கொள்வதற்காக சுற்றுக்கு அனுப்பப் பெற வேண்டும்.*

எனினும், மேற்கூறிய தீர்மானம் எதுவும் கொண்டு வரப் பெறுவதற்கு இரண்டு நாட்கள் முன்னதாக உறுப்பினர்கள் அனைவருக்கும் அச்சட்ட முன்வடிவின் பிரதிகள் கிடைக்கச் செய்யாவிடின் எந்த உறுப்பினரேனும் அத்தீர்மானம் கொண்டு வரப் பெறுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கலாம். அவ்வித எதிர்ப்பு பேரவைத் தலைவர் அத்தீர்மானத்தைக் கொண்டுவர அனுமதித்தால் அன்றி ஏற்றுக் கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெறும்.

(2) அச்சட்டத் தீர்மானத்தின் மீது சட்ட முன்வடிவிற்கு பொறுப்பான உறுப்பினர் சட்ட முன்வடிவின் பொது நோக்கத்தினைக் குறித்து சுருக்கமாக விளக்க வேண்டும். ஆனால், அதன் அடிப்படைக் கருத்துக்களை விளக்குவதற்காகவன்றி, அச்சட்ட முன்வடிவின் நுணுக்கங்களைப் பற்றி விவாதிக்கலாகாது.

கருத்தறிந்த பின் வரும் தீர்மானங்கள்.

133. ஒரு சட்ட முன்வடிவின் மீது மக்கள் கருத்து அறிவதற்கென சுற்றுனுப்பப்பெற வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப்பெற்று, அதற்கிணங்க அது சுற்றனுப்பப் பெற்று அதன்மீது பொதுமக்கள் கருத்துவரப் பெற்றிருந்தால், அதற்குப் பொறுப்புடைய உறுப்பினர் மேற்கொண்டு அச்சட்ட முன்வடிவைத் தொடர விரும்பினால், அச்சட்ட முன்வடிவை உடனே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற தீர்மானத்தைப் பேரவைத் தலைவர் அனுமதித்தாலன்றி அது ஆய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பெற வேண்டுமென்ற தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டும்.

திருத்தங்கள்.

134. ஒரு சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் என்ற தீர்மானம் பேரவையில் நிறைவேற்றப்பெற்றால் அச்சட்ட முன்வடிவுக்கு எந்த உறுப்பினரும் திருத்தம் கொண்டுவரலாம்.

திருத்தங் களுக்கான முன் அறிவிப்பு.

135. (1) கொண்டுவரப்பெறும் திருத்தங்களுக்கான முன்னறிவிப்புகள் அச்சட்ட முன்வடிவை பேரவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்கின்ற நாளிற்கு துல்லியமாக மூன்று நாட்களுக்கு முன்னதாகவே, செயலாளருக்கு அனுப்பப்பெற வேண்டும்.

(2) செயலாளர், போதிய அவகாசம் இருந்தால் கொடுக்கப்பெற்ற ஒவ்வொரு திருத்தத்தின் முன்னறிவிப்பையும் எல்லா உறுப்பினர்களுக்கும் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.



திருத்தங்களின் வரிசை முறை.

136. பேரவைத் தலைவர், வேறு விதமாகப் பணித்தாலன்றி, திருத்தங்கள் சட்டமுன்வடிவுகளின் எந்ததெந்தப் பிரிவுகளைச் சார்ந்தவையோ, அந்தந்தப் பிரிவுகளின் வரிசை முறைப்படி ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.

சட்டமுன் வடிவுகளை பிரிவு வாரியாக எடுத்துக் கொள்ளுதல்.

137. ஒரு சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டுமென்று தீர்மானம் நிறைவேறியபிறகு பேரவைத் தலைவர் உசிதப்படி அச்சட்ட முன்வடிவை முழுமையாகவோ, பகுதிகளாகவோ பிரிவு வாரியாகவோ பேரவையின் ஆய்வுக்கு வைக்கலாம். இந்நடைமுறை கடைப்பிடிக்கப் பெற்றால், பேரவைத் தலைவர், ஒவ்வொரு பிரிவையும் தனித்தனியாக எடுத்துக்கொண்டு அப்பிரிவிற்கு உரிய திருத்தங்கள் விவாதிக்கப் பெற்று முடிவான பின், அப்பிரிவு அல்லது திருத்தப்பெற்ற அப்பிரிவு சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக வேண்டும் என்னும் தீர்மானத்தைப் பேரவையின் முடிவிற்கு விட வேண்டும்.

பிரிவுகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டிய வரிசை முறை.

138. ஒரு சட்ட முன்வடிவின் பிரிவுகள் கீழ்க்காணும் வரிசையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.

(i) குறுந்தலைப்பைப் பற்றிய பிரிவு நீங்கலாக மற்ற பிரிவுகள் அவற்றின் வரிசை முறைப்படி.

(ii) இணைப்புகள் அவற்றின் வரிசை முறைப்படி.

(iii) குறுந்தலைப்பை பற்றிய பிரிவு.

(iv) முகப்புரை

(v) நெடுந்தலைப்பு

எனினும், பேரவைத் தலைவர் பொருத்தமெனக் கருதினால், ஒரு பிரிவின் ஆய்வையும் வாக்கெடுப்பையும் அதன் பின்னால் வரும் சில பிரிவுகளின் அல்லது எல்லாப் பிரிவுகளின் ஆய்வும் முடிகின்ற வரையில் தள்ளிவைக்கலாம்.

சட்டமுன் வடிவுகளை நிறை வேற்றுதல்.

139. (1) பேரவையில், ஒரு சட்ட முன்வடிவு ஆய்வு செய்யப்பெறுகையில், அதில் திருத்தம் ஏதும் செய்யப்பெறாவிட்டால், அவ்வாய்வு முடிவுற்றவுடன், அச்சட்ட முன்வடிவுக்குப் பொறுப்புடைய உறுப்பினர் அச்சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டும் என்றும் மொழியலாம்.

(2) பேரவையில் ஒரு சட்ட முன்வடிவு ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பெற்று, அதில் திருத்தம் ஏதும் செய்யப்பெறின் அவ்வாய்வு முடிவுற்றவுடன், அச்சட்ட முன்வடிவு

நிறைவேற்றப்பெற வேண்டும் என்ற தீர்மானத்தை அக்கூட்டத்திலேயே கொண்டுவரக் கூடாதென எவ்வுறுப்பினரும் எதிர்ப்புத் தெரிவிக்கலாம். அதன்மேல் பேரவைத் தலைவர், அவ்வித வேண்டுகோள் வீணானது (Frivolous) அல்லது நியாயமற்றது எனக் கருதினால் அன்றி, அச்சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற வேண்டும் என்ற தீர்மானத்தை அக்கூட்டத்திலேயே கொண்டுவர அனுமதிக்கக் கூடாது. ஆனால், அச்சட்ட முன்வடிவை மேற்கொண்டு ஆய்வதற்கு அடுத்துவரும் கூட்டத்தில் தீர்மானம் கொண்டுவரலாம்.

(3) அவ்வாறு ஒரு சட்ட முன்வடிவை மேற்கொண்டு ஆய்விற்காக பின்வரும் கூட்டத்தில் தீர்மானம் கொண்டுவரப்பெற்றால், அச்சட்ட முன்வடிவில் ஏதாவது சொற்பிழைகள் அல்லது நிறைவேற்றப்பட்ட திருத்தங்கள் முறைப்படி தேவைப்படும் பின் தொடர்பான திருத்தங்களையும் தவிர, வேறு திருத்தங்கள் எதையும் செய்யலாகாது.

(4) அவ்வாறு அச்சட்ட முன்வடிவு மேற்கொண்டு விவாதிக்கப்பெற்ற ஆய்வு முடிவுறின், அச்சட்ட முன்வடிவுக்குப் பொறுப்புடைய உறுப்பினர் அச்சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டும் என்று மொழியலாம்.

(5) இவ்விதியின் உள்விதிகள் (2), (3) மற்றும் (4) ஆகியவை நிதிச் சட்ட முன்வடிவுக்குப் பொருந்தாது.

விவாதத்திற்கான வரம்பு.

140. சட்டமுன்வடிவு அல்லது திருத்தப்பெற்ற சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெறவேண்டும் என்ற தீர்மானத்தின் மீதான விவாதம், அச்சட்ட முன்வடிவு ஏற்கப்பெற வேண்டும் அல்லது நிராகரிக்கப்பெறவேண்டும் என்பதற்கான வாதங்கள் அடங்கியதாக மட்டுமே இருக்க வேண்டும். அத்தகைய விவாதத்தின் போது உறுப்பினர் ஒருவர் அச்சட்ட முன்வடிவின் நுணுக்கமான விவரங்களைத் தமது வாதத்திற்கு தேவைப்படும் அளவிற்கு மேல் விரிவாக குறிப்பிடக்கூடாது. அவரது வாதங்கள் பொதுத்தன்மையுடையதாகவே இருக்க வேண்டும்.

சட்டமுன்வடிவுகள் உறுதியாக்கம். (Authentication).

141. ஒரு சட்ட முன்வடிவு பேரவையில் நிறைவேற்றப்பெற்ற பின், அதன் பிரதி ஒன்றில் பேரவைத் தலைவர் கையொப்பமிட்டு ஆளுநரின் ஒப்பளிப்புக்காக (Assent) அனுப்பி வைக்கப் பெறவேண்டும்.



ஆயினும், நிதிச்சட்ட முன்வடிவைப் பொறுத்தவரை, அந்தச் சட்டமுன்வடிவு நிதிச்சட்டமுன்வடிவு எனப் பேரவைத்தலைவர் அளிக்கும் சான்றிதழோடு அனுப்பி வைக்கப்பெற வேண்டும்.

தெளிவாக தெரிகிற பிழைகளைத் திருத்துதல்.

142. ஒரு சட்டமுன்வடிவு, பேரவையினால் நிறைவேற்றப் பெற்று, அதில் தெளிவாக பிழைகள் எனத் தெரிவதைத் திருத்தவும் பேரவையினால் ஏற்றுக்கொள்ளப்பெற்ற திருத்தங்களின் காரணமாக தேவைப்பெறும் மாற்றங்களைச் செய்யவும் பேரவைத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

ஆளுநரால் திருப்பி யனுப்பப் பெற்ற சட்டமுன் வடிவுகளின் மறு ஆய்வு.

143. பேரவையால் நிறைவேற்றப்பெற்ற சட்டமுன்வடிவு ஆளுநரால் அவைக்கு மறு ஆய்வு செய்வதற்காக திருப்பி அனுப்பப்பெறின், அதன் எக்கூறு அல்லது கூறுகள் அல்லது திருத்தங்கள் மறு ஆய்வு செய்யப்பெற வேண்டும் என்று ஆளுநர் பரிந்துரை செய்துள்ளாரோ அவை பேரவை முன் பேரவைத் தலைவரால் வைக்கப்பெற்று ஒரு சட்டமுன்வடிவின் திருத்தங்கள் மீதான விவாதமும் வாக்கெடுப்பும் நடக்கும் முறைப்படியோ அல்லது அவற்றை ஆய்வு செய்வதற்கு மிக வசதியாக இருக்கும் என்று பேரவைத் தலைவர் கருதும் வேறு வகையிலோ விவாதிக்கப்பெற்று வாக்கெடுக்கப்பெற வேண்டும்.

ஆய்வுக் குழுவின் அமைப்பு.

144. (1) சட்ட முன்வடிவிற்குத் தொடர்பான துறைக்குப் பொறுப்புடைய அமைச்சரும் அச்சட்ட முன்வடிவினை அறிமுகப்படுத்திய உறுப்பினரும் ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

(2) சட்டமுன்வடிவின் மீதான எந்த ஒரு ஆய்வுக் குழுவிலும் பேரவையின் தனி அனுமதி இன்றி 25 உறுப்பினர்களுக்கு மேல் இருக்கக்கூடாது. எக்காரணம் கொண்டும், எந்த ஆய்வுக் குழுவிலும் 40 உறுப்பினர்களுக்கு மேல் இருக்கக்கூடாது. ஆய்வுக் குழுவில் இடம் பெறும் உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து (40-க்கு மேற்படாத) அவ்வெண்ணிக்கையைக் குறிப்பிடும் தீர்மானம் மூலம் பேரவையின் அனுமதி கேட்கப் பெற வேண்டும். ஓர் ஆய்வுக் குழுவின் உறுப்பினர்கள் எண்ணிக்கையைக் கணக்கிடும்போது, அரசமைப்புச் சட்டத்தின் 177-வது பிரிவின்படி குழுவில் நியமிக்கப்பட்டவர் எவரையும் கணக்கில் எடுத்துக் கொள்ளக்கூடாது.

(3) அரசினர் சட்டமுன்வடிவைப் பொறுத்தவரை பேரவை கூடாதிருக்கும் நேரத்தில் அமைச்சர்களிடையே இலாகா மாற்றங்கள் இருந்து, உள் விதி (1)-இல் குறிப்பிட்டுள்ளவாறு, சட்ட முன்வடிவிற்கான பொறுப்புள்ள துறையின் சம்பந்தப்பட்ட அமைச்சரைப் பொறுத்து மாற்றம் இருப்பின், அச்சட்ட முன்வடிவிற்குச் சம்பந்தப்பட்ட துறைக்குப் பொறுப்பான அமைச்சரை குழுவின் உறுப்பினராக பேரவைத் தலைவர் நியமிக்கலாம்.

(4) ஒரு குழுவில் தற்செயலாக ஏற்படும் வெற்றிடங்களைப் பேரவைத் தலைவர் நியமனம் முறையில் நிரப்ப வேண்டும். அவ்வாறு நியமிக்கப்பெறும் உறுப்பினர் யாருடைய வெற்றிடத்தை நிரப்ப நியமனம் செய்யப்பெறுகிறாரோ அவரது பதவியின் எஞ்சிய காலத்திற்கு மட்டுமே பதவி வகிக்கலாம்.

(5) எந்த ஒரு குழுவிலேனும் அக் குழுவின் கூட்டங்களுக்குத் தொடர்ந்தாற்போல் மூன்று கூட்டங்களுக்கு வராமலிருந்தால், அதனைப் பேரவைச் செயலாளர் பேரவைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். பேரவைத் தலைவர் உசிதம் எனக் கருதினால் அந்த உறுப்பினரை அந்தக் குழுவின் உறுப்பினர் பொறுப்பிலிருந்து நீக்கலாம்.

**விளக்கம்:** இவ்விதியைப் பொறுத்தமட்டில் ஒரு குழுவின் கூட்டம் தொடர்ந்து அடுத்தடுத்து நாட்களில் கூடினால் அக்கூட்டத்தொடர் ஒரே கூட்டமாகக் கணக்கிட வேண்டும்.

ஆய்வுக் குழுவில் இடம் பெறுவோரின் முன் இசைவு.

145. (1) ஆய்வுக் குழு ஒன்றினை அமைக்க வேண்டுமென்ற தீர்மானத்தைக் கொண்டுவர விரும்பும் ஒவ்வொரு உறுப்பினரும், ஆய்வுக் குழுவில் இடம் பெறவேண்டுமென்று தாம் விரும்பும் உறுப்பினர்கள் அக்குழுவில் பணியாற்ற விருப்பம் உடையவர்களா என்பதை முன்கூட்டியே அறிந்துகொள்ள வேண்டும்.

(2) ஆய்வுக் குழுவில் பணியாற்ற விருப்பம் இல்லாத உறுப்பினர் எவரையும் அக்குழுவில் நியமிக்கக்கூடாது.

ஆய்வுக் குழுவின் தலைவர்.

146. (1) ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களில் ஒருவரை அதன் தலைவராகப் பேரவைத் தலைவர் நியமிக்க வேண்டும். அவ்வாறு நியமிக்கப்பெற்றவர் அக்குழுவின் கூட்டங்களுக்கு தலைமை வகிக்கவேண்டும். குழுத் தலைவர் வராவிட்டால் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படும் குழு உறுப்பினர்களில் ஒருவர் தலைமை வகிக்கலாம்.



(2) குழுத் தலைவர் அப் பொறுப்பிலிருந்து விலகினால் அக்குழுவின் தலைவராக குழு உறுப்பினர்களிலிருந்து ஒருவரைப் பேரவைத் தலைவர் நியமிக்கலாம். அரசினர் சட்டமுன்வடிவுக்கு சம்பந்தப்பட்ட இலாகா பொறுப்புடைய அமைச்சரில் மாறுதல் ஏற்பட்டு, அதனால் குழுத் தலைவர் பதவியிலிருந்து விலகினாலோ அல்லது இலாகாவிற்குப் பொறுப்பேற்கும் அமைச்சர் குழுத் தலைவராக நியமிக்கப்பெற வேண்டுமென்று விரும்பினாலோ அக்கோரிக்கையை ஆய்ந்து, குழுவிற்குப் புதிய தலைவரை நியமிக்கும் அதிகாரம் பேரவைத் தலைவருக்கு உண்டு.

(3) ஆய்வுக் குழு அதன் உறுப்பினர் எவரேனும் வராவிட்டாலும் அஃது அமைக்கப்பெற்றபின் அதில் வெற்றிடம் ஏதேனும் ஏற்பட்டிருந்தாலும் அதைப் பொருட்படுத்தாது தன் பணியைத் தொடர்ந்து ஆற்றலாம்.

ஆய்வுக்குழு கூடும் இடம்.

147. சட்ட மன்றப் பேரவை அமைப்பு எல்லைக்குள் தான் குழுக்கூட்டங்கள் நடைபெற வேண்டும். ஆனால், சட்டமன்றப் பேரவை அமைப்பு எல்லைக்கு அப்பால் இம்மாநிலத்தில் குழு ஆய்வுப் பயணம் மேற்கொள்ள அவசியம் ஏற்படின், பேரவைத் தலைவரின் அனுமதி பெற வேண்டும். இதில் அவரது முடிவே இறுதியானதாகும்.

குழுவின் கூட்டங்கள்.

148. ஒரு குழுவின் கூட்டம் குழுத் தலைவரால் குறிப்பிடப்பெறும் நாட்களிலும் நேரத்திலும் நடைபெற வேண்டும்;

தேவையெனின், குழுவைக்கூட்ட வேண்டிய அல்லது ஏற்கெனவே குறிப்பிடப்பெற்றுள்ள நேரம், தேதி இவைகளில் ஏதேனும் மாற்றம் செய்யவேண்டியிருந்து, அம்மாதிரியான மாற்றம் செய்ய தலைவருடன் எளிதில் தொடர்புகொண்டு செய்ய இயலாதபோது செயலாளரே அவ்வித மாற்றம் செய்யலாம்.

மேலும், ஒரு சட்டமுன்வடிவு சம்பந்தப்பெற்ற ஆய்வுக் குழு எனில், அக்குழுவின் தலைவர் எளிதில் தொடர்பு கொள்ள முடியாமல் இருந்தால், செயலாளர் அச்சட்ட முன்வடிவிற்குப் பொறுப்பான அமைச்சருடன் கலந்தாலோசித்து, குழுவின் கூட்டத்திற்கான நாளையும் நேரத்தையும் குறிப்பிடலாம்.

உட்குழுக்கள்.

*149.* ஒரு ஆய்வுக் குழு, அந்தச் சட்ட முன்வடிவில் எழும் ஏதேனும் சிறப்புக் கூறு அல்லது கூறுகளை ஆய்தல் பொருட்டு உட்குழு ஒன்றினை நியமிக்கலாம். உட்குழுவிற்கு அனுப்பப்பெறும் ஆணைக் குறிப்பில், எக்கூறு அல்லது கூறுகளைப் பரிசீலிக்க வேண்டும் என்பதனைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். உட்குழுவின் அறிக்கை ஆய்வுக் குழுவினால் பரிசீலிக்கப்பெற வேண்டும்.

ஆய்வுக் குழு சாட்சியம் அல்லது சான்று பெறும் அதிகாரம்.

*150. (1)* ஒரு ஆய்வுக்குழு அதன் முன் ஆய்வில் உள்ள சட்ட முன்வடிவின் பிரிவுகளினால் பாதிக்கப் பெறலாம் என்பவர்களின் பிரதிநிதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட வல்லுநர்கள் ஆகியோர்களுடைய சாட்சியங்களைக் கேட்கலாம்.

*(2)* இதற்காக இம்மாநிலத்தின் எல்லைக்குள் வாழும் எவரையும் சாட்சியம் அளிக்க வரவும், தேவையெனக் கருதுகிற ஆவணங்கள், பதிவேடுகள் ஆகியவற்றைத் தாக்கல் செய்யவும் கோரலாம். அதன்பேரில் எழுத்து மூலமான ஆணையில் செயலாளர் கையெழுத்திட்டு, சம்பந்தப்பட்ட நபருக்கு அனுப்பப் பெறவேண்டும்.

எனினும், ஒரு ஆவணத்தை வெளியிடுவது, பொது நலனுக்கு உகந்ததன்று என்ற காரணத்திற்காக அந்த ஆவணத்தைக் குழுவின் முன் தாக்கல் செய்ய அரசு மறுக்கலாம்.

மேலும் எந்த ஒரு ஆவணமேனும் குழுவின் ஆய்விலுள்ள ஆய்வுப் பொருளுக்குத் தேவைதானா என்ற பிரச்சினை எழுப்பப்பெறின் அதனைப் பேரவைத்தலைவரின் முடிவிற்கு அனுப்ப வேண்டும். அதில் அவரது முடிவே இறுதியானதாகும்.

*(3)* குழுவின் முன் அளிக்கப்படும் குறிப்பு அல்லது எழுத்து வாக்கு மூலம் அல்லது அதன் முன் அளிக்கப்பெற்ற சாட்சியம் எவையேனும் அளவிற்கு மீறி நீண்டதாகவோ அல்லது சலிப்பூட்டும் வகையிலோ தேவையற்ற வாதங்கள் அல்லது அவதூறான வகையில் அல்லது தொடர்பற்றவைகளை உள்ளடக்கியிருப்பதாகக் குழு கருதுமேயானால் மறுப்புக்குரிய பகுதியை நீக்கப்பட்டபின் ஏனைய பகுதி தேவையற்றதாக இருக்குமானால் முழுமையாகவோ அல்லது மறுப்புக்குரிய பகுதிகளை மட்டுமோ நீக்க ஆணையிடலாம்.

*(4)* குழுவின் முன் விசாரிக்கப்பெறும் சாட்சிக்கு ஆய்வுக்குழு, பிரமாணம் அல்லது உறுதிமொழி எடுத்து வைக்கலாம்.



*151.* குழுவின் எந்த ஒரு கூட்டத்திலேனும் எழுப்பப்பெறும் அனைத்து பிரச்சினைகளும் வந்திருந்து வாக்களிக்கத் தகுதி பெற்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளின் எண்ணிக்கை கொண்டு முடிவு செய்யப்பெற வேண்டும்.

குழுவில் வாக்கெடுப்பு.

*152.* எந்தப் பிரச்சினை மீதாகிலும் அளிக்கப்படும் வாக்குகள் சமமாக இருப்பின், குழுத் தலைவருக்கு இரண்டாவது அல்லது முடிவுறச் செய்யும் வாக்களிக்கும் உரிமை உண்டு.

தலைவரின் கூடுதல் வாக்கு.

*153.* ஆய்வுக் குழுவின் கூட்டம் நடக்கும்போது வெளியார்கள் அனுமதிக்கப்பெறக்கூடாது. சாட்சிகளை விசாரணை செய்யும்போது மட்டும், ஆய்வுக் குழுவின் பெரும்பான்மையோர் விரும்பினால், வெளியார்கள் இருக்க அனுமதிக்கலாம்.

குழுக் கூட்டங்களில் வெளியார்கள்.

எனினும், ஓர் அமைச்சர் அக்குழுவில் உறுப்பினராக இல்லாவிட்டாலும், குழுத் தலைவரின் அனுமதியின்பேரில், குழுவில் உரை ஆற்றலாம்.

*154.* பேரவை நடைமுறை விதிகள் ஆய்வுக் குழுவின் நடைமுறைக்கும் பொருந்தும்; ஆனால்

ஆய்வுக் குழுவின் நடைமுறை.

(i) திருத்தங்களுக்கான முன்னறிவிப்புத் தேவை இல்லை;

(ii) தீர்மானமோ திருத்தமோ வழிமொழியப் பெற வேண்டியதில்லை; மற்றும்

(iii) குழுத் தலைவரின் இசைவுடன் உறுப்பினர் ஒரு பொருளின் மீது ஒரு தடவைக்கு மேலும் பேசலாம்.

*155.* ஒரு சட்ட முன்வடிவின் மீதான ஆய்வுக் குழு, அது பொருத்தமானது எனக் கருதும் திருத்தங்களை அச்சட்ட முன்வடிவில் செய்யலாம்; எனினும் அத்திருத்தங்கள் அச்சட்ட முன்வடிவின் பொருளுக்கு ஏற்புடையதாக இருக்க வேண்டும். அத்தகைய திருத்தங்கள் எவையேனும், அச்சட்ட முன்வடிவின் தலைப்பிற்கு உட்படாதிருப்பின், அத் திருத்தங்களுக்கு ஏற்ப தலைப்பை மாற்றி அதைக் குறிப்பிட்டு தனது ஆய்வறிக்கையுடன் பேரவைக்கு அனுப்ப வேண்டும்.

திருத்தங்கள் செய்ய ஆய்வுக் குழுவின் அதிகார வரம்பு.

ஆய்வுக் குழுவின் அறிக்கை.

156. (1) ஆய்வுக்குழுவிற்கு அனுப்பப்பெற்ற ஒரு சட்ட முன்வடிவின் மீது அக்குழு தனது ஆய்வு அறிக்கையை அதன் தலைவர் மூலமாகவோ அவர் இல்லாவிட்டால், குழுவின் மற்ற எந்த உறுப்பினர் மூலமாகவேனும் அவையினால் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் அவைக்கு அளிக்கப்பெற வேண்டும்.

அவ்வாறு அறிக்கை அளிக்கப்பெறுவதற்கான காலம் குறிப்பிடப்படாதிருப்பின், அச்சட்ட முன்வடிவு ஆய்வுக்குழுவிற்கு அனுப்பப்பெற வேண்டும் என்ற தீர்மானம் பேரவையில் நிறைவேறிய தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் பேரவைக்கு அளிக்க வேண்டும்.

எனினும், பேரவை எந்த நேரத்திலும், தீர்மானம் ஒன்றின் மூலம், ஆய்வுக் குழுவின் அறிக்கை அளிக்கப் பெறவேண்டிய தேதியை தீர்மானத்தில் குறித்து காலவரையறையை மேலும் நீட்டிக்கலாம்.

(2) அறிக்கை முதல் கட்டமானதாகவோ (Preliminary) அல்லது இறுதியானதாகவோ இருக்கலாம். குழுவிற்குத் தலைமை வகிப்பவரால் கையொப்பமிடப் பெற்று இருக்க வேண்டும்.

(3) (அ) மாற்றுக் கருத்துக் குறிப்புகள் ஏதேனும் (Minute of dissent) இருந்து, குழுவிற்கு குறிப்பிட்ட காலத்திற்குள் கிடைக்கப்பெறின் அவை குழுவின் அறிக்கைக்குப் பின் தனியே இணைக்கப் பெற வேண்டும்.

(ஆ) மாற்றுக் கருத்துக் குறிப்புக்கள் கண்ணியமான நடையில் அமைந்திருக்க வேண்டும். மேலும், ஆய்வுக் குழுவின் விவாதங்களைக் குறிப்பவையாகவோ அல்லது குழுவின் மீது களங்கம் கற்பிக்கும் வகையிலோ இருத்தல் கூடாது.

(இ) குழுவின் கூட்டங்கள் எதிலும் கலந்து கொள்ளாத உறுப்பினர் ஒருவர் மாற்றுக் கருத்துக் குறிப்புகள் கொடுப்பதற்குத் தகுதியற்றவராவார்.

(ஈ) பேரவைத் தலைவர் மாற்றுக் கருத்துக் குறிப்பில் ஒவ்வாத சொற்கள், சொற்கோவைகள், சொற்றொடர்கள் அடங்கியுள்ளன என்று கருதினால் அச்சொற்கள், சொற்கோவைகள், சொற்றொடர்கள் ஆகியவற்றை மாற்றுக் கருத்துக் குறிப்பிலிருந்து நீக்கி விடுமாறு ஆணையிடலாம்.



அறிக்கைகள் அச்சிடுதலும் வெளியிடுதலும்.

157. மாற்றுக் கருத்துக் குறிப்புகள் எவையேனும் இருப்பின் அவற்றோடு, குழுவின் அறிக்கை, குழுவினால் திருத்தப் பெற்றபடியான சட்ட முன்வடிவு, குழுவின் நடவடிக்கைக் குறிப்புகள் ஆகியவை அச்சிடப்பெற்று அவற்றின் பிரதிகள் பேரவை உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பெற வேண்டும். குழுவின் அறிக்கை, மாற்றுக் கருத்துக்கள் (இருப்பின்), குழுவினால் பரிந்துரைக்கப் பெற்றபடியான சட்ட முன்வடிவு ஆகியவை அரசிதழில் வெளியிடப்பெற வேண்டும்.

பேரவைக் கூட்டம் நடைபெறாதபோது குழுவின் அறிக்கையை அச்சிட்டு வெளியிடுதலும் சுற்றறிக்கையாக அனுப்புதலும்.

158. பேரவைக் கூட்டம் நடைபெறாதபோது, பேரவைத் தலைவரிடம் வைக்கப்பெறும் கோரிக்கை ஒன்றின் மீது, குழுவின் அறிக்கை ஒன்று பேரவையில் அளிக்கப் பெறாவிட்டாலும் அதை அச்சிட்டு வெளியிடவும் சுற்று அறிக்கையாக அனுப்பவும் அவர் ஆணையிடலாம். அவ்வாறு ஆணையிடப்பெறின், அவ்வறிக்கை அடுத்து நடக்கும் பேரவைக் கூட்டத்திலோ அல்லது அதன் பிறகோ பேரவைக்கு அளிக்கப் பெற வேண்டும்.

பேரவைச் செயலாளர் ஒவ்வொரு குழுவிற்கும் செயலாளராக இருப்பார்.

159. பேரவைச் செயலாளர், இவ்விதிகளின் கீழ் அமைக்கப்பெறும் ஒவ்வொரு குழுவிற்கும் செயலாளராவார். அவற்றின் அலுவல் தொடர்பான கடிதம், போக்குவரத்துக்கள் அனைத்தும் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அல்லது அந்நோக்கத்திற்காக பிற அலுவலர் எவரையேனும் நியமிக்கலாம்.

குழுத் தலைவருக்கு பேரவைத் தலைவரின் கட்டளைகள்.

160. (1) பேரவைத் தலைவர் அவ்வப்பொழுது தேவைக்கேற்ப குழு சரிவர இயங்குவதற்கான அமைப்பைப் பற்றியும் அதன் நடைமுறைகளைப் பற்றியும் அக்குழுத் தலைவருக்கு ஆணையிடலாம்.

(2) குழுவின் நடைமுறையிலோ அல்லது பிற பொருள் பற்றியோ குழுவின் தலைவருக்கு ஏதேனும் சந்தேகம் ஏற்படின் அவர் பொருத்தம் எனக் கருதினால் அதனைப் பேரவைத் தலைவரின் ஆய்விற்கு அனுப்பலாம். இதில் பேரவைத் தலைவரின் முடிவே இறுதியானதாகும்.

அறிக்கை அளிக்கப் பெற்ற பின் நடைமுறை.

161. (1) ஆய்வுக் குழு தனது அறிக்கையை அளித்த பின்பு அச்சட்ட முன்வடிவிற்குப் பொறுப்புடைய உறுப்பினர்—

(i) சட்ட முன்வடிவில் ஆய்வுக் குழு யாதொரு திருத்தமும் செய்யாதிருப்பின், அறிமுகப்படுத்தப்பெற்ற வடிவில் உள்ள

சட்ட முன்வடிவை அல்லது சட்ட முன்வடிவில் ஆய்வுக் குழு திருத்தங்கள் ஏதேனும் செய்திருப்பின், அத்திருத்தங்களுடன் கூடிய சட்ட முன்வடிவை பேரவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று மொழியலாம்;

எனினும், ஆய்வுக் குழுவின் அறிக்கையின் பிரதி ஒன்றும் சட்ட முன்வடிவு திருத்தப் பெற்றிருந்தால், அச்சட்ட முன்வடிவின் பிரதி ஒன்றும், உறுப்பினர்களுக்கு ஐந்து நாட்களுக்கு முன்னதாகவே கிடைக்கச் செய்திராவிடின், அச்சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு, எந்த உறுப்பினரும் எதிர்ப்பைத் தெரிவிக்கலாம். அச்சட்டமுன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பேரவைத் தலைவர் அனுமதித்தால் அன்றி, அந்த எதிர்ப்பு ஏற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெறும்.

(ii) ஆய்வுக் குழுவினால் அளிக்கப்பெற்ற ஒரு சட்ட முன்வடிவு-

(அ) முழுமையாகவோ; அல்லது

(ஆ) குறிப்பிட்ட பிரிவுகள் அல்லது திருத்தங்களைப் பொறுத்த மட்டிலோ; அல்லது

(இ) வேறு குறிப்பிட்ட வகையில் மாற்றங்கள் செய்வதற்காகவோ, வேண்டிய குறிப்புகளுடன், அந்த ஆய்வுக் குழுவிற்கு மறு ஆய்வு செய்வதற்குத் திருப்பியனுப்பப் பெறலாம்.

(2) சட்ட முன்வடிவிற்குப் பொறுப்புடைய உறுப்பினர், ஆய்வுக் குழு பரிந்துரைத்த வகையில் சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டுமென்று மொழிந்தால், அச்சட்ட முன்வடிவை மறு ஆய்வு செய்வதற்காக ஆய்வுக் குழுவிற்குத் திருப்பி அனுப்ப வேண்டும் என்ற திருத்தத்தை எந்த உறுப்பினரும் மொழியலாம்.

ஆய்வுக் குழுவின் அறிக்கையின் மீதான விவாத வரம்பு.

162. ஆய்வுக் குழு அளித்துள்ள வடிவில் சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் என்ற தீர்மானத்தின் மீதான விவாதம் குழுவின் அறிக்கையையும், அதில் குறிப்பிடப் பெற்றுள்ள கருத்துக்களையும் அல்லது சட்ட முன்வடிவின் அடிப்படைக் கருத்துக்கு இணக்கமான மாற்று யோசனைகளையும் பற்றியதாக மட்டுமே இருத்தல் வேண்டும்.



சட்டமுன் வடிவை திரும்பப் பெறல்.

163. ஒரு சட்ட முன்வடிவுக்குப் பொறுப்புடைய உறுப்பினர் அச்சட்ட முன்வடிவு ஆய்வில் எக்கட்டத்தை அடைந்திருப்பினும், அச்சட்ட முன்வடிவைத் திரும்ப பெறுவதற்கு பேரவையின் அனுமதியைக் கோரலாம். அவ்வாறு அனுமதி அளிக்கப் பெற்றால், அச்சட்ட முன்வடிவுபற்றி மேற்கொண்டு எந்தத் தீர்மானமும் கொண்டு வரலாகாது.

எனினும், ஒரு சட்ட முன்வடிவுக்குப் பொறுப்புடைய உறுப்பினர், அச்சட்ட முன்வடிவைத் திரும்பப் பெற்றுக் கொள்வதற்கான காரணங்களைக் கூறும் சுருக்கமான குறிப்பு ஒன்றுடன், திரும்பப் பெறுவதற்கான முன்னறிவிப்பை எழுத்து மூலமாகக் கொடுக்க வேண்டும். அஃது உறுப்பினர்களுக்கும் சுற்றுக்கு அனுப்பப்பெற வேண்டும்.

மேலும், ஒரு சட்ட முன்வடிவு பேரவையின் விவாதத்தில் இருக்கும்பொழுது அதற்குப் பொறுப்புடைய உறுப்பினர் அச்சட்ட முன்வடிவை திரும்பப் பெறக் கோரினால், அதற்கான காரணங்களை அவர் பேரவைக்குத் தெரிவிக்க வேண்டும்.

முன்னறிவிப்பைத் தவிர்க்க பேரவைத் தலைவரின் அதிகாரங்கள்.

164. முன்னறிவிப்பு, முன்னறிவிப்புக்கான காலம் சட்டமியற்றலில் இரு கட்டத்திற்கு இடைப்பட்ட காலம் ஆகியவை பற்றி இவ்வத்தியாயத்திலுள்ள விதிகளைப் பேரவைத் தலைவர் தம் உசிதப்படி நீக்கி வைக்கலாம். ஒரு சட்ட முன்வடிவு பற்றிய எந்தத் தீர்மானத்தையும் அல்லது எந்தத் திருத்தத்தையும் முன்னறிவிப்பு இன்றி மொழிவதற்கோ அல்லது அவர் தாம் பொருத்தமெனக் கருதுகிறபடி குறைந்த இடைக் காலத்தில் மொழிவதற்கோ அனுமதிக்கலாம்.

# அத்தியாயம் 16

## ஆளுநரின் இடைக்கால அவசரச் சட்டங்கள்

**இடைக்கால அவசரச் சட்டங்களின் பிரதிகளை அவை முன் வைத்தல்.**

165. அரசமைப்புச் சட்டத்தின் 213-வது பிரிவு (1)-வது உட்பிரிவிற்கு இணங்க ஆளுநரால் ஓர் இடைக்கால அவசரச் சட்டம் பிறப்பிக்கப் பெற்ற பின்னர், கூடிய விரைவில் அதன் அச்சுப் பிரதிகள் பேரவை முன் வைக்கப்பெற வேண்டும்.

**இடைக்கால அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானம்.**

166. பேரவை மீண்டும் கூடிய ஆறு வார காலத்திற்குள், உறுப்பினர் எவரேனும் செயலாளருக்கு மூன்று நாட்கள் முன்னறிவிப்புக் கொடுத்த பிறகு, இடைக்கால அவசரச் சட்டம் நிராகரிக்கப் பெற வேண்டும் என்ற தீர்மானத்தை மொழியலாம்.

**இடைக்கால அவசரச் சட்டத்தை பிறப்பிப்பதற்கான காரணங்களை விளக்கும் அறிக்கை.**

167. பேரவையின் முன் இருக்கும் ஒரு சட்ட முன்வடிவின் கருத்துக்களை முழுமையாகவோ அன்றி அதன் ஒரு பகுதியையோ உள்ளடக்கி அன்றி மாறுதல்களுடன் ஒரு இடைக்கால அவசரச் சட்டம் பிறப்பிக்கப் பெற்றால், அதன் பின் நடக்கும் பேரவைக் கூட்டத்தொடரின் ஆரம்பத்தில் இவ்வாறு உடனடி இடைக்கால அவசரச் சட்டத்தின் மூலம் சட்டமியற்ற வேண்டியிருந்ததின் சந்தர்ப்பங்களை விளக்கி ஓர் அறிக்கையைப் பேரவை முன் வைக்க வேண்டும்.

**இடைக்கால அவசரச் சட்டத்திற்குப் பதிலாக சட்டமுன்வடிவைக் கொண்டு வருதல்.**

168. ஓர் இடைக்கால அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அதில் மாறுதல்களுடனோ அன்றி மாறுதல்கள் இல்லாமலோ ஒரு சட்ட முன்வடிவு பேரவையில் அறிமுகம் செய்யப்பெறின் அச்சட்ட முன்வடிவுடன், இவ்வாறு உடனடி இடைக்கால அவசரச் சட்டத்தின் மூலம் சட்டமியற்ற வேண்டியிருந்ததன் சந்தர்ப்பங்களை விளக்கும் அறிக்கை ஒன்றையும் பேரவை முன் வைக்க வேண்டும்.



# அத்தியாயம் 17

## அரசமைப்புச் சட்டத் திருத்தங்களை உறுதியாக்குதல்

**அரசமைப்புச் சட்டத் திருத்தங்களை உறுதியாக்குதல்.**

169. (1) அரசமைப்புச் சட்டத் திருத்தத்தை ஏற்று உறுதி செய்ய வேண்டும் என்ற செய்தி பாராளுமன்ற அவை ஒன்றிலிருந்து வருமாயின், கூடிய விரைவில் அச்சட்ட முன்வடிவுடன் அச்செய்தியின் பிரதி ஒன்றும் பேரவை முன் வைக்கப் பெற வேண்டும்.

(2) அச்சட்ட முன்வடிவுடன், அச்செய்தியின் ஒரு பிரதியை மாநில அரசுக்குச் செயலாளர் கூடிய விரைவில் அனுப்ப வேண்டும்.

**அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின் மீது விவாதம்.**

170. (1) இவ்விதிகளின் 169-வது விதியின்படி, அச்செய்தி பேரவையின் மேசை மீது வைக்கப்பெற்ற பின், உறுப்பினர் எவரேனும் மூன்று நாட்கள் முன்னறிவிப்புக் கொடுத்த பிறகு அச்சட்ட முன்வடிவால் அரசமைப்புச் சட்டத்தில் செய்யக் கருதப் பெற்றுள்ள திருத்தத்தை பேரவை ஏற்று உறுதி செய்கிறது என்ற தனித் தீர்மானத்தை மொழியலாம்.

(2) பேரவை முன்னவருடன் கலந்தாலோசித்து அத்தனித் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய நாள் ஒன்றைப் பேரவைத் தலைவர் குறிப்பிட வேண்டும்.

(3) அத்தகைய தனித் தீர்மானத்திற்குத் திருத்தம் எதுவும் கொண்டு வரப் பெறலாகாது.

**பாராளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டிய செய்தி.**

171. (1) அத்தீர்மானம் பேரவையினால் நிறைவேற்றப் பெற்றால், 169-வது விதியில் குறிப்பிடப்பெற்ற செய்தியை அனுப்பிய பாராளுமன்ற அவைக்கு, திருத்தத்தைப் பேரவை ஏற்று உறுதி செய்கிறது என்ற செய்தி அனுப்பப் பெற வேண்டும்.

(2) அத்தனித் தீர்மானம் பேரவையினால் நிராகரிக்கப் பெற்றால், திருத்தத்தை பேரவை ஏற்று உறுதி செய்யவில்லை என்ற செய்தி மேற்கூறியவாறு அனுப்பப் பெற வேண்டும்.

(3) பாராளுமன்றத்தின் ஓர் அவையில் இருந்து வந்த செய்தி பேரவை முன் வைக்கப்பெற்ற கூட்டத் தொடரில் மேற்கூறியபடி தீர்மானம் எதுவும் கொண்டுவரப் பெறவில்லையென்றால், அச்செய்தியை அனுப்பிய பாராளுமன்ற அவைக்கு அவ்வாறு செயலாளர் தெரிவிக்க வேண்டும்.

# அத்தியாயம் 18

## தனித் தீர்மானங்கள்

தனித் தீர்மானங் களுக்கான முன்னறி விப்புகள்.

172. தனித் தீர்மானம் ஒன்றை மொழிய விரும்பும் ஓர் உறுப்பினர் அத்தனித் தீர்மானத்தை மொழிய இருக்கும் தமது எண்ணத்தைக் குறித்துத் துல்லியமாக 15 நாட்களுக்கு முன்னதாகவே முன்னறிவிப்புக் கொடுத்தல் வேண்டும். அந்த முன்னறிவிப்புடன் தாம் மொழிய இருக்கும் தனித் தீர்மானத்தின் வாசகத்தையும் அளித்தல் வேண்டும்.

எனினும், பேரவைத் தலைவர் ஒரு தனித் தீர்மானத்தை அதற்குத் தொடர்புடைய துறை அமைச்சரின் இசைவைப்பெற்று 15 நாட்களுக்குக் குறைந்த முன்னறிவிப்புடனும், 35-வது விதியின்படி குலுக்குச் சீட்டு முறை இன்றியும் அலுவல் பட்டியலில் சேர்க்க அனுமதிக்கலாம்; அப்பட்டியலில் அதனுடைய முன் வரிசையையும் நிர்ணயிக்கலாம்.

தனித் தீர்மானத் திற்கான வரை யறைகள்.

173. அரசமைப்புச் சட்டத்திலும், இவ்விதிகளிலும் கண்டுள்ள வரையறைகளுக்கு உட்பட்டு, இம்மாநில அரசின் அதிகார வரம்பிலுள்ள பொது நலனைக் குறித்த ஒரு பொருள் பற்றி உறுப்பினர் எவரேனும் தனித் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவரலாம்.

எனினும், கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்படாத தனித் தீர்மானம் எதுவும் அனுமதிக்கப் பெறலாகாது, அவையாவன:—

(அ) தெளிவான, திட்டவட்டமான ஒரு குறிப்பிட்ட பிரச்சினையை எழுப்புவதாக மட்டும் அது இருக்க வேண்டும்.

(ஆ) அதில் வாதங்கள், யூகங்கள், கேலிச் சொற்றொடர்கள் அல்லது அவதூறான சொற்கள் அடங்கியிருத்தல் கூடாது. ஒருவரது பதவி அல்லது பொது வாழ்வைப் பற்றியல்லாது அவரது தனிப்பட்ட ஒழுக்கம் அல்லது நடத்தையைப் பற்றியதாக இருத்தல் கூடாது.

(இ) நீதிமன்றத்தின் விசாரணையில் இருக்கும் ஒரு வழக்கைப் பற்றியதாக அது இருத்தல் கூடாது; மேலும்



(ஈ) உரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்புவதாக அது இருத்தல் கூடாது.

(உ) அதே கூட்டத்தொடரில் விவாதிக்கப்பெற்ற பொருளைக் குறித்து மீண்டும் விவாதம் எழுப்புவதாக அமையக்கூடாது.

தீர்மானங் களின் வடிவம்.

174. தனித் தீர்மானம் ஒன்று அரசுக்குச் செய்யப்பெறும் பரிந்துரை வடிவிலோ, பேரவையின் கருத்தை அறிவிக்கும் முறையிலோ, எக்காரணத்திற்கேனும் பேரவையின் குழு ஒன்றை நியமிப்பதற்குக் கொண்டுவரப்பெறும் தீர்மான வடிவிலோ அல்லது அத்தனித் தீர்மானத்தின் பொருளுக்கேற்ப வேறு எந்த வடிவிலோ இருக்கலாம்.

தனித் தீர்மானங்கள் அனுமதிப் பதைப் பேரவைத் தலைவர் முடிவு செய்தல்.

175. ஒரு தனித் தீர்மானம் அனுமதிக்கத் தக்கதா என்பதைப் பேரவைத் தலைவர் முடிவு செய்ய வேண்டும். ஒரு தனித் தீர்மானம் அல்லது அதன் ஒரு பகுதி, இவ்விதிகளுக்கு முரணானது என்று பேரவைத் தலைவர் கருதினால், அவரது உசிதப்படி அதைத் திருத்த சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கு ஒரு வாய்ப்பு அளிக்கலாம். அல்லது அத்தீர்மானத்திற்கான அனுமதியை மறுக்கலாம்.

தனித் தீர் மானத்தைக் கொண்டு வருதலும் திரும்பப் பெறுதலும்.

176. (1) ஒரு தனித் தீர்மானம் எவ்வுறுப்பினர் பெயரில் அலுவல் பட்டியலில் இடம் பெறுகிறதோ, அவ்வுறுப்பினர் அழைக்கப்பெறும்போது—

(அ) அவர் அத்தனித் தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறு திரும்பப் பெறும்போது, அதை தாம் திரும்பப் பெறுவதாக மட்டுமே கூற வேண்டும்; அல்லது

(ஆ) அத்தனித் தீர்மானத்தை மொழியலாம்.

(2) அழைக்கப்பெறும்போது அவ்வுறுப்பினர் பேரவையில் இல்லாதிருப்பின் அவர் பெயரில் உள்ள அத்தனித் தீர்மானம் திரும்பப் பெற்றதாகக் கருதப்பெறும்.

(3) மேற்கூறிய உள் விதி (1) (அ)-இன்படி, திரும்பப் பெறப்பெற்ற அல்லது உள்விதி (2)-இன்படி, திரும்பப்பெற்றதாகக் கருதப்பெற்ற தனித் தீர்மானம் ஒன்றை மற்ற உறுப்பினர் எவரேனும் மொழிவதற்கு பேரவை அனுமதிக்கலாம்.

திருத்தங்கள்.

177. தனித் தீர்மானம் ஒன்று மொழியப்பெற்ற பிறகு, அதற்கான திருத்தம் ஒன்றினை, தனித் தீர்மானங்களை அனுமதிப்பதற்கான வரையறைகள் அனைத்திற்கும் உட்பட்டு எந்த உறுப்பினரும் மொழியலாம்.

திருத்தங்களுக்கான முன்னறிவிப்பு

178. (1) அத்தகைய திருத்தத்தின் பிரதி ஒன்று தனித் தீர்மானத்தின் விவாதத்திற்கு என குறிப்பிடப் பெற்றுள்ள நாளுக்கு துல்லியமாக ஒரு நாள் முன்னரே, செயலாளருக்கு அனுப்பப்பெறாது இருந்தால், அத்திருத்தம் மொழியப்பெறுவதை உறுப்பினர் எவரேனும் எதிர்க்கலாம். பேரவைத் தலைவர் இந்த உள்விதியை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கான தமது அதிகாரத்தைப் பயன்படுத்துவதன் மூலம் திருத்தம் மொழியப் பெறுவதற்கு அனுமதித்தால் அன்றி, அத்தகைய எதிர்ப்பு ஒப்புக்கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெறும்.

(2) போதிய அவகாசம் இருப்பின் ஒவ்வொரு திருத்தத்தையும் அச்சிட்டோ அல்லது வேறு வகையில் பிரதிகள் எடுத்தோ உறுப்பினர்களுக்குக் கிடைக்கச் செயலாளர் வகை செய்ய வேண்டும்.

தனித் தீர்மானங்களைப் பிரித்தல்.

179. பல கூறுகளை உள்ளடக்கிய தனித் தீர்மானம் ஏதேனும் விவாதிக்கப் பெற்றிருந்தால், பேரவைத் தலைவர் அதனை தாம் பொருத்தம் எனக் கருதுகிறபடி தனித் தனிக் கூறுகளாகப் பிரித்து ஒவ்வொன்றையுமோ அன்றி ஒன்றை மட்டும் தனியாக்கியோ வாக்கெடுப்புக்கு விடலாம்.

பிரதியை அரசுக்கு அனுப்புதல்.

180. பேரவையில் நிறைவேற்றப்பெற்ற தனித் தீர்மானம் ஒவ்வொன்றின் பிரதியும் செயலாளரால் அரசுக்கு அனுப்பி வைக்கப் பெற வேண்டும்.



## அத்தியாயம் 19
## நிதி அலுவல்

வரவு-செலவுத் திட்டம் அளித்தல்.

181. (1) வருடாந்திர நிதி அறிக்கை ஒவ்வொரு நிதியாண்டிலும் மதிப்பிடுகிற அல்லது எதிர்பார்க்கிற வரவு-செலவுகளைக் குறித்த அறிக்கை (வரவு-செலவுத் திட்டம் என இது இனி குறிக்கப்பெறும்) ஆளுநரால் குறிப்பிடப்பெறும் நாளன்று வன்நகல் வடிவில் அல்லது சட்டமன்றப் பேரவைக் கணினி வலையமைப்பு வாயிலாக மின்னணு பதிவுரு வடிவில் பேரவையில் அளிக்கப்பெற வேண்டும்.

(2) வரவு-செலவுத் திட்டம் பேரவையில் அளிக்கப்பெறும் நாள் அன்று அதன்மீது பேரவையில் விவாதம் எதுவும் இருத்தல் ஆகாது.

(3) முன்னர் குறிப்பிடப்பட்ட எவையும், பேரவையில் வரவு-செலவுத் திட்டத்தை, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிகளாக அளிக்கப்பெறுவதை தடுப்பதாகக் கருதப்பட மாட்டாது.

182. (1) ஒவ்வொரு துறைக்கும் கோரப்பெறும் தொகை சாதாரணமாக ஒரு தனி மானியக் கோரிக்கை மூலமாகக் கேட்கப் பெற வேண்டும். எனினும் நிதி அமைச்சர் ஒரு மானியக் கோரிக்கையில் இரண்டு அல்லது இரண்டிற்கும் மேற்பட்ட துறைகளுக்கான மானியத் தொகையைச் சேர்க்கலாம் அல்லது செலவினங்களைக் குறிப்பிட்ட துறைகளுக்கென எளிதாக வகைப்படுத்த முடியாதபோது அவற்றை ஒரு மானியக் கோரிக்கையாகக் கோரலாம்.

(2) ஒவ்வொரு மானியக் கோரிக்கையும் முதலாவதாக அம்மானியத்தின் கீழ் கோரப்பெறும் மொத்தத் தொகைக்கான அறிக்கையும், அடுத்து ஒவ்வொரு மானியத்தின் கீழும் துணைத் தலைப்புகளில் எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப் பெற்றுள்ளது என்ற விவரங்களையும் கொண்டதாக இருத்தல் வேண்டும். மானியக் கோரிக்கையின் விவரங்கள் வன்நகல் வடிவில் அல்லது சட்டமன்றப் பேரவைக் கணினி வலையமைப்பு வாயிலாக மின்னணு பதிவுரு வடிவில் அளிக்கப்பெறும்.

வரவு-செலவுத் திட்டத்தின் மீது விவாதம்.

183. (1) பேரவையால் வரவு-செலவுத் திட்டம் இரண்டு கட்டங்களாக விவாதிக்கப் பெறும். அவையாவன:—

(i) பொது விவாதம் மற்றும்

(ii) மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு.

(2) பேரவைத் தலைவர் அலுவல் ஆய்வுக் குழுவை கலந்தாலோசித்து, இந்த ஒவ்வொரு கட்டத்திற்கும் போதிய நாட்களை குறிப்பிட்டு ஒதுக்க வேண்டும்.

எனினும், வரவு-செலவுத் திட்டத்தின் மீதான பொது விவாதத்திற்கென பத்து நாட்களுக்கு மேற்படாமலும் மானியக் கோரிக்கைகள் மீதான வாக்கெடுப்புக்கு முப்பது நாட்களுக்கு மேற்படாமலும் ஒதுக்கப்பெற வேண்டும்.

விவாதத்திற்கு நேரம் ஒதுக்குதல்.

184. (1) வரவு-செலவுத் திட்டத்தின் பொது விவாதத்திற்கென 183(2)-வது விதியின்கீழ் ஒதுக்கப்பெற்ற நாட்களில் வரவு-செலவுத் திட்டம் பற்றி முழுமையாகவோ அல்லது அதில் அடங்கியுள்ள ஏதேனும் கொள்கை சம்பந்தமாகவோ விவாதிக்க பேரவைக்கு உரிமை உண்டு. ஆனால், அக்கட்டத்தில் தீர்மானம் எதுவும் மொழியப் பெறுதல் கூடாது; பேரவையின் வாக்கெடுப்பிற்கு வரவு-செலவுத் திட்டத்தை வைக்கக் கூடாது.

(2) நிதி அமைச்சருக்கு, விவாதத்தின் இறுதியில், பொதுவாகப் பதிலளிக்கும் உரிமை உண்டு.

(3) பேரவைத் தலைவர் பொருத்தமெனக் கருதினால் விவாதத்தின்போது, உரைகளுக்கு காலவரம்பை நிர்ணயிக்கலாம்.

மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

185. (1) பேரவைத் தலைவர், அலுவல் ஆய்வுக் குழுவை கலந்தாலோசித்து, மானியக் கோரிக்கை ஒவ்வொன்றையும் விவாதிப்பதற்கு நேரம் ஒதுக்கி, அக்கோரிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பெற வேண்டிய வரிசை முறையையும் முடிவு செய்ய வேண்டும்.

(2) மானியக் கோரிக்கைகளை விவாதிப்பதற்கு விதி 183 (2)-ன்படி ஒதுக்கப்பெற்ற நாட்களில் பேரவைத் தலைவரின் இசைவு இன்றி பிற்பகல் 2.00 மணிக்கு முன் வேறு எந்த அலுவலும் எடுத்துக்கொள்ளப் பெறக்கூடாது.

எனினும், விதி 32-ன்படி ஒதுக்கப்பெற்ற நேரத்தில் வினாக்கள் கேட்பதையும், அவற்றிற்கு விடையளிப்பதையும் இவ்விதி எதுவும் தடை செய்வதாகக் கருதக் கூடாது.

(3) மானியக் கோரிக்கை ஒவ்வொன்றிற்கும் உள்விதி (1)இன்கீழ் விவாதிப்பதற்காக ஒதுக்கப்பெற்ற கால முடிவில் அந்தக் கோரிக்கையை முடிவுறச் செய்ய அவசியமான பிரச்சினை ஒவ்வொன்றையும் பேரவைத் தலைவர் வாக்கெடுப்பிற்கு



விடவேண்டும். மானியக் கோரிக்கைகளின் வாக்கெடுப்பிற்காக ஒதுக்கப்பெற்ற நாட்களில் கடைசி நாள் அன்று, பிற்பகல் 2.00 மணிக்கு ஒரு மானியத்தைக் குறைக்கக் கோரும் தீர்மானம் ஏதேனும் அப்போது, விவாதத்தில் இருப்பின், அதையும் சேர்த்து, மானியக் கோரிக்கைகள் சம்பந்தமாக நிலுவையில் இருக்கும் பொருள்கள் அனைத்தையும் முடிவுறச் செய்ய, அவசியமான பிரச்சினை ஒவ்வொன்றையும் பேரவைத் தலைவர் உடனடியாக, வாக்கெடுப்பிற்கு விட வேண்டும்.

வரவு-செலவுத் திட்டத்தின் மீது தீர்மானங்கள்.

186. (1) ஒரு மானியக் கோரிக்கையை மொழியும் அமைச்சர் அக்கோரிக்கையைப் பற்றி கொள்கை விளக்க அறிக்கை ஒன்றினை அளிக்கலாம்.

(2) அப்போது அம்மானியக் கோரிக்கையில் ஒரு குறிப்பிட்ட தொகை குறைக்கப் பெற வேண்டும் என்ற தீர்மானத்தை உறுப்பினர் எவரேனும் கொடுக்கலாம். ஆயினும் அம்மானியக் கோரிக்கையை அதிகப்படுத்தும் அல்லது அதன் குறிக்கோளை மாற்றும் விளைவினை ஏற்படுத்தும் தீர்மானம் கொடுக்கப் பெறுதல் கூடாது.

எனினும், ஒவ்வொரு மானியக் கோரிக்கையின் மீதும் உறுப்பினர் ஒருவர் பத்து வெட்டுத் தீர்மானங்களுக்கு மேல் அறிவிப்பு கொடுக்கலாகாது. அவ்வாறு கொடுக்கப்படும் வெட்டுத் தீர்மான அறிவிப்புகள் பத்திற்கு மேற்பட்டிருப்பின் முதலில் கிடைக்கப்பெறும் பத்து அறிவிப்புகள் மட்டுமே எடுத்துக் கொள்ளப்பெறும். மிகுதியாக உள்ள அனைத்தும் நிராகரிக்கப்பட்டதாகக் கருதப்படும்.

(3) மானியக் கோரிக்கை ஒவ்வொன்றுக்கோ அல்லது மானியக் கோரிக்கைகளின் தொகுப்பிற்கோ, பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளின் பிற்பகல் 3 மணிக்குள், உள்விதி (2) இன்படி கொடுக்கப்பெறும் வெட்டுத் தீர்மானங்களுக்கான முன்னறிவிப்புகள் பேரவையின் அலுவலகத்தில் சேர்க்கப் பெற வேண்டும்.

(4) ஒரே மானியக் கோரிக்கைக்குப் பல வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப் பெற்றிருந்தால், பேரவைத் தலைவர் தீர்மானிக்கும் முறையில் அவை வரிசைப் படுத்தப்பெற்று, விவாதிக்கப் பெற வேண்டும்.

வெட்டுத் தீர்மானங் களுக்கான வரையறைகள்.

*(5)* வெட்டுத் தீர்மானம் அனுமதிக்கப் பெறுவதற்கு அது கீழ்க்கண்ட வரையறைகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும், அவையாவன:—

(i) ஒரு கோரிக்கையைப் பொறுத்ததாக மட்டுமே இருத்தல் வேண்டும்;

(ii) தெளிவாக இருத்தல் வேண்டும்; மேலும் வாதங்கள், யூகங்கள், கேலிச் சொற்றொடர்கள், குற்றச்சாட்டுகள், அடைமொழிகள் அல்லது அவதூறான சொற்கள் அடங்கி இருத்தல் கூடாது;

(iii) தெள்ளத் தெளிவான வார்த்தைகளில் ஒரு குறிப்பிட்ட பொருள் பற்றி மட்டும் இருத்தல் வேண்டும்;

(iv) நிலையான தீர்மானம் ஒன்றின் வாயிலாக மட்டுமே விவாதிக்கப் பெறவேண்டிய ஒருவரின் நடத்தை அல்லது ஒழுக்கம் பற்றிக் குறிப்பிடுதல் கூடாது;

(v) நடைமுறையில் உள்ள சட்டங்களைத் திருத்தும் அல்லது அகற்றும் யோசனையைச் சொல்லுதல் கூடாது;

(vi) அரசின் நேரடிப் பொறுப்பில் இல்லாத ஒரு பொருள்பற்றிக் குறிப்பிடுதல் கூடாது.

(vii) தமிழ்நாடு வருவாய் தொகுப்பு நிதியில் (Consolidated Fund of Tamil Nadu) சாட்டப் பெற்ற செலவினங்களைப் பற்றியதாக இருத்தல் கூடாது;

(viii) இந்தியாவின் எப்பகுதியிலும் உள்ள நீதிமன்றத்தில் விசாரணையில் இருக்கிற எந்தப் பொருளைப் பற்றியதாகவும் இருத்தல் கூடாது;

(ix) உரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்பலாகாது;

(x) அதேகூட்டத்தொடரில் விவாதித்து முடிவு எடுக்கப்பெற்ற பொருள்மீது மீண்டும் விவாதம் எழுப்புவதாக இருத்தல் கூடாது;

(xi) அதே கூட்டத்தொடரில் விவாதிப்பதற்கென திட்டமிடப்பட்டிருக்கிற ஒரு பொருளைப்பற்றி முன்கூட்டியே விவாதம் எழுப்புவதாக இருத்தல் கூடாது;

(xii) சட்டப்படி அமைக்கப்பெற்ற விசாரணைக் குழு, நீதிமன்றமாக அல்லது பகுதி நீதிமன்றமாக இயங்கச் சட்டப்படி அமைக்கப்பெற்ற ஆணைக்குழு அல்லது ஒரு பொருள் குறித்து



ஆய்வதற்காக அல்லது புலனாய்வதற்காக அமைக்கப்பெற்ற ஆணையம் அல்லது விசாரணை மன்றம் ஆகியவற்றின் ஆய்வில் இருக்கும் பொருள் குறித்து விவாதம் எழுப்புதல் கூடாது;

எனினும், அவற்றின் ஆய்வுக்கு எவ்வித இடையூறும் ஏற்படுத்தாது என்று பேரவைத் தலைவர் கருதினால் அவைகள் கடைப்பிடிக்கும் முறை குறித்தோ, எப்பொருளைப்பற்றி ஆராய அவை அமைக்கப்பெற்றன என்பதைக் குறித்தோ விசாரணை எந்நிலையில் உள்ளது என்பதைக் குறித்தோ, எழுப்ப பேரவைத் தலைவர் தம் உசிதப்படி அனுமதிக்கலாம்;

(xiii) பயனற்ற காரியங்களைப் பற்றியதாக இருத்தல் கூடாது.

கூடுதல் நிதிக்கான மானியக் கோரிக்கைகள்.

*187.* மானியக் கோரிக்கைகளை மொழிவதற்காக பேரவைத் தலைவரால் ஒதுக்கப்பெற்ற நாட்களில், கடைசி நாளுக்குள் குறிப்பிடப்பெற்ற ஒரு நாளில் கூடுதல் நிதிக்கான மானியக் கோரிக்கைகள் மொழியப் பெறலாம்;

எனினும்,

(i) அந் நிதி ஆளுநரின் கருத்துப்படி அவசரத்தன்மை உடைய பணிகளுக்குத் தேவைப்படுவதாக இருத்தல் வேண்டும்.

(ii) அவ்வாண்டின் மூல மதிப்பீடுகளில் சேர்க்கப்பெறாத புதிய பணிகளுக்கு வேண்டுவதாக இருத்தல் வேண்டும்.

இத்தகைய கோரிக்கைகள், மூல மானியக் கோரிக்கைகளைப் போன்றே வகைப்படுத்தப் பெற்றிருத்தல் வேண்டும். மேலும், துணைத் தலைப்புகளின் கீழ் விவரங்கள் காட்டப் பெற்று, ஒவ்வொரு மானியத்தின் கீழும் விரிவான தலைப்புகளின் கீழ் நிதி ஒதுக்கம் பெற்றிருக்கும் வகையில் அமைக்கப் பெற்றிருத்தல் வேண்டும்.

நிதி ஒதுக்கச் சட்டமுன் வடிவுகள்.

*188. (1)* அரசமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு பற்றிய நடைமுறைகள் பேரவைத் தலைவர் அவசியம் எனக் கருதும் மாறுதல்களுடன், பொதுவாக ஏனைய சட்ட முன்வடிவுகளைப் போன்றதாகவே இருத்தல் வேண்டும்.

*(2)* நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவின் மீதான விவாதம் அச்சட்ட முன்வடிவில் குறிக்கப்பெற்ற மானியங்களில் அடங்கியுள்ள பொது முக்கியமான அல்லது நிர்வாகக் கொள்கைகள் பற்றியதாகவும் அவற்றுக்குப் பொருத்தமான

மானியக் கோரிக்கைகள் பேரவையின் ஆய்வில் இருக்கும் பொழுது எழுப்பப் பெறாததாகவும் இருத்தல் வேண்டும்.

துணை மானியக் கோரிக்கைகள் அல்லது அதிகப்படியான மானியக் கோரிக்கைகள்.

189. (1) ஒரு நிதியாண்டிற்குள், எந்நேரத்திலும் அரசமைப்புச் சட்டத்தின் 205-வது பிரிவின் கீழ் துணை அல்லது கூடுதல் செலவுக்கான அறிக்கை ஒன்றினை வன்நகல் வடிவில் அல்லது சட்டமன்றப் பேரவைக் கணினி வலையமைப்பு வாயிலாக மின்னணு பதிவுரு வடிவில் அளிப்பதற்காக, ஆளுநர் நாள் ஒன்றினை நிர்ணயிக்கலாம்.

(2) அத்தகைய துணை மானியக் கோரிக்கை அல்லது கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கையின் அறிக்கை பேரவைக்கு அளிக்கப் பெற்ற பின், அதன் மீதான விவாதத்திற்கும், வாக்கெடுப்பிற்கும் பேரவைத் தலைவர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நாட்களை ஒதுக்க வேண்டும்.

(3) (2)-வது உள் விதியின்படி, ஒதுக்கப்பெற்ற நாளில் அல்லது நாட்களில் கடைசி நாளில் பிற்பகல் 2-00 மணிக்கு, எல்லா விவாதங்களும் முடிந்தாக வேண்டும். பேரவைத் தலைவர், உடனடியாகத் துணை மானியக் கோரிக்கைகள் சம்பந்தமாக நிலுவையில் இருக்கும் எல்லா பொருள்களையும் முடிவுறச் செய்வதற்கு அவசியமான பிரச்சினை ஒவ்வொன்றையும் வாக்கெடுப்பிற்கு விட வேண்டும்.

துணை மானியக் கோரிக்கை அல்லது கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் குறித்த நடைமுறை.

190. துணை மானியக் கோரிக்கைகள் அல்லது கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகள், ஆகியவை மானியக் கோரிக்கைகளைப் போலவே நடத்தப்பெற வேண்டும்.

என்றாலும், துணை மானியக் கோரிக்கை ஒன்றின் அல்லது கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கை ஒன்றின் மீதான விவாதம், அதற்குள் அடங்கிய விவரத்திற்குள் மட்டும் இருத்தல் வேண்டும்.

மேலும், துணை மானியக் கோரிக்கை ஒன்றுக்கு அல்லது கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கை ஒன்றுக்கு அளிக்கப்பெறும் வெட்டுத் தீர்மானங்களுக்கான முன் அறிவிப்புகள் துணை அல்லது கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் பற்றிய அறிக்கை பேரவையில் அளிக்கப்பெற்ற நாளுக்கு மறுநாள் பிற்பகல் 3 மணிக்குள் கொடுக்கப்பெற வேண்டும்.



துணை மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவின் மீதான விவாதம்.

191. நடைமுறையில் இருக்கும் ஒரு பணிக்கான துணை மானியக் கோரிக்கை ஒன்றின் தொடர்பான ஒரு நிதி ஒதுக்க சட்டமுன்வடிவாயின் விவாதம் அதற்குள் அடங்கிய இனங்களைப் பற்றியதாக மட்டும் இருத்தல் வேண்டும். மேலும், விவாதத்தில் உள்ள ஒரு குறிப்பிட்ட இனத்தை விளக்குவதற்கு அல்லது எடுத்துக் காட்டுவதற்கு அவசியமாக இருந்தாலன்றி மூல மானியம் அல்லது அதனை ஒட்டிய கொள்கையைப் பற்றி விவாதம் எதையும் எழுப்புதல் கூடாது.

மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை.

192. அரசமைப்புச் சட்டத்தின் 205-வது பிரிவின்படி கோரப்பெறும் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளுக்கும் துணை மானியக் கோரிக்கை அல்லது கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகள் பற்றிய நடைமுறைகள் பேரவைத் தலைவர் அவசியமெனக் கருதுகிற மாற்றங்களுடன் பொருந்தும்.

கணக்கில் முன்பணம் அவசர முன்பணம், சிறப்புத் தொகைகள்.

193. (1) அரசமைப்பு சட்டத்தின் 206-வது பிரிவில் குறிப்பிட்டுள்ள கணக்கில் முன்பணம் கோரும் மானியத்திற்கும், அவசரச் செலவிற்கான முன்பணம் கோரும் மானியத்திற்கும், சிறப்புத் தொகைகள் கோரும் மானியத்திற்கும், வரவு-செலவுத் திட்டச் சம்பந்தப்பட்ட நடைமுறை விதிகள் பொதுவாகப் பொருந்தும்.

(2) கணக்கில் முன்பணம் கோரும் மானியத்திற்கு பொதுப்படையாக, மேற்சொன்னவற்றுக்கு முரண்பாடு இல்லாது குறிப்பாக, கீழ்க்கண்ட விதிகளும் பொருந்தும்:—

(i) கணக்கில் முன்பணம் கோரும் மானியத்திற்கான ஒரு தீர்மானம் தேவைப்படும் மொத்தத் தொகையை குறிப்பிடுதல் வேண்டும். அத்தொகைக்கான செலவு விவரங்களும் துறை ஒவ்வொன்றுக்கும் தேவைப்படும் தொகை எவ்வளவு என்பதும் அடங்கிய அட்டவணையை உடையதாய் இருத்தல் வேண்டும்.

(ii) பொதுத் தன்மையிலான விவாதம், ஒட்டுமொத்தமாக அத்தீர்மானத்தின் மீது நடைபெறலாம்.

(iii) மொத்தத் தொகையைக் குறைப்பதற்காகவோ அல்லது அதிலுள்ள இனங்களைக் குறைப்பதற்காகவோ அல்லது விடுவதற்காகவோ திருத்தங்கள் மொழியப்பெறலாம்.

# அத்தியாயம் 20

## பேரவையின் குழுக்கள்

### 1. மதிப்பீட்டுக் குழு

மதிப்பீட்டுக் குழு மற்றும் அதன் பணிகள்.

*194.* நிதி மதிப்பீடுகளை ஆராய்வதற்கென மதிப்பீட்டுக் குழு ஒன்று நிறுவப் பெறும். இக்குழு, தேர்ந்தெடுக்கும் மதிப்பீடுகளையும் பேரவையினால் இக்குழுவிற்கு குறிப்பாக அனுப்பி வைக்கப்பெறும் மதிப்பீடுகளையும் ஆய்வு செய்யும்.

இக்குழுவின் பணிகளாவன:—

(அ) மதிப்பீடுகளை ஒட்டிய கொள்கைக்குத் தொடர்பாக சிக்கனம், நிர்வாக அமைப்பில் மேம்பாடு செயல்திறன் அல்லது நிர்வாகச் சீர்திருத்தம் முதலியவற்றில் என்னென்ன செய்யலாம் என்பதைப் பற்றி அறிக்கை அளித்தல்;

(ஆ) நிர்வாகத்தில் செயல்திறனையும் சிக்கனத்தையும் கொண்டுவர மாற்றுக் கொள்கைகளை எடுத்துக் கூறுதல்;

(இ) மதிப்பீட்டில் அடங்கியுள்ள கொள்கையின் வரம்புக்கு உட்பட்டு, பணம் நன்கு செலவிடப் பெறுகிறதா என்பதை ஆராய்தல்;

(ஈ) சட்டமன்றத்தில் எந்த வடிவில் மதிப்பீடுகள் அளிக்கப் பெற வேண்டும் என்பது குறித்து ஆலோசனை கூறுதல்;

எனினும், இவ்விதிகளினாலோ, தலைவராலோ பொது நிறுவனங்கள் குழுவின் செயல் வரம்பிற்குள் ஒதுக்கப்பெற்ற பொருள்களைப்பற்றி இக்குழு பரிசீலிக்கக்கூடாது.

குழுவின் அமைப்பு.

*195. (1)* இக்குழு 16 உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும். அவர்கள் பேரவையால் பேரவையின் உறுப்பினர்களிலிருந்து விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ கோட்பாட்டிற்கிணங்க ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப் பெறவேண்டும். தவிர, நிதி அமைச்சர், பொதுக் கணக்குக் குழுத் தலைவர், பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் ஆகியோரும் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாக இருப்பார்கள்.



*(2)* இக்குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் ஓர் ஆண்டுக்கு மேற்படக்கூடாது. ஒரு நடப்பு ஆண்டு முடிவதற்குள் வரும் ஆண்டிற்கு ஒரு குழுவை அமைப்பதற்குப் புதிதாக ஒரு தேர்தல் நடைபெற வேண்டும். எக்காரணத்தினாலேனும் அத்தேர்தல் நடைபெறவில்லை எனில், புதிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பெறும்வரை அக்குழுவில் இருந்துகொண்டிருக்கும் உறுப்பினர்களே தொடர்ந்து பதவி வகிப்பார்கள்.

குழுத் தலைவர்.

*196.* குழுவின் உறுப்பினர்களிலிருந்து குழுவின் தலைவர் பேரவைத் தலைவரால் நியமனம் செய்யப் பெற வேண்டும். அவ்வாறு நியமனம் செய்யப்பெற்றவர் குழுக் கூட்டங்களுக்குத் தலைமை வகிக்க வேண்டும். அவர் வராதபோது, குழுவினால் தேர்ந்தெடுக்கப் பெறும் குழு உறுப்பினர்களில் ஒருவர் தலைமை வகிக்க வேண்டும்.

குறைவெண்.

*197.* குழுக் கூட்டம் முறையாக இயங்குவதற்கு குழுத் தலைவர் அல்லது குழுக் கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் உறுப்பினர் உட்பட குறைந்தது ஐவர் இருத்தல் வேண்டும்.

உட்குழுக்கள்.

*198.* குழு அதற்கு அனுப்பி வைக்கப்பெற்ற எப்பொருள் பற்றியேனும் ஆராய, ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உட்குழுக்களை நியமிக்கலாம். அத்தகைய உட்குழு அல்லது உட்குழுக்களின் அறிக்கைகள், முழுக் குழுவின் ஒரு கூட்டத்தில் ஏற்கப்பெற்றால் அவைகள் முழுக் குழுவின் அறிக்கைகளாகவே கருதப்பெறும்.

குழுவின் அறிக்கைகள்.

*199.* குழு தனது அறிக்கையில் முடிவு பெற்ற பகுதி எதையேனும், அது பொருத்தமெனக் கருதினால், பேரவையில் அளிப்பதற்கு முன் அரசுக்குக் கிடைக்கும்படி செய்யலாம். அத்தகைய அறிக்கைகள், பேரவையில் வைக்கப் பெறும்வரை, இரகசியமானதாகக் கருதப்பெற வேண்டும்.

மதிப்பீடுகளை ஆய்தல்.

*200.* குழு, நிதியாண்டு முழுவதும், மதிப்பீடுகள் பற்றிய ஆய்வினைத் தொடர்ந்து நடத்தலாம்; ஆய்வு தொடர்கையில் தனது அறிக்கையை அவ்வப்போது பேரவைக்கு அளிக்கலாம். எந்த ஒரு ஆண்டின், அனைத்து மதிப்பீடுகளையும் இக்குழு ஆய்தல் வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. பேரவைக்கு குழு அறிக்கை எதையும் அளிக்கவில்லை என்றாலும், அதனைப் பொருட்படுத்தாது மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு நடைபெறலாம்.

மாற்றுக் கருத்து குறிப்பு.

*201. இக்குழுவின் அறிக்கைகளுக்கு மாற்றுக் கருத்துக் குறிப்புகள் எதுவும் இருக்கக் கூடாது.*

குழுவின் நடைமுறைகள்.

*202. மேற்கூறப்பட்டவை தவிர, பேரவையின் ஒரு ஆய்வுக் குழுவிற்குப் பொருந்தும் விதிகள் இதற்கும் பொருந்தும்.*

## 2. பொதுக் கணக்குக் குழு

பொதுக் கணக்குக் குழு மற்றும் அதன் அமைப்பு.

*203. (1) மாநில அரசின் செலவுகளுக்காக, அவையினால் பல்வேறு இனங்களின்கீழ் அனுமதிக்கப்பெறும் நிதி ஒதுக்கக் கணக்குகள், மாநில அரசின் வருடாந்திர நிதிக் கணக்குகள் ஆகியவற்றையும், பேரவைமுன் வைக்கப்பெறும் மற்ற கணக்குகளில், குழு பொருத்தமெனக்கருதும் எதையும் ஆய்வு செய்ய, பொதுக் கணக்குக் குழு என்ற ஒரு குழு நிறுவப் பெறும்.*

*(2) இக்குழு 16 உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும். அவர்கள் பேரவையால் பேரவையின் உறுப்பினர்களிலிருந்து விகிதாச்சார பிரதிநிதித்துவ கோட்பாட்டிற்கிணங்க ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற வேண்டும். தவிர நிதியமைச்சர், மதிப்பீட்டுக் குழுத் தலைவர், பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் ஆகியோரும் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாக இருப்பார்கள்.*

*(3) இக்குழு உறுப்பினர்களின் பதவிக் காலம் ஓர் ஆண்டுக்கு மேற்படக் கூடாது. ஒரு நடப்பு ஆண்டு முடிவதற்குள் வரும் ஆண்டிற்கு ஒரு குழுவை அமைப்பதற்குப் புதிதாக ஒரு தேர்தல் நடைபெற வேண்டும். எக்காரணத்தினாலேனும் அத்தேர்தல் நடைபெறவில்லை எனில், புதிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பெறும் வரை, அக்குழுவில் இருந்து கொண்டிருக்கும் உறுப்பினர்களே தொடர்ந்து பதவி வகிப்பார்கள்.*

குழுவின் தலைவர்.

*204. (1) குழுவின் உறுப்பினர்களிலிருந்தே, முன்னுரிமையாக எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களில் ஒருவர், இக்குழுவிற்குத் தலைவராக பேரவைத் தலைவரால் நியமனம் செய்யப்பெற வேண்டும்.*



*எனினும், எதிர்க்கட்சியில் அப்போது ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகள் இருக்குமேயானால், பேரவைத் தலைவர் இக்குழுவின் தலைமைப் பதவியை அத்தகைய எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கு இடையே ஆண்டுக்கு ஒருமுறை மாற்றிக்கொடுக்கலாம் அல்லது எதிர்க்கட்சித் தலைவர்களே விரும்பினால், அந்தக் கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர் எவருக்கேனும் தலைமைப் பதவியைக் கொடுக்கலாம்.*

*மேலும், இக் குழுவினால் ஆய்வு செய்யப் பெறவேண்டிய கணக்குகள், இக்குழுவின் தலைவராக நியமனம் செய்யப்பெறக் கூடியவர் சார்ந்துள்ள கட்சி அரசாங்கப் பொறுப்பில் இருந்த ஆண்டுக்குப் பொருத்தமான காலத்தொடர்பு உடையனவாக இருப்பின் அப்போது வேறு கட்சியைச் சார்ந்த ஒருவரை குழுவின் தலைவராகப் பேரவைத் தலைவர் நியமனம் செய்யலாம்.*

*(2) அவ்வாறு நியமனம் செய்யப் பெற்றவர் குழுக் கூட்டங்களுக்குத் தலைமை வகிக்க வேண்டும். அவர் வராதபோது, குழுவினால் தேர்ந்தெடுக்கப்பெறும் குழு உறுப்பினர்களில் ஒருவர் தலைமை வகிக்க வேண்டும்.*

குறைவெண்.

*205. குழுக் கூட்டம் முறையாக இயங்குவதற்கு குழுத் தலைவர் அல்லது குழுக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும் உறுப்பினர் உட்பட குறைந்தது ஐவர் இருத்தல் வேண்டும்.*

உட்குழுக்கள்.

*206. குழு, அதற்கு அனுப்பி வைக்கப்பெற்ற எப்பொருள் பற்றியேனும் ஆராய, ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உட்குழுக்களை நியமிக்கலாம். அத்தகைய உட்குழு அல்லது உட்குழுக்களின் அறிக்கைகள் முழுக் குழுவின் ஒரு கூட்டத்தில் ஏற்கப்பெற்றால் அவைகள் முழுக் குழுவின் அறிக்கைகளாகவே கருதப்பெறும்.*

குழுவின் பணிகள்.

*207. (1) மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டுக் கணக்குகளையும் அவற்றின் மீதான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையையும் ஆய்வு செய்யும்பொழுது குழு—*

*(அ) கணக்குகளில், செலவிடப் பெற்றுள்ளதாகக் காட்டப்பெற்றுள்ள தொகை எந்தப் பணிக்காகச் செலவிடப் பெற்றதோ அல்லது நோக்கத்திற்காக காட்டப்பெற்றதோ, அந்தப் பணிக்கும், நோக்கத்திற்கும் சட்டப்படி கிடைக்கப் பெற்று, செலவிடப்பெற்றதா;*

*(ஆ) அந்தச் செலவினங்கள், அவற்றுக்கான அங்கீகாரம் அளிக்கும் உத்தரவுக்கு இணங்க உள்ளதா;*

(இ) ஆளுநரோ அல்லது நிதித் துறையோ வகுத்துள்ள அந்தந்த விதிகளுக்கு இணங்க மறு நிதி ஒதுக்கீடு (Reappropriation) ஒவ்வொன்றும் செய்யப் பெற்றுள்ளதா என்று குழு உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும்.

குழு பேரவையின் கவனத்திற்கு கீழ்க்கண்டவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்:—

(i) அவ்வாறு மனநிறைவு பெறாத இனம் (case) ஒவ்வொன்றையும்; மற்றும்

(ii) பேரவையின் கவனத்திற்குக் கொண்டுவருதல் வேண்டும் என நிதித்துறை கோரும் எல்லா செலவினங்களையும்.

(2) கீழ்க்கண்டவைகளும் பொதுக் கணக்குக்குழுவின் கடமை ஆகும்—

(அ) எவ்வகையில் கணக்குகளை வைத்திருக்க வேண்டும் என்று ஆளுநர் குறிப்பிட்டாரோ அவ்வகையில் தயார் செய்யப் பெற்ற வணிகம், உற்பத்தி, இலாப நட்டக் கணக்குகள், ஐந்தொகைக் கணக்குகள் (Balance Sheet) ஆகியவற்றையும் அவற்றின் மீதான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையையும் ஆய்வு செய்தல்; மற்றும்

(ஆ) ஆளுநர் உத்தரவுப்படி, ஏதேனும் வரவினம் பற்றி தணிக்கை செய்யப்பெற்ற அல்லது பண்டகசாலைகளின் கணக்குகள், இருப்புகள் பற்றிப் பரிசீலிக்கப் பெற்ற இந்தியத் தணிக்கைத் துறை தலைவரின் அறிக்கையை ஆய்வு செய்தல்.

(3) ஒரு நிதியாண்டில் பேரவை அளித்த தொகையை விடக் கூடுதலாக, ஏதேனும் ஒரு பணிக்குச் செலவிடப் பெற்றிருந்தால் அவ்வாறு கூடுதலாகச் செலவானதற்கான சூழ்நிலையையும், மற்ற விவரங்களையும் ஆய்ந்து, அது பற்றி பேரவைக்குக் குழு பொருத்தமெனக் கருதும் பரிந்துரைகளை அளித்தல்.

எனினும், இவ்விதிகளினாலோ அல்லது பேரவைத் தலைவராலோ பொது நிறுவனங்கள் குழுவிற்கு ஒதுக்கப்பெற்ற பொது நிறுவனங்கள் இக்குழுவின் செயல் வரம்பிற்குள் வராது.

பேரவைக்கு அறிக்கையை அளிப்பதற்கு முன்னர் அரசுக்கு அளித்தல்.

208. குழு, தனது அறிக்கையில், முடிவு பெற்ற பகுதி எதையேனும், அது பொருத்தமெனக் கருதினால் பேரவையில் வைப்பதற்கு முன், அரசுக்குக் கிடைக்கும்படி செய்யலாம். அத்தகைய அறிக்கைகள் பேரவையில் அளிக்கப்பெறும்வரை, இரகசியமானதாகக் கருதப் பெறல் வேண்டும்.



மாற்றுக் கருத்து குறிப்பு.

209. இக் குழுவின் அறிக்கைகளுக்கு மாற்றுக் கருத்துக் குறிப்புகள் எதுவும் இருக்கக்கூடாது.

குழுவின் நடைமுறைகள்.

210. மேற்கூறப்பட்டவை தவிர, பேரவையின் ஒரு ஆய்வுக் குழுவிற்குப் பொருந்தும் விதிகள் இதற்கும் பொருந்தும்.

## 3. பொது நிறுவனங்கள் குழு

பொது நிறுவனங்கள் குழு மற்றும் அதன் அமைப்பு.

211. (1) பொது நிறுவனங்கள் குழு ஒன்று, இணைப்பு 'உ' இல் குறிப்பிடப் பெற்றுள்ள பொது நிறுவனங்கள், மேலும் பேரவைத் தலைவரால் அவ்வப்போது அறிவிக்கப்பெறும் மற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் செயல்முறைகளை ஆய்வு செய்வதற்காக நிறுவப்பெறும்.

(2) இக்குழு 16 உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும். அவர்கள் பேரவையால், பேரவையின் உறுப்பினர்களிலிருந்து விகிதாச்சார பிரதிநிதித்துவ கோட்பாட்டிற்கிணங்க ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற வேண்டும். தவிர மதிப்பீட்டுக் குழுத் தலைவர், பொதுக் கணக்குக் குழுத் தலைவர் ஆகியோரும் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

எனினும் இக்குழுவின் உறுப்பினராக ஓர் அமைச்சர் தேர்ந்தெடுக்கப் பெறலாகாது. ஓர் உறுப்பினர், குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பெற்ற பிறகு, அமைச்சராக நியமிக்கப் பெற்றால் அவ்வாறு நியமிக்கப் பெற்ற நாளில் இருந்து, அவர் குழுவின் உறுப்பினர் பதவியில் இருக்கமாட்டார்;

(3) இக்குழு உறுப்பினர்களின் பதவிக் காலம் ஓர் ஆண்டுக்கு மேற்படக் கூடாது. ஒரு நடப்பு ஆண்டு முடிவதற்குள் வரும் ஆண்டிற்கு ஒரு குழுவை அமைப்பதற்குப் புதிதாக ஒரு தேர்தல் நடைபெற வேண்டும். எக்காரணத்தினாலேனும் அத்தேர்தல் நடைபெறவில்லை எனில், புதிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பெறும்வரை அக்குழுவில் இருந்து கொண்டிருக்கும் உறுப்பினர்களே தொடர்ந்து பதவி வகிப்பார்கள்.

புதிய பொது நிறுவனங்கள் அமைத்தல் குறித்த தகவல் பேரவைக்கு/ பேரவைத் தலைவருக்குத் தெரிவித்தல்.

212. பொது நிறுவனம் புதியதாக ஏதேனும் அரசினரால் அமைக்கப்படின் அவ்வாறு அமைக்கப்பட்டவுடன் அதற்கான காரணம், அதன் நோக்கம் மற்றும் அந்நிறுவனத்தின் அவசியம் குறித்த நோக்கக் குறிப்பு ஒன்றுடன் அதனைப் பேரவை கூடாத பொழுது பேரவைத் தலைவருக்கு தெரிவிக்க வேண்டும். பேரவைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருப்பின்,

அந்நிறுவனத்திற்குப் பொறுப்புடைய அமைச்சர், அவ்வாறு அமைக்கப்பட்டதன் நோக்கம் மற்றும் அவசியத்தை விளக்கி கிடைக்கும் முதல் வாய்ப்பிலேயே அறிக்கை ஒன்றினை அளிக்கவோ அல்லது பேரவை மேசை முன் வைக்கவோ வேண்டும்.

*குழுத் தலைவர்.*

213. குழுவின் உறுப்பினர்களிலிருந்தே குழுவின் தலைவர் பேரவைத் தலைவரால் நியமனம் செய்யப்பெற வேண்டும்; அவ்வாறு நியமனம் செய்யப் பெற்றவர் குழுக் கூட்டங்களுக்குத் தலைமை வகிக்க வேண்டும். அவர் வராதபோது, குழுவினால் தேர்ந்தெடுக்கப்பெறும், குழு உறுப்பினர்களில் ஒருவர் தலைமை வகிக்க வேண்டும்.

*குறைவெண்.*

214. குழுக் கூட்டம் முறையாக இயங்குவதற்கு குழுத் தலைவர் அல்லது குழுக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும் உறுப்பினர் உட்பட குறைந்தது ஐவர் இருத்தல் வேண்டும்.

*உட்குழுக்கள்.*

215. குழு அதற்கு அனுப்பி வைக்கப்பெற்ற எப்பொருள் பற்றியேனும் ஆராய, ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உட்குழுக்களை நியமிக்கலாம்; அத்தகைய உட்குழு அல்லது உட்குழுக்களின் அறிக்கைகள், முழுக் குழுவின் ஒரு கூட்டத்தில் ஏற்கப் பெற்றால் அவைகள் முழுக் குழுவின் அறிக்கைகளாகவே கருதப் பெறும்.

*குழுவின் பணிகள்.*

216. குழுவின் பணிகளாவன:—

(அ) இணைப்பு ‘உ’ இல் குறிப்பிடப்பெற்ற பொது நிறுவனங்கள் மேலும் அவ்வப்போது பேரவைத் தலைவரால் அறிவிக்கப் பெறும் அதைப்போன்ற வேறு நிறுவனங்கள் ஆகியவற்றின் கணக்குகளையும் அறிக்கைகளையும் ஆய்வு செய்தல்;

(ஆ) பொது நிறுவனங்கள் குறித்து, இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கைகள் ஏதேனும் இருப்பின் அதனை ஆய்வு செய்தல்;

(இ) பொது நிறுவனங்களில் காணப்பெற வேண்டிய தனித்து இயங்கும் தன்மையையும், செயல் திறனையும் கருத்திற்கொண்டு இந்தப் பொது நிறுவனங்கள் குறித்த செயல்பாடுகள் சரியான வணிகக் கோட்பாடுகளையும், சாதுர்யமான வியாபாரப் பழக்கங்களை ஒட்டி நிர்வகிக்கப் பெற்று வருகின்றனவா என்பதை ஆய்தல்;

(ஈ) இணைப்பு ‘உ’ இல் கண்டுள்ள பொது நிறுவனங்கள் குறித்து, பொதுக் கணக்குக் குழு மற்றும் மதிப்பீட்டுக் குழு



ஆகியவற்றின் வரம்பிற்குள்வரினும், மேல் குறிப்பிட்ட (அ), (ஆ) மற்றும் (இ)-ஆகிய உள் விதிகளில் குறிக்கப்பெறாத பணிகள் குறித்தும், பேரவைத் தலைவரால், அவ்வப்போது இக் குழுவிற்கென ஒதுக்கப்பெறும் பணிகள் குறித்தும் செயல்படுதல்;

எனினும், இக்குழு கீழே குறிப்பிட்டுள்ளவைகளை ஆராயவோ புலனாய்வு செய்யவோ கூடாது; அவையாவன:—

(i) பொது நிறுவனங்களின் வியாபார அல்லது வணிக செயல் முறைகளில் இருந்து தனித்த அரசின் பெரும் கொள்கை (Major Government Policy) பற்றியதாக இருக்கும் பொருள்கள்;

(ii) நிறுவனத்தின் அன்றாட நடவடிக்கைகள்;

(iii) ஒரு குறிப்பிட்ட பொது நிறுவனம் அமைக்க பெற்றுள்ள சிறப்புச் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பெற்றுள்ள ஒரு சிறப்பு நிர்வாக அமைப்பு ஆராயும் பொருள்கள்.

*குழுவின் அறிக்கை.*

217. (1) குழு, தனது அறிக்கையில், முடிவு பெற்ற பகுதி எதையேனும், அது பொருத்தமெனக் கருதினால், பேரவையில் வைப்பதற்கு முன், அரசுக்கு கிடைக்கும்படி செய்யலாம். அத்தகைய அறிக்கைகள், பேரவையில் அளிக்கப்பெறும் வரை, இரகசியமானதாகக் கருதப்பெற வேண்டும்.

(2) இக்குழுவின் அறிக்கைகளுக்கு மாற்றுக் கருத்து குறிப்புகள் எதுவும் இருக்கலாகாது.

*குழுவின் நடைமுறை.*

218. மேற் கூறப்பட்டவை தவிர, பேரவையின் ஒரு ஆய்வுக் குழுவிற்குப் பொருந்தும் விதிகள் இதற்கும் பொருந்தும்.

## 4. அவை உரிமைக் குழு

*பிரச்சினையை எழுப்புவதற்கு பேரவைத் தலைவரின் முன் இசைவு.*

219. உறுப்பினர் ஒருவர் பேரவைத் தலைவரின் முன் இசைவுடன் ஓர் உறுப்பினருடைய அல்லது பேரவையினுடைய அல்லது பேரவைக் குழு ஒன்றினுடைய உரிமை மீறல் பற்றிய பிரச்சினை ஒன்றை எழுப்பலாம்.

*பிரச்சினை பற்றி முன்அறிவிப்பு*

220. உரிமைப் பிரச்சினையை எழுப்ப எண்ணும் நாளில் அன்றைய கூட்டம் தொடங்குவதற்கு குறைந்தது ஒரு மணி நேரத்திற்கு முன்னதாக அப்பிரச்சினை பற்றிய சுருக்கமான அறிக்கை, உரிமைப் பிரச்சினையை எழுப்புவதற்கான தீர்மானத்தின் முன்னறிவிப்பு ஒன்றினை (1) பேரவைத் தலைவர், (2) பேரவைச் செயலாளர் மற்றும் (3) பேரவை முன்னவர்

ஆகியோரிடம் சேர்ப்பிக்க வேண்டும். முன்மொழியப்பெறும் உரிமைப் பிரச்சினை ஓர் ஆவணத்தை ஆதாரமாகக் கொண்டு இருப்பின், அம்முன்னறிவிப்புடன் ஆவணத்தினையும் இணைக்க வேண்டும் என்றாலும் பேரவை முன்னவரிடம் சேர்ப்பிக்கப் பெற வேண்டிய முன்னறிவிப்புகள், பேரவை முன்னவருக்கு அனுப்பி வைக்கப் பெறுவதற்காக செயலாளரிடம் கொடுக்கப் பெறலாம்.

மேலும் அவ்வுரிமைப் பிரச்சினை பேரவையில் மற்ற எந்த ஓர் உறுப்பினர் (அமைச்சர் உட்பட) மீதாக இருப்பின், அறிவிப்பின் நகல் ஒன்று பேரவைச் செயலகத்தின் மூலம் அவருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

எனினும், பேரவைக் கூட்டம் நடந்துகொண்டு இருக்கையில் எழுகிற உரிமைப் பிரச்சினைகளைப் பொறுத்தமட்டில் பேரவைத் தலைவர் அத்தகைய முன்னறிவிப்பு ஏதும் இல்லாமலே அவர் பொருத்தமெனக் கருதும் வகையில் எடுத்துக் கொள்ளலாம்.

பிரச்சினையை எழுப்ப வேண்டிய நேரம்.

221. உரிமை மீறல் பிரச்சினையை எழுப்ப பேரவைத் தலைவர் அனுமதி அளித்தபின், அவ்வுரிமைப் பிரச்சினையை வினாக்களுக்குப் பின்னரும் அந்நாள் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப் பெற்றுள்ள அலுவல்களுக்கு முன்னரும், எழுப்பப் பெறவேண்டும்.

எனினும், பேரவைக் கூட்டம் நடந்துக்கொண்டிருக்கையில் எழும் 'உரிமைப் பிரச்சினை' ஒன்று உடனடியாக மற்ற எல்லா அலுவல்களையும்விட முன்னிடம் பெறும்.

அனுமதி பெறுவதற்கான நிபந்தனைகள்.

222. உரிமைப் பிரச்சினை எழுப்புவதற்கான உரிமை கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டது அவையாவன:—

(1) உரிமை மீறல் உள்ளதாகக் கூறப்பெறும் செயல் மிக அண்மையில் நடந்த ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியைக் குறித்ததாக இருக்க வேண்டும்.

(2) அப்பொருளில் பேரவையின் தலையீடு அவசியம் என்று பேரவைத் தலைவர் கருத வேண்டும்.

மேற்காணும் நிபந்தனைகளுக்கு எழுப்பப்படும் முன்னறிவிப்பு உட்பட்டிருப்பின், பேரவைத் தலைவர் விதி 219 இன்படி அவையில் எழுப்புவதற்கு தமது இசைவினை அளிக்கலாம்.

இசைவளித்த பின் பிரச்சினையை எழுப்புதல்.

223. விதி 219 இன் கீழ் பேரவைத் தலைவர் பிரச்சினையை எழுப்ப தமது இசைவினை அளித்து எழுப்பவிருக்கும் பிரச்சினையில் பேரவையின் தலையீடு அவசியம் என்று கருதுவாரேயானால் தமது உசிதப்படி சம்பந்தப்பட்ட உறுப்பினரை பிரச்சினை குறித்து சுருக்கமான விளக்கம் ஒன்றினை அளிக்க அனுமதிக்கலாம்.



மேலும், எந்த ஒரு பிரச்சினையிலும் அவையின் தலையீடு தேவை எனத் தீர்மானிப்பதற்கு முன் அவையின் தலையீடு ஏன் அவசியமாகிறது என்பது குறித்து சுருக்கமாக விளக்கம் கூற உறுப்பினருக்கு வாய்ப்பினை அளிக்கலாம்.

மேலும், வேறோர் உறுப்பினருக்கு எதிராக எழுப்பப்பெறும் பிரச்சினையாக அமையுமானால் அப்பிரச்சினை குறித்து சுருக்கமாக விளக்கமளிக்க அந்த உறுப்பினருக்கும் பேரவைத் தலைவர் வாய்ப்பினை அளிக்கலாம்.

இசைவு மறுத்தல்.

224. பேரவைத் தலைவர் இசைவினை மறுத்தாலும் அல்லது அவையின் கவனத்தை ஈர்க்க வேண்டிய அவசியமில்லை எனக் கருதினாலும் அறிவிப்பு அளித்த உறுப்பினருக்கு அத்தகவலை அளிப்பின் அதன் பிறகு அப்பொருள் குறித்து எவ்வகையிலும் பேரவையில் எழுப்பக்கூடாது.

தீர்மானம்.

225. எழுப்பப்பட்ட பிரச்சினை அவையின் உரிமை மீறியதாகவோ அல்லது அவையை அவமதிப்பதாகவோ இருந்து அவையின் தலையீடு அவசியம் எனப் பேரவைத் தலைவர் கருதினால் அவ்வுரிமை மீறல் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்பப் பெற வேண்டும் என்றோ அல்லது பேரவையே நேரடியாக ஆய்வு செய்ய வேண்டும் என்றோ உறுப்பினர் எவரேனும் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வர அனுமதிக்கலாம்.

பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு பேரவைத் தலைவரே அனுப்புதல்.

226. இவ்விதிகளில் வழிவகை செய்யப்பெறாது மாறாக இருப்பினும் கூட எந்த ஓர் உரிமைப் பிரச்சினை ஒன்றை விசாரித்து, ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக, பேரவைத் தலைவர் தாமாகவே உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கலாம்.

குழுவின் அமைப்பு.

227. (1) உரிமைக் குழு 14 உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். தவிர, பேரவை முன்னவர், பேரவை எதிர்க்கட்சித் தலைவர், பேரவைத் துணைத் தலைவர் ஆகியோர் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாக இருப்பார்கள். மற்ற 14 உறுப்பினர்கள் பேரவைத் தலைவரால் குறிப்பிடப்பெறும் நாளில் விகிதாச்சார பிரதிநிதித்துவக் கோட்பாட்டிற்கு இணங்க ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி இதற்கென பேரவைத் தலைவரால் வகுக்கப் பெற்றிருக்கும் ஒழுங்கு முறைகளின்படி பேரவையால் அதன் உறுப்பினர்களில் இருந்து தேர்ந்தெடுக்கப் பெறவேண்டும்.

(2) அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பெற்ற குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் நிதியாண்டின் இறுதிவரை இருக்கும். ஆனால் எந்த உறுப்பினரும் மறு தேர்வுக்குத் தகுதி உள்ளவர். நடப்பு நிதியாண்டின் இறுதிக்குள் தொடர்ந்துவரும் நிதியாண்டிற்கான குழுவை அமைப்பதற்குப் புதிதாக ஒரு தேர்தல் நடைபெற வேண்டும். எக்காரணத்தினாலேயும் அத்தேர்தல் நடைபெறவில்லை எனில், புதிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படும் வரை ஏற்கெனவே குழுவில் இருக்கும் உறுப்பினர்களே தொடர்ந்து பதவி வகிப்பார்கள்.

குழுவின் தலைவர்.

(3) பேரவைத் துணைத் தலைவர் அலுவல் காரணமாக குழுவின் தலைவராக இருப்பார்.

குறைவெண்.

(4) குழுக் கூட்டம் முறையாக இயங்குவதற்கு குழுத் தலைவர் அல்லது குழுக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும் உறுப்பினர் உட்பட குறைந்தது ஐவர் இருத்தல் வேண்டும்.

உறுப்பினர் களின் தகுதி யின்மை.

228. (1) குழுவினால் ஆய்வு செய்யப்பெற வேண்டிய உரிமைப் பிரச்சினை ஒன்றின் ஆய்வைப் பாதிக்கக்கூடிய அளவுக்கு அப்பிரச்சினையில் சொந்த அல்லது நேரடி அக்கறை உள்ள, குழுவின் உறுப்பினர் ஒருவர், குழுவில் அப்பிரச்சினையை ஆய்வு செய்யப்பெறும்போது அக்கூட்டத்தில் இருத்தல் கூடாது.

(2) உள்விதி (1) இல் குறிப்பிட்டவாறு, குழு உறுப்பினரில் எவருக்கேனும் சொந்த அல்லது நேரடி அக்கறை உள்ளதா என்பது அக்குழுவின் தலைவரால் முடிவு செய்யப்பெற வேண்டும். அக்குழுவின் தலைவரையே சம்பந்தப்படுத்துவதாக அது இருப்பின், அப்பிரச்சினை பேரவைத் தலைவருக்கு அனுப்பப்பெற வேண்டும். அவரது முடிவே இதில் இறுதியானது.

அறிக்கை அளித்த பின் நடைமுறை.

229. (அ) உரிமைக் குழுவின் அறிக்கை குழுவின் தலைவராலோ அல்லது அவ்வாறு அதிகாரம் அளிக்கப்பெற்ற குழுவின் வேறு எந்த உறுப்பினராலோ பேரவைக்கு அளிக்கப்பெற வேண்டும்.

(ஆ) அறிக்கை அளிக்கப்பெற்ற பின் கூடுமான விரைவில் அவ்வறிக்கை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் என்ற ஒரு தீர்மானம் குழுவின் தலைவர் பெயரிலோ அல்லது குழு உறுப்பினர் ஒருவரின் பெயரிலோ கொண்டு வரப்பெறலாம்.



(இ) மேலே குறிப்பிட்டுள்ளபடி, அவ்வறிக்கையை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற தீர்மானத்திற்குப் பேரவைத் தலைவரால் பொருத்தம் எனக் கருதும் வடிவில் திருத்த முன்னறிவிப்பை உறுப்பினர் எவரும் கொடுக்கலாம்.

எனினும், அவ்வாறான ஒரு திருத்தம், இப்பிரச்சினையில் ஒரு குறிப்பிட்ட பொருள் குறித்தோ அல்லது வரம்பு எதுவும் இன்றி முழுமையாக குழுவின் மறு ஆய்வுக்குத் திருப்பி அனுப்பவேண்டுமென மொழியப் பெறலாம்.

(ஈ) அறிக்கை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேறியபின் குழுத் தலைவரோ அல்லது அக்குழுவின் உறுப்பினர் எவருமோ அல்லது வேறு எந்த உறுப்பினரோ முறையே அறிக்கையில் அடங்கியுள்ள பரிந்துரைகளைப் பேரவை ஏற்றுக் கொள்கிறது அல்லது நிராகரிக்கிறது அல்லது திருத்தங்களோடு ஏற்றுக் கொள்கிறது என்ற தீர்மானத்தை மொழியலாம்.

குழு பின்பற்ற வேண்டிய நடைமுறை.

230. மேற்கூறப்பட்டவை தவிர, பேரவையின் ஒரு ஆய்வுக் குழுவிற்குப் பொருந்தும் விதிகள், இதற்கும் பொருந்தும்.

## 5. அலுவல் ஆய்வுக் குழு

குழுவின் அமைப்பு.

231. (1) அலுவல் ஆய்வுக் குழு ஒன்றினைப் பேரவைத் தலைவர் பேரவையின் தொடக்கத்தில் அல்லது அவ்வப்போது நியமனம் செய்யலாம். பேரவைத் தலைவரையும் பேரவை முன்னவரையும் மற்றும் 15 உறுப்பினர்களையும் கொண்டுள்ளதாக அக்குழு இருக்கும். அக்குழுவின் தலைவராகப் பேரவைத் தலைவரே இருப்பார்.

(2) உள்விதி (1)-இன் கீழ் நியமனம் செய்யப்பெற்ற குழு ஓர் ஆண்டு காலத்திற்கோ அல்லது புதிய குழு ஒன்று நியமனம் செய்யப்பெறும் வரையிலோ பதவி வகிக்கும்.

(3) எக்காரணத்தினாலாவது குழுவின் எந்தக் கூட்டத்திற்கேனும் பேரவைத் தலைவர் தலைமை வகிக்க இயலாத நேர்வில் அக்கூட்டத்திற்கான தலைவரை பேரவைத் தலைவர் நியமிக்க வேண்டும்.

(4) இக்குழுவில் தற்செயலாக ஏற்படும் வெற்றிடங்கள் பேரவைத் தலைவரால் நிரப்பப்பெறும். அவ்வாறு நிரப்பப்பெறுவதற்காக நியமிக்கப்பெறும் உறுப்பினர் எவரும் யாருடைய வெற்றிடத்தை நிரப்ப நியமனம் பெறுகிறாரோ, உள்விதி (2)-இன்படி அவரது பதவியின் எஞ்சிய காலத்திற்குப் பதவி வகிக்கலாம்.

குறைவெண்.

232. குழுக் கூட்டம் முறையாக இயங்குவதற்கு குழுத் தலைவர் அல்லது குழுக்கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் உறுப்பினர் உட்பட குறைந்தது ஐவர் இருத்தல் வேண்டும்.

குழுவின் பணிகள்.

233. (1) பேரவைத் தலைவரால், அனுப்பி வைக்கப்பெறும் அரசினர் சட்ட முன்வடிவுகளின் ஒவ்வொரு கட்டத்திற்கோ, கட்டங்களுக்கோ அல்லது பிற அலுவல்களுக்கோ விவாதத்திற்கு ஒதுக்கப்பெற வேண்டிய நேரம் குறித்து பரிந்துரையை அளிப்பது இக்குழுவின் பணியாக இருக்கும்.

(2) சட்ட முன்வடிவில் பல்வேறு கட்டங்கள், பிற அலுவல்கள், ஒவ்வொன்றும் இன்ன இன்ன காலத்திற்குள் முடித்தாக வேண்டும் என குழு அளிக்க இருக்கும் கால அட்டவணையில் குறிப்பிட்டுக்காட்ட இக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

(3) பேரவைத் தலைவரால் அவ்வப்போது ஒதுக்கப்பெறும் பணிகளையும் இக்குழு கவனித்தல் வேண்டும்.

பேரவைக்கு அறிக்கை அளித்தல்.

234. சட்ட முன்வடிவுக்கோ சட்ட முன்வடிவுகளின் கோர்வைக்கோ அல்லது பிற அலுவல்களுக்கோ இக்குழுவினால் வகுத்துக் கொடுக்கப்பெறும் கால அட்டவணை பேரவைத் தலைவரால் பேரவைக்கு அறிவிக்கப்பெற வேண்டும்.

பின்பற்றப் பெற வேண்டிய நடைமுறை.

235. பேரவைக்கு அவ்வாறு அறிவிக்கப்பெற்ற பின்பு கூடிய விரைவில் அலுவல் ஆய்வுக் குழு இன்ன சட்ட முன்வடிவிற்காக அல்லது சட்ட முன்வடிவுகளுக்காக என்றும் பிற அலுவல்களுக்காக என்றும் முன்மொழிந்துள்ள கால ஒதுக்கீட்டை இப்பேரவை ஏற்றுக் கொள்கிறது என்கிற ஒரு தீர்மானம் பேரவைத் தலைவரால் குறிப்பிடப்பெற்ற அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர் ஒருவரால் மொழியப் பெறலாம். இத்தகைய தீர்மானம் ஒன்று பேரவையால் ஏற்றுக் கொள்ளப் பெறின் அதுவே பேரவையின் ஆணையாகச் செயலுக்கு வரும்.



236. விதி 235 இல் குறிப்பிடப்பெற்ற பேரவையின் ஆணைக்கு இணங்க குறித்த நேரத்தில் ஒரு சட்ட முன்வடிவின் குறிப்பிட்ட ஒரு கட்டத்தை முடித்து வைக்க பேரவைத் தலைவர் அச்சட்ட முன்வடிவின் அந்தக் கூட்டத்திற்குத் தொடர்பாக நிலுவையில் இருக்கும் எல்லாப் பொருள்களையும் முடிவுறச் செய்வதற்கு அவசியமான பிரச்சினை ஒவ்வொன்றையும் வாக்கெடுப்பிற்கு விடவேண்டும்.

குறித்த நேரத்தில் அலுவல்களை முடிவுறச் செய்தல்.

237. பேரவை முன்னவரின் வேண்டுதல் பேரில் பேரவை அனுமதித்தால் அன்றி அவ்வாணையில் மாறுதல் எதையும் செய்யக்கூடாது.

கால அட்டவணையில் மாற்றம்.

## 6. ஒப்படைவு அதிகாரத்தின்கீழ் இயற்றப்பெறும் சட்ட விதிகள் ஆய்வுக் குழு

238. அரசமைப்புச் சட்டத்தால் வழங்கப்பெற்ற அல்லது பாராளுமன்றத்தாலோ அல்லது மாநிலச் சட்ட மன்றத்தாலோ ஒப்படைவு செய்யப்பெற்ற அதிகாரத்தின்கீழ் இயற்றப்பெறும் ஒழுங்கு விதிகள் (Regulations), விதிகள் (Rules), உள்விதிகள் (Sub-Rules), துணை விதிகள் (Byelaws) முதலியவை ஒப்படைவு வரம்புக்கு உட்பட்டு முறைப்படி செயல்படுத்தப் பெற்றுள்ளனவா என்பதை ஆய்ந்து பேரவைக்கு அறிக்கை அளிப்பதற்காக ஒப்படைவு அதிகாரத்தின்கீழ் இயற்றப்பெறும் சட்ட விதிகள் ஆய்வுக் குழு ஒன்று இவ்விதிகளின்படி நிறுவப்பெறும்.

சட்ட விதிகள் ஆய்வுக்குழு மற்றும் அதன் பணிகள்.

239. (1) இக்குழு பேரவைத் தலைவரால் நியமனம் செய்யப்பெற்ற 12 உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும்.

குழுவின் அமைப்பு

(2) இக்குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் ஒவ்வொரு நிதியாண்டு இறுதியிலும் முடிவுபெறும். எக்காரணத்தினாலேனும் அதற்கு நியமனம் நடைபெறவில்லை எனில், புதிய உறுப்பினர்கள் நியமிக்கப் பெறும்வரை, அக்குழுவில் இருந்து கொண்டிருக்கும் உறுப்பினர்களே தொடர்ந்து பதவி வகிப்பார்கள்.

240. குழுவின் உறுப்பினர்களிலிருந்தே குழுவின் தலைவர் பேரவைத் தலைவரால் நியமனம் செய்யப்பெற வேண்டும். அவ்வாறு நியமனம் செய்யப்பெற்றவர் குழுக் கூட்டங்களுக்குத் தலைமை வகிக்க வேண்டும். அவர் வராதபோது, குழுவினால் தேர்ந்தெடுக்கப்பெறும், குழு உறுப்பினர்களில் ஒருவர் தலைமை வகிக்க வேண்டும்.

குழுத் தலைவர்

**குறைவெண்**

*241.* குழுக் கூட்டம் முறையாக இயங்குவதற்கு குழுத் தலைவர் அல்லது குழுக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும் உறுப்பினர் உட்பட குறைந்தது நால்வர் இருத்தல் வேண்டும்.

**உட்குழுக்கள்**

*242.* குழு, அதற்கு அனுப்பி வைக்கப்பெற்ற எப்பொருள் பற்றியேனும் ஆராய, ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உட்குழுக்களை நியமிக்கலாம்; அத்தகைய உட்குழு அல்லது உட்குழுக்களின் அறிக்கைகள், முழுக்குழுவின் ஒரு கூட்டத்தில் ஏற்கப் பெற்றால் அவைகள் முழுக் குழுவின் அறிக்கைகளாகவே கருதப்பெறும்.

**பேரவையின் முன் வைக்கப் பெற்ற ஏடுகளை ஆய்வு செய்தல்.**

*243.* அரசமைப்புச் சட்டத்தால் வழங்கப்பெற்ற அல்லது பாராளுமன்றத்தாலோ அல்லது மாநிலச் சட்டமன்றத்தாலோ ஒப்படைவு செய்யப்பெற்ற அதிகாரத்தின்கீழ் இயற்றப்பெற்ற ஒழுங்கு விதிகள், விதிகள், உள்விதிகள், துணை விதிகள் முதலியன பேரவைமுன் வைக்கப்பெற்ற உடனேயோ அல்லது அரசிதழில் வெளியிடப்பெற்ற உடனேயோ குழு கீழே குறிப்பிட்டுள்ளவற்றை பொதுவாகக் கருத்தில் கொண்டு அவற்றை ஆய்தல் வேண்டும்.

(i) எச்சட்டத்தின் கீழ் இயற்றப்பெற்றுள்ளதோ அச்சட்டத்தின் பொது நோக்கங்களை ஒட்டியதாக அது உள்ளதா?

(ii) சட்டமன்றத்தில், ஒரு சட்டம் மூலமாகச் செய்வதுதான் முறையாக இருக்கும் என்று குழு கருதும் ஒரு பொருள் அதில் இருக்கிறதா?

(iii) அது வரி விதிக்கின்றதா?

(iv) அது நேர்முகமாகவோ மறைமுகமாகவோ நீதிமன்றத்தின் அதிகாரவரம்பைத் தடை செய்கிறதா?

(v) சட்டத்தின் சில விதிகளுக்கு பின் நோக்கிய செயல் விளைவினை (Retrospective effect) கொடுப்பதாக தெளிவாக அச்சட்டம் அந்த அதிகாரத்தை அளிக்காத நிலையில் உள்ளதா?

(vi) வருவாய் இணைப்பு நிதியிலிருந்தோ, பொது வருவாயில் இருந்தோ, செலவினங்களை உள்ளடக்கி உள்ளதா?

(vii) சட்டம் வழங்கியுள்ள அதிகாரத்தை வழக்கத்திற்குப் புறம்பாக அல்லது எதிர்பாராத வகையில் பயன்படுத்தியுள்ளதா?

(viii) அது வெளியிடப் பெறுவதிலும், பேரவை முன் வைக்கப் பெறுவதிலும் தக்க நியாயம் கற்பிக்க முடியாத காலதாமதம் ஆகியுள்ளதா?



(ix) அதன் வடிவம் அல்லது செயல் நோக்கம் எக்காரணத்தினாலாவது விளக்கப்பெற வேண்டியுள்ளதா?

**குழுவின் அறிக்கை**

*244. (1)* ஒழுங்கு விதிகள், விதிகள், உள்விதிகள், துணை விதிகள் ஆகியவற்றில் எவையேனும், முழுமையுமோ அல்லது ஒரு பகுதியோ நீக்கப்பெற வேண்டும் அல்லது ஏதாவது ஒரு வகையில் திருத்தப்பெற வேண்டும் எனக் குழு கருதினால், அதற்கான காரணங்களுடன் பேரவைக்கு அறிக்கை ஒன்றினைக் கொடுக்க வேண்டும்.

*(2)* ஒழுங்கு விதிகள், விதிகள், உள்விதிகள், துணை விதிகள் ஆகியவை சம்பந்தமாக வேறு எந்தப் பொருளேனும் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பெற வேண்டுமென்று குழு கருதினால், அந்தக் கருத்தையும், அப்பொருளையும் பேரவைக்குத் தனது அறிக்கை மூலம் தெரிவிக்க வேண்டும்.

**மாற்றுக் கருத்துக் குறிப்பு**

*245.* இக்குழுவின் அறிக்கைகளுக்கு மாற்றுக் கருத்துக் குறிப்புகள் எதுவும் இருக்கக் கூடாது.

**பின்பற்ற வேண்டிய நடைமுறை**

*246.* மேற்கூறப்பட்டவை தவிர, பேரவையின் ஒரு ஆய்வுக் குழுவிற்குப் பொருந்தும் விதிகள் இதற்கும் பொருந்தும்.

## 7. அரசு உறுதிமொழிக் குழு

**குழுவின் பணிகள்.**

*247.* பேரவையில் அவ்வப்போது அமைச்சர்களால் அளிக்கப்பெறும் உறுதிமொழிகள் (Assurances), வாக்குறுதிகள், (Promises), செயல் ஏற்புகள் (undertakings) முதலியவற்றைக் கீழே குறிப்பிட்டவாறு, ஆய்ந்து பேரவைக்கு அறிக்கை அளிக்க இவ்விதிகள் வரையறைகளுக்கு உட்பட்டு அரசு உறுதிமொழிக் குழு ஒன்று நிறுவப்பெறும்:—

*(அ)* அத்தகைய உறுதிமொழிகள் எந்த அளவுக்கு, நிறைவேற்றப்பெற்றுள்ளன; மேலும்

*(ஆ)* நிறைவேற்றப்பட்டிருப்பின், அது தேவையான குறுகிய கால அளவிற்குள் நிறைவேற்றப்பட்டுள்ளதா;

**குழுவின் அமைப்பு**

*248. (1)* இக்குழு 12-க்கும் மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும். இதன் உறுப்பினர்கள் பேரவைத் தலைவரால் பேரவையின் உறுப்பினர்களில் இருந்து நியமனம் செய்யப்பெறுவர்.

(2) குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் முடிவு பெறும். எக்காரணத்தினாலேனும் அதற்கு நியமனம் நடைபெறவில்லை எனில் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பெறும்வரை, அக்குழுவில் இருந்து கொண்டிருக்கும் உறுப்பினர்களே தொடர்ந்து பதவி வகிப்பார்கள்.

*குழுவின் தலைவர்*

249. (1) குழுவின் தலைவர் பேரவைத் தலைவரால் நியமனம் செய்யப்பெற வேண்டும்.

(2) குழுத் தலைவர் வராதபோது, குழுவினால் தேர்ந்தெடுக்கப்பெறும், குழு உறுப்பினர்களில் ஒருவர் தலைமை வகிக்க வேண்டும்.

*குறைவெண்*

250. குழுக்கூட்டம் முறையாக இயங்குவதற்கு குழுத் தலைவர் அல்லது குழுக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும் உறுப்பினர் உட்பட குறைந்தது நால்வர் இருத்தல் வேண்டும்.

*குழுவின் அறிக்கை*

251. குழு தனது அறிக்கையை பேரவைக்கு குறைந்தது 6 மாதங்களுக்கு ஒரு முறையாவது அளிக்க வேண்டும்.

*குழு பின்பற்ற வேண்டிய நடைமுறை.*

252. மேற்கூறப்பட்டவை தவிர பேரவையின் ஒரு ஆய்வுக் குழுவிற்குப் பொருந்தும் விதிகள் இதற்கும் பொருந்தும்.

## 8. அவைக் குழு

*குழுவின் அமைப்பும் பணிகளும்*

253. (1) பேரவை உறுப்பினர்களின் சௌகரியங்கள், வசதிகள் சம்பந்தமாக எல்லாப் பிரச்சினைகளையும் ஆராய்ந்து ஆலோசனை கூறுவதற்காக அவைக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும். இக்குழுவிற்கு 18 உறுப்பினர்கள் பேரவைத் தலைவரால் அவரது உசிதப்படி நியமனம் செய்யப்பெற வேண்டும்.

குழு உறுப்பினர்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் இல்லத்தில் வழக்கமாக தங்கும் உறுப்பினரை குழுவின் தலைவராக பேரவைத் தலைவர் நியமனம் செய்ய வேண்டும். அவ்வாறு நியமிக்கப்பட்ட உறுப்பினர் கூட்டங்களுக்குத் தலைமை வகிக்க வேண்டும். அவர் வராதபோது குழுவினால் தேர்ந்தெடுக்கப்பெறும் குழு உறுப்பினர்களில் ஒருவர் தலைமை வகிக்க வேண்டும்.

(2) அவ்வாறு நியமனம் செய்யப்பெற்ற இக்குழுவின் உறுப்பினர்களின் பதவிக்காலம் ஒவ்வொரு நிதியாண்டின்



இறுதிவரை இருக்கும். ஆனால் எந்த உறுப்பினரும் மறு நியமனத்திற்கு தகுதி உள்ளவர் ஆவார். நடப்பு நிதியாண்டின் இறுதிக்குள் வரும் நிதியாண்டிற்கான குழுவை அமைப்பதற்கு புதிதாக நியமனம் நடைபெறவேண்டும். எக்காரணத்தினாலேனும் அவ்வாறு நியமனம் செய்யப்பெறவில்லை எனில் புதிய உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பெறும்வரை அக்குழுவில் இருந்துகொண்டு இருக்கும் உறுப்பினர்களே தொடர்ந்து பதவி வகிப்பார்கள்.

(3) இக்குழுவில் தற்செயலாக ஏற்படும் வெற்றிடங்கள் அவை ஏற்பட்டவுடன் கூடிய விரைவில் நிரப்பப்பெற வேண்டும். அவ்வாறு நியமிக்கப்பெறும் உறுப்பினர் யாருடைய வெற்றிடத்தை நிரப்புவதற்காக நியமிக்கப்படுகிறாரோ அவரது பதவியின் எஞ்சிய காலத்திற்கு மட்டும் தான் பதவி வகிக்கலாம்.

*குறைவெண்.*

(4) குழுக் கூட்டம் முறையாக இயங்குவதற்கு குழுத் தலைவர் அல்லது குழுக் கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் உறுப்பினர் உட்பட குறைந்தது ஆறு பேர் இருத்தல் வேண்டும்.

*குழுக் கூட்டம்.*

254. இக்குழு, குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது கூட வேண்டும்.

## 9. பேரவை விதிகள் குழு

*பேரவை விதிகள் குழுவும் அதன் பணிகளும்.*

255. பேரவையின் நடைமுறைகள், அலுவல்கள் குறித்த பொருள்களை ஆய்வதற்கு 'பேரவை விதிகள் குழு' ஒன்று இருக்க வேண்டும். அக்குழு இவ்விதிகளில் தேவைப்பெறும் ஏதேனும் திருத்தங்கள் அல்லது சேர்க்கைகள் குறித்துப் பரிந்துரைக்கும்.

*குழுவின் அமைப்பு.*

256. (1) 'பேரவை விதிகள் குழு' பேரவைத் தலைவரால் நியமனம் செய்யப் பெற வேண்டும். அக்குழு, அதன் தலைவரை உள்ளிட்டு 17 உறுப்பினர்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். அலுவல் காரணமாக அக்குழுவின் தலைவராக பேரவைத் தலைவர் இருத்தல் வேண்டும்.

(2) உள்விதி (1) இன்கீழ் நியமனம் செய்யப்பெறுகிற இக்குழு ஓராண்டுக் காலத்திற்குப் பதவி வகிக்கும்; அல்லது புதிய குழு நியமனம் செய்யப்பெறும்வரை பதவி வகிக்கும்.

(3) எக்காரணத்தினாலாவது, குழுவின் எந்தக் கூட்டத்திற்கேனும், பேரவைத் தலைவர் தலைமை வகிக்க இயலாவிடின் அக்கூட்டத்திற்கான தலைவரைப் பேரவைத் தலைவர் நியமிக்க வேண்டும்.

(4) இக்குழுவில் தற்செயலாக ஏற்படும் வெற்றிடங்கள் பேரவைத் தலைவரால் நிரப்பப்பெறும். அவ்வாறு நிரப்பப் பெறுவதற்காக நியமிக்கப்பெறும் உறுப்பினர் எவரும் யாருடைய வெற்றிடத்தை நிரப்ப நியமனம் பெறுகிறாரோ உள்விதி (2)-இன்படி அவரது பதவியின் எஞ்சிய காலத்திற்குப் பதவி வகிக்கலாம்.

குறைவெண்.

257. குழுக்கூட்டம் முறையாக இயங்குவதற்கு குழுத் தலைவர் அல்லது குழுக் கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் உறுப்பினர் உட்பட குறைந்தது ஐவர் இருத்தல் வேண்டும்.

விதிகளைத் திருத்து வதற்கான முன்னறிவிப்பு.

258. (1) இவ்விதிகளுக்கு திருத்தம் எதனையும் மொழிய விரும்பும் எந்த உறுப்பினரும் அதற்கான முன்னறிவிப்பை அத்திருத்தங்களின் வரைவோடும், விளக்கக் குறிப்போடும் (Explanatory Note) கொடுக்க வேண்டும்.

(2) செயலாளர், அந்தத் திருத்தங்களை, உறுப்பினரின் விளக்கக் குறிப்பு ஏதேனும் இருப்பின், அதனுடன் குழுவின் ஆய்விற்கும், பரிந்துரைக்கும் வைக்க வேண்டும்.

அறிக்கையை அவை முன் வைத்தல்

259. (1) குழுவின் பரிந்துரைகள் பேரவையின் மேசை மீது வைக்கப்பெற வேண்டும்; இத்தகைய பரிந்துரைக்கு அது பேரவை முன் வைக்கப்பெற்ற நாளில் இருந்து ஏழு நாட்களுக்குள்ளாக உறுப்பினர் எவரேனும் திருத்தம் எதற்கும் முன்னறிவிப்பு கொடுக்கலாம்.

(2) குழுவின் பரிந்துரைக்கு ஓர் உறுப்பினரால், ஏதேனும் திருத்த முன்னறிவிப்புக் கொடுக்கப்பெறின், அது குழுவிற்கு அனுப்பி வைக்கப்பெறும். அக்குழு அதனை ஆய்ந்து, குழுவின் பரிந்துரையில் ஏதேனும் மாற்றம் வேண்டுமெனக் கருதினால் அத்தகைய மாற்றங்களைச் செய்யலாம். உறுப்பினர்களால் கொடுக்கப்பெற்ற திருத்தங்களை ஆய்ந்த பின், குழுவினால் அறிவிக்கப்பெறுகிற இறுதி அறிக்கை பேரவையின் மேசை மீது வைக்கப்பெற வேண்டும். அதன்பின் குழுவின் உறுப்பினர் ஒருவரால் மொழியப் பெறும் தீர்மானத்தின் மீது அந்த அறிக்கையை பேரவை ஏற்றபின், பேரவையால் விதிகளுக்கு



ஏற்றுக்கொள்ளபெற்ற திருத்தங்கள், பேரவைத் தலைவரால் அரசிதழில் அல்லது தகவல் தாளில் பிரகடனம் செய்யப்பெறும்.

(3) திருத்தங்களுக்கான முன்னறிவிப்பு எதுவும் 7 நாட்களுக்குள் கொடுக்கப்பெறாவிடின், குழுவின் பரிந்துரைகள் பேரவையால் ஏற்றுக் கொள்ளப்பெற்றதாகக் கருதப் பெறும்; முன்னறிவிப்புக்கு குறிப்பிடப்பெற்ற காலம் முடிவுற்றபின், குழுவினால் விதிகளுக்கு பரிந்துரைக்கப்பெற்ற திருத்தங்கள் பேரவைத் தலைவரால் அரசிதழில் அல்லது தகவல் தாளில் பிரகடனம் செய்யப்பெறும்.

(4) குழுவின் இறுதி அறிக்கைக்கு ஏதேனும் திருத்த முன்னறிவிப்புக் கொடுக்கப்பெற்றால் பேரவையினால் வேறு விதமாகத் தீர்மானிக்கப்பெற்றால் அன்றி, குழுவிற்கு மறுமுறையும் அத்திருத்தங்கள் அனுப்பப் பெறமாட்டா. எனினும், குழுவின் இறுதி அறிக்கையை பேரவை ஆயும்போதே, இத்திருத்தங்கள் பற்றியும் முடிவு செய்யப்பெறும்.

(5) வேறு விதமாகக் குறிக்கப்பெற்றிருந்தாலன்றி விதிகளுக்கான திருத்தங்கள் அரசிதழிலோ, தகவல் தாளிலோ வெளியிடப்பெற்ற நாளில் இருந்து நடைமுறைக்கு வரும்.

குழு பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்

260. மேற்கூறப்பட்டவை தவிர, பேரவையின் ஒரு ஆய்வுக் குழுவிற்குப் பொருந்தும் விதிகள் இதற்கும் பொருந்தும்.

## 10. மனுக்கள் குழு

குழுவின் அமைப்பு

261. (1) பதினொன்றுக்கு மேற்படாத உறுப்பினர்கள் கொண்ட மனுக்கள் குழு ஒன்று பேரவைத் தலைவரால் நியமிக்கப்படும். எனினும், அமைச்சர் எவரும் இக்குழுவின் உறுப்பினராக நியமிக்கப்படலாகாது. ஓர் உறுப்பினர் குழுவில் நியமிக்கப்பட்டபின் அமைச்சராக நியமிக்கப்பட்டால் அவ்வாறு நியமிக்கப்பட்ட நாளிலிருந்து அவர் குழுவின் உறுப்பினர் பதவியிலிருக்கலாகாது.

(2) குழுவின் உறுப்பினர்களிலிருந்தே குழுவின் தலைவர் நியமனம் செய்யப்பெற வேண்டும். அவ்வாறு நியமனம் செய்யப்பெற்றவர் குழுக் கூட்டங்களுக்குத் தலைமை வகிக்க வேண்டும். அவர் வராதபோது குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பெறும் குழு உறுப்பினர்களில் ஒருவர் தலைமை வகிக்க வேண்டும்.

(3) இக்குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் ஓர் நிதி ஆண்டுக்கு மேற்படலாகாது. ஒரு நடப்பு நிதி ஆண்டு முடிவதற்குள் வரும் நிதி ஆண்டிற்கு ஒரு குழுவை அமைப்பதற்குப் புதிதாக நியமனம் செய்யப்பெற வேண்டும். எக்காரணத்தினாலேனும் அவ்வாறு நியமனம் செய்யப்பெறவில்லையெனில், புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பெறும்வரை அக்குழுவில் இருக்கும் உறுப்பினர்களே தொடர்ந்து பதவி வகிப்பார்கள்.

குறைவெண்

(4) குழுக் கூட்டம் முறையாக இயங்குவதற்கு குழுத் தலைவர் அல்லது குழுக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும் உறுப்பினர் உட்பட குறைந்தது நால்வர் இருத்தல் வேண்டும்.

குழுவின் பணிகள்

262. (1) பேரவைத் தலைவராலோ அல்லது அவையினாலோ குழுவிற்கு அனுப்பப்பெற்ற ஒவ்வொரு மனுவினையும் குழு ஆய்வு செய்யும்.

(2) மனு ஒன்று இவ்விதிகளுக்கு உட்பட்டு இருப்பின், பேரவை முன் ஆய்விலுள்ள சட்ட முன்வடிவை குறித்து இருந்தாலும் அல்லது வேறு பொருள் பற்றி இருந்தாலும் அதனை பேரவை உறுப்பினர்களுக்கு சுற்றனுப்ப குழுப் பணிக்கலாம். மேலும், பேரவைத் தலைவர் அவர்கள் எந்த நேரத்திலும் மனு ஒன்றினைச் சுற்றனுப்பக் கட்டளையிடலாம். குழு அல்லது பேரவைத் தலைவர் ஆணைக்கேற்ப மனுக்களை முழுமையாகவோ அல்லது அவற்றின் சுருக்கத்தையோ சுற்றனுப்பலாம்.

(3) ஒரு மனுவில் குறிப்பிட்ட முறையீடு குறித்து குழு, தேவை எனக் கருதப்படும் சாட்சியங்களை விசாரித்து, ஆய்விலுள்ள முறையீட்டின் மீது திட்டவட்டமான ஒரு தீர்வு காணும் வகையிலோ அன்றி எதிர் காலத்தில் அம்மாதிரி நிகழ்வதைத் தடுக்கும் வகையில் பொதுவான நிவாரணம் அமையும் வகையிலோ தனது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்க வேண்டும்.

(4) குழுவிற்கு நேரிடையாக கிடைக்கப்பெறும் முறையீடுகள், கடிதங்கள் மற்றும் தந்திகளை குழு ஆய்விற்கு எடுத்துக் கொள்ளலாம். மேலும், அவைகளுக்குத் தீர்வு காணும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பரிந்துரைக்கலாம்.



மனுக்கள் பேரவைத் தலைவருக்கோ அல்லது குழுவிற்கோ முகவரியிட்டும் அவற்றின் வடிவும் உட்பொருளும் விதி 276-கேற்பவும் இருக்க வேண்டும். மேலும் தனிப்பட்ட நபருடைய அல்லது தனியார் குறைகளைப் பற்றியதாக இருத்தல் கூடாது.

குழு பின்பற்ற வேண்டிய நடைமுறை.

263. மேற்கூறப்பட்டவை தவிர, பேரவையின் ஒரு ஆய்வுக் குழுவிற்குப் பொருந்தும் விதிகள் இதற்கும் பொருந்தும்.

## 11. பேரவை நூலகக் குழு

குழுவின் அமைப்பு

264. (1) பேரவைத் தலைவரால் நியமனம் செய்யப்பெற்ற பத்துக்கு மேற்படாத உறுப்பினர்கள் கொண்ட நூலகக் குழு ஒன்று அமைக்கப்பெறும்.

(2) இக்குழு உறுப்பினர்களின் பதவிக் காலம் ஒரு நிதி ஆண்டுக்கு மேற்படாது இருக்கும். ஒரு நடப்பு நிதி ஆண்டு முடிவதற்குள் வரும் நிதி ஆண்டிற்கான குழு ஒன்றினை அமைப்பதற்குப் புதிதாக நியமனம் செய்யப்பெற வேண்டும். எக்காரணத்தினாலேனும் அவ்வாறு நியமனம் செய்யப்பெறவில்லையெனில், புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பெறும் வரை அக்குழுவில் இருந்துகொண்டிருக்கும் உறுப்பினர்களே தொடர்ந்து பதவி வகிப்பார்கள்.

(3) குழுவின் உறுப்பினர்களிலிருந்து குழுவின் தலைவர் பேரவைத் தலைவரால் நியமனம் செய்யப்பெற வேண்டும். அவ்வாறு நியமனம் செய்யப்பெற்றவர் குழுக் கூட்டங்களுக்குத் தலைமை வகிக்க வேண்டும். அவர் வராதபோது குழுவினால் தேர்ந்தெடுக்கப்பெறும் ஓர் உறுப்பினர் குழுக் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார்.

(4) சட்டமன்றப் பேரவையின் செயலாளர் இக்குழுவின் செயலாளராக இருப்பார்.

(5) குழுவில் தற்செயலாக ஏற்படும் வெற்றிடங்கள் பேரவைத் தலைவரால் நியமனம் செய்யப்பெற்று நிரப்பப்பெறும்.

குறைவெண்

(6) குழுக் கூட்டம் முறையாக இயங்குவதற்கு குழுத் தலைவர் அல்லது குழுக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும் உறுப்பினர் உட்பட குறைந்தது மூவர் இருத்தல் வேண்டும்.

குழுவின் பணிகள்.

265. பேரவையின் நூலகம், நூலக உறுப்பினர்களுக்கான உதவிப் பணிகளைப் பொறுத்த கொள்கை முடிவுகள், அவைகளின் வளர்ச்சி விரிவாக்க ஆலோசனைகள் ஆகியவற்றை ஆய்வு செய்து குழு முடிவு செய்யும்.

குழுவின் கூட்டங்கள்.

*266.* குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையும் தேவைப்பட்டபோதும் குழுவின் கூட்டத்தைக் கூட்டலாம்.

மற்றவைகளுக்கும் பொருந்தக் கூடிய வழிவகைகள்.

*267.* ஆய்வுக் குழுவிற்குப் பொருந்தும் பொது விதிகள் மற்றவைகளில் இக்குழுவிற்கும் பொருந்தும். அவ்வாறு மேற்கொள்ளப்படும்போது பேரவைத் தலைவர் தேவை அல்லது பொருத்தம் என்று கருதுபவைகளை தேவைக்கேற்ப திருத்தியோ, மாற்றியோ அல்லது நீக்கியோ இக்குழுவிற்குப் பொருந்துமாறு அமைக்கலாம்.

## 12. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

குழுவின் அமைப்பு

*268.* (i) பதினொன்றுக்கு மேற்படாத உறுப்பினர்கள் கொண்ட பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு ஒன்று அமைக்கப் பெறும்.

குழுவின் தலைவர்.

(ii) குழுவின் உறுப்பினர்களிலிருந்தே குழுவின் தலைவர் நியமனம் செய்யப்பெற வேண்டும். அவ்வாறு நியமனம் செய்யப்பெற்றவர் குழுக் கூட்டங்களுக்குத் தலைமை வகிக்க வேண்டும். அவர் வராதபோது குழுவினால் தேர்ந்தெடுக்கப்பெறும் ஓர் உறுப்பினர் குழுக் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார்.

(iii) குழு, பேரவைத் தலைவரால் நியமனம் செய்யப்பெற வேண்டும். இக்குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் ஒரு நிதி ஆண்டுக்கு மேற்படக்கூடாது.

(iv) ஒரு நடப்பு நிதி ஆண்டு இறுதிக்குள் தொடர்ந்து வரும் நிதி ஆண்டிற்கான குழுவை அமைப்பதற்குப் புதிதாக நியமனம் நடைபெற வேண்டும். எக்காரணத்தினாலேனும் அவ்வாறு நியமனம் நடைபெறவில்லை எனில் புதிய குழு அமைக்கப்பெறும்வரை ஏற்கெனவே குழுவில் இருக்கும் உறுப்பினர்களே தொடர்ந்து பதவி வகிப்பார்கள்.

குறைவெண்

*269.* குழுக் கூட்டம் முறையாக இயங்குவதற்கு குழுத் தலைவர் அல்லது குழுக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும் உறுப்பினர் உட்பட குறைந்தது நால்வர் இருத்தல் வேண்டும்.



குழுவின் பணிகள்.

*270. (1)* குழுவின் பணிகளாவன:—

நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பெறும் சட்டப்படி அவை முன் வைக்கப்படும் எல்லா ஏடுகளையும் கீழ்க்கண்டவாறு ஆய்ந்து அறிக்கை அளிக்க வேண்டும்:—

*(அ)* சட்டம் அல்லது விதி அல்லது ஒழுங்கு விதி ஆகியவற்றிற்கிணங்க ஏடுகள் வைக்கப்பெற்றுள்ளதா?

*(ஆ* ஏடுகள் வைக்கப்பெறுவதில் தகுந்த காரணமில்லாமல் காலதாமதம் ஆகியுள்ளதா?

*(இ)* அம்மாதிரி காலதாமதம் ஆகியிருப்பின், அதற்கான காரணத்தை விளக்கும் வகையில் அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளதா? அக்காரணங்கள் ஒப்புக் கொள்ளக் கூடியனவா?

*(2)* அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குறித்து பேரவைத் தலைவரால் அவ்வப்போது ஒதுக்கப் பெறும் பணிகளையும் குழு மேற்கொள்ளும்.

குழுவின் பணி வரம்புகள்.

*271.* சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் வரம்பு எல்லைக்குட்பட்ட பொருள்களுக்கு விதி 270 (2)-இல் கூறப்பட்டுள்ள விதிமுறைகள் பொருந்தாது.

குழு பின்பற்ற வேண்டிய நடைமுறை.

*272.* மேற்கூறப்பட்டவை தவிர பேரவையின் ஒரு ஆய்வுக் குழுவிற்கு பொருந்தும் விதிகள் இதற்கும் பொருந்தும்.

## அத்தியாயம் 21

### ஆளுநர் பேரவை இடையே செய்தித் தொடர்பு

ஆளுநரிடமிருந்து பேரவைக்கு வரும் செய்திகள்.

*273.* பேரவைக்கு ஆளுநரிடம் இருந்து வரும் செய்திகள்

*(1)* உரையின் மூலமாகவோ அல்லது

*(2)* பேரவைத் தலைவருக்கு எழுத்து மூலமாக அனுப்பப் பெறும் செய்தியாகவோ கிடைக்கப்பெறும்.

ஆளுநரிடமிருந்து செய்தி.

*274.* அரசமைப்புச் சட்டத்தின் 175-வது பிரிவின் உட்பிரிவு (2)-இன் கீழ், ஆளுநரிடம் இருந்து பேரவைக்கான ஒரு செய்தி, பேரவைத் தலைவருக்குவரின், பேரவைத் தலைவர் அச்செய்தியை பேரவையில் படித்துக் காட்ட வேண்டும். மேலும், அச்செய்தியில் கண்டுள்ளவற்றை நிறைவேற்றும் முகத்தான் அதில் குறிப்பிடப்பெற்றுள்ள பொருள்களின் ஆய்வுக்காக பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து அவசியமான பணிமுறைகள் (Directions) கொடுத்தல் வேண்டும். அவ்வாறு இந்தப் பணிமுறைகளை கொடுக்கும்போது பேரவைத் தலைவருக்கு, அவசியமான அளவுக்கு விதிகளைத் தற்காலிகமாக நிறுத்திவைக்கவோ அல்லது விதிகளில் இருந்து மாறுபடவோ அதிகாரம் உண்டு.

பேரவையிலிருந்து ஆளுநருக்கு அனுப்பப் பெறும் செய்திகள்.

*275.* பேரவையில் இருந்து ஆளுநருக்கு அனுப்பப்பெறும் செய்திகள், இதற்கென தனியே பேரவையில் கொண்டுவரப்பெறும் தீர்மானம் நிறைவேறிய பின், பேரவைத் தலைவரால் ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பெற வேண்டும்.



## அத்தியாயம் 22

### பேரவைக்கு கொடுக்கப்பெறும் மனுக்கள்

மனுக்களின் வடிவமும் உட் பொருளும்.

*276. (1)* பேரவைக்கு கொடுக்கப்பெறும் மனுக்கள்—

*(அ)* பேரவையின் உறுப்பினர்களுக்கு முகவரியிட்டதாக இருத்தல் வேண்டும்.

*(ஆ)* மனுதாரர் அல்லது மனுதாரர்களால் தேதி குறிக்கப் பெற்று கையொப்பம் இடப்பெற்று இருத்தல் வேண்டும்.

*(இ)* மரியாதையுள்ள அடக்கமான வாசகத்தில் இருத்தல் வேண்டும்.

*(ஈ)* பேரவையின் 130-வது விதியின் கீழ் வெளியிடப்பெற்ற அல்லது பேரவையில் அறிமுகம் செய்யப்பெற்ற சட்டமுன்வடிவு ஒன்றுக்குத் தொடர்புடையதாக இருத்தல் வேண்டும்.

*(உ)* பேரவைமுன் நிலுவையில் இருக்கும் அலுவல்கள் குறித்த பொருள் எதற்கேனும் தொடர்புடையதாக இருத்தல் வேண்டும்.

*(ஊ)* பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள் எதையேனும் குறித்து இருத்தல் வேண்டும். எனினும் அது கீழ்க்கண்டவற்றில் அடங்கிய ஒன்றாக இருத்தல் கூடாது:

(i) இந்தியாவின் எப்பகுதியிலும் உள்ள நீதிமன்றத்தின் வரம்புக்குள் அல்லது விசாரணை மன்றத்தின் அல்லது சட்டப்படி அமைக்கப்பெற்ற நீதிமன்றம் அல்லது ஆணைக்குழு அல்லது விசாரணைக் குழு ஆகியவற்றின் ஆய்வில் உள்ள ஒன்று;

(ii) சாதாரணமாக பாராளுமன்றத்தில் எழுப்பப்பெற வேண்டிய ஒன்று;

(iii) நிலையான தீர்மானம் (substantive motion) அல்லது தனித் தீர்மானம் ஒன்றினால் எழுப்பப்பெற வேண்டிய ஒன்று;

(iv) தமிழக அரசினால் இயற்றப்பெற்றுள்ள விதிகள், ஒழுங்கு விதிகள், துணை விதிகள் உட்பட சட்டத்தின் கீழ் தீர்வு காணக்கூடிய ஒன்று அல்லது இத்தகைய விதிகள், ஒழுங்கு விதிகள் ஆகியவற்றை இயற்ற அதிகாரம் ஒப்படைவு பெற்றுள்ள அமைப்பினால் தீர்வு காணக்கூடிய ஒன்று;

(v) மாநில அல்லது மைய அரசு அலுவலகங்களின் குறைகளை வெளிப்படுத்தித் தீர்வு கோரும் கோரிக்கைகள் அடங்கிய ஒன்று.

(எ) பேரவையின் அதிகார வரம்பிற்குள் அடங்கிய பொருள்களுக்குத் தொடர்புடையதாக இருத்தல் வேண்டும்.

(ஏ) பொதுப் பணத்தில் இருந்து செலவழிக்க மொழிவதாகவோ அல்லது பொது வருவாயிலிருந்து செலவைச் சாட்டுவதாகவோ இருத்தல் கூடாது.

(2) எந்த மனுவோடும் கடிதங்களோ அல்லது பிரமாண வாக்கு மூலமோ அல்லது வேறு ஆவணங்களோ இணைக்கப்பெறக் கூடாது.

மனுக்களின் மேல் கையொப்பம்

